
www.tamilarangam.net

# எக்ஸில்

Exil 4

NOVEMBER - DECEMBER, 1998



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# விழுப்புண்கள்

பனிப்புயலில் தனித்தலையும்
பறவையின் ஓலமொன்றில்
நான் கரைந்துபோகிறேன்.

அது என்னுள் அதிர்கிறது
சிறு இலக்கியமொன்றின்
செறிவினைப் போல.

கவிதையின்
சாயலில்,
தாய்மையின்
துயரில்,
ஆக்ரோஷப் பார்வையில்,
மனநோயாளியை
பார்க்கின்ற பரிவில்,
மனிதமலத்தை
மிதித்துவிட்ட அருவருப்பில்,
சில சமயம்
போர்ப்பறையின் சன்னதத்தில்.

எப்படிச் சொல்ல...?
என் வார்த்தைகளில்
அடங்கிப்போக மறுக்கிறது.
நாளையொருகால்
உன் செவியிலும் அதிரல் கூடும்
உணர்வுகளைத் தீட்டிக்கொள்.
முடிந்தால்
உன் அயலவனுக்கும் சொல்.
□
கடல்மீது நிலவு காய்கிறது
துருவமெங்கும் பனிசொரிகிறது
சுதந்திரம் கண்முன் விரிந்து கிடக்கிறது
சந்தனம் மெத்தியதில்
அடுத்தவன் புட்டத்தை தேடி
அலையும் மனிதர்கள்.
சாதனைப் பட்டியல் படித்து
மகிழும் போதிலெல்லாம்
தனிமனிதப்பலகீனம் என்று
தள்ளிவைக்க முடியவில்லை.
என் சமூகம் மீதில்
சீழ் நாறுவதாக உணர்கிறேன்.

என் வயிறு குமட்டுகிறது.
விலாசந்தேடும் முகங்களை
செய்தித்தாள்களில் காணும்
போதிலெல்லாம்
கருங்கல்லில்
காகம் எச்சமிட்ட இலட்சணத்தின்
அருவருப்பில் துடிக்கிறேன்.
□
கூடுகட்ட
இடம் கிடைத்துவிட்டதென்பதற்காய்
நான் வித்துக்களை விதைக்க
சித்தமாயில்லை.
வேண்டுமாயின்
களி கொள்ளலாம்.
கலவியும் கொள்ளலாம்.
முட்டையிடுவது பற்றி முடிவெடுக்குமுன்
குஞ்சுகளின் எதிர்காலம் பற்றி
சிந்திக்க
அவகாசங்கொடு.

திருமாவளவன்

www.tamilarangam.net

# எக்ஸில்


Exil 4

Vol. I No.4
NOVEMBER, DECEMBER 1998






- விழுப்புண்கள்
  திருமாவளவன் ........ 2
- கவனி ........ 4
- ஒருபுறம் பார்ப்பின் யாழ்ப்பாணீயக் குதிரை
  மறுபுறம் பார்ப்பின் சனாதனக் குதிரை
  உன்னித்துப்பார்ப்பின்...? - அமுகமன் ........ 10
- கவிதை - இரா. சுதாசீலன் ........ 13
- இடம் தரும் பொருள் - அர்விந் ........ 14
- சந்திப்பு
  பொன்னையா விவேகானந்தன் ........ 16
- மீறல்கள் - என். கே. மகாலிங்கம் ........ 17
- ஒரு இலக்கியக்காரனின்
  'கென்டயினர்' பயணம் - மானுடபுத்ரன் ........ 19
- சாதீயம் - சில சிந்தனைகள்
  பி. நடராசன் ........ 23
- ஓவியம் - SUBHA DE ........ 24
- பெரியாரியம் - ரதன் ........ 25
- கரடியுடன் பொருதுதல் - காருண்யன் ........ 29
- திரைப்படப்பார்வையாளர்களும்
  அடையாளப்படுத்திக்கொள்ளுதலும்:
  எஸ். வி. ரஃபேல் ........ 30
- சிங்காரவனம் - எம்.ஆர். ஸ்ராலின் ........ 35
- கண்ணாடி வார்ப்புகள் - சேரன் ........ 36
- அவலங்களின் சாட்சிகள்
  இளைய அப்துல்லாஹ் ........ 37
- பெண்ணியமும் கவிதையும் - சேரன் ........ 38
- வறுக்க வறுக்க மணக்கும் பூச்சி
  சோலைக்கிளி ........ 40
- பிறவிப்பெரும்பயனின் பரிகாசம்
  சேனன் ........ 41
- அவிழ்த்துப் போட்ட ஆடைகளும்
  கொஞ்சம் கவிதைகளும் - சக்கரவர்த்தி ........ 44
- நினைவுக்கல்வெட்டு - ஷோபாசக்தி ........ 45
- மனத்தடங்கல்... - சிவலிங்கம் சிவபாலன் ........ 53
- பாரிஸ் நிகழ்வுகளிலிருந்து
  கலைவண்ணம் - 98
  எம். ஆர். ஸ்ராலின் ........ 57
- ஓவியம் - KAVITA SHAH ........ 59
- கவிதை - கற்சுறா ........ 60



சந்தா விபரம்:
பிரதி ஒன்று - 15FF
வருட சந்தா - 100FF
(6 பிரதிகள், தபாற் செலவு உட்பட)

இலங்கை, இந்தியா -இலவசம்

காசோலைகள் அனுப்பவேண்டிய
வங்கியும், இலக்கமும்
CREDIT LYONNAIS
Association EXIL, 0554 / 6772 L 19



தொடர்புகளுக்கு:
EXIL
chez R. INPAVALLI
94 Rue de Lachapelle,
75018 PARIS
FRANCE


N° d'enreg. : 13022670



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கவனி

எக்ஸில் வாசகர்கட்கு!

எக்ஸிலுக்கு நீங்கள் எழுதும் கடிதங்களில் விமர்சனப் போக்குடைய கடிதங்களுக்கு மாத்திரமே 'கவனி' பகுதியில் முன்னுரிமை கொடுக்கப்படும். வாசகர்கள் கடிதங்களைத் தனியாகவும் விமர்சனங்களைத் தனியாகவும் பிரித்தெழுவதோடு விமர்சனங்களிற்கு 'கவனி' பகுதிக்குரியது என தலைப்பிட்டு அனுப்புவது எங்களிற்கு உதவியாக அமையும் என்பதை அறியத் தருகிறோம்.



ஆசிரியர்
எக்ஸில், பாரிஸ்
அன்புடையீர்,

தங்கள் சஞ்சிகைபற்றி சரிநிகர் இதழின்மூலம் அறிந்துகொண்டேன். தமிழ்ப்பரப்பில் அக்கறை கொண்டவன். தமிழில் வெளிவரும் சிறுசஞ்சிகைகள், புலம்பெயர் சஞ்சிகைகள், வெளியீடுகளையும் சேர்த்து வருகின்றேன். என் தொகுப்புகளில் உங்கள் சஞ்சிகையும் இடம்பெறவேண்டுமென விரும்புகின்றேன். ஒரு பிரதி அனுப்பி உதவ முடியுமா? ஓசை, அம்மா போன்றவற்றில் என் கட்டுரைகள் வந்துள்ளன.

அன்புடன்
அ. குலசிங்கம்
பருத்தித்துறை, இலங்கை

+++

எக்ஸில்,

தாங்கள் அனுப்பிய 'எக்ஸில்' முதலிதழ் பெற்றேன். நன்றி. தமிழ் கூறும் நல்லுலக இலக்கியம், ஈழத்துத் தமிழிலக்கியம், மகாசன இலக்கியம் ஆகியவற்றில் ஈடுபாடுடைய யான் லண்டன் - 'லண்டன் முரசு', அவுஸ்திரேலியா - 'மரபு', 'தமிழ் உலகம்', பிரான்சு - 'ஓசை' ஆகிய இதழ்களைப் பெற்றுப் பாதுகாத்து வைத்திருந்தேன். இன்று இழந்து விட்டேன். இந்நிலையில் 'எக்ஸில்' கிடைத்தது குறித்து மகிழ்ந்தேன். ஆனால் இதை அனுப்பக் காரணமாக இருந்த அன்பர் யாரென அறியும் வாய்ப்பில்லை. இதனைத் தொடர்ந்து பெற விரும்புகிறேன். இதன் பெறுமதியை ஈழத்திற் செலுத்தக்கூடிய ஒரு முகவரியை எழுதினால் பணத்தை அனுப்ப வசதியாகும்.

'ஏழை எளியவன் தாழ்ந்த சாதியான்', 'அச்சமே கீழ்களது ஆசாரம்' என்ற சைவத் தமிழ்த் தத்துவங்களிரண்டை இலக்கியமாகப் படைத்த இரு சிறுகதைகளும் மண்வாசனைமிக்க ஈழத்து இலக்கியங்கள். சக்கரவர்த்தியின் இரு பிரதேச மொழியாற்றல் உயிர்ப்பு மிக்கது. புகலிட இலக்கியங்கள் அங்கீகாரம் பெறுவதற்கு அவற்றைப் பெறுவதிலுள்ள சிக்கல்களே முக்கிய காரணம். அவைபற்றிய செய்திகள், விமர்சனங்கள், ஆய்வுரைகள் இடையீடின்றித் தொடரவேண்டும்.

"யாதுமூரே யாவரும் கேளிர்". "எங்கெழில் என் ஞாயிறு எமக்கு"

நன்றி. வணக்கம்.
பி. நடராசன்
இலங்கை.

+++

"பெரிதினும் பெரிது கேள், புதியன விரும்பு" -பாரதி

மதிப்பிற்குரியீர்!

வணக்கம். தாங்கள் அனுப்பிய 'எக்ஸில்' சஞ்சிகை எனக்கு 27.08.98 அன்று கிடைத்தது. என் அன்பார்ந்த நன்றிகள்.

இனி சஞ்சிகைபற்றி சில வரிகள்...

சேரனின் கவிதை உள்ளுக்குள் கேட்டுக்கொண்டே இருக்கின்றது. 'ஆந்ரேஜீத்' அறிமுகக் கட்டுரை நன்றாக இருந்தது. இதனைப்போன்று (தொடர்ந்து) உலக இலக்கியவாதிகளின் அறிமுகம் தொடர்ந்தால் பயனுடையதாக இருக்கும். 'அலுக்கு' கதை இன்றைய நிஜத்தைக் காட்டியது. 'கண்ணோடு காண்பதெல்லாம் தலைவா' விமர்சனம் சிந்தனைக்குரியது. காதோடு கேட்பதை எல்லாம் தலைவி கேள்விகேட்க ஆரம்பித்தால் நிலைமை நிச்சயம் மாறும். அன்றிலிருந்து இன்றுவரை பெண்ணின் முடிக்குக் கொடுக்கும் முக்கியத்துவம்கூட மூளைக்குக் கொடுக்கவில்லை என்பது வேதனைக்குரிய விஷயம்தான். 99% ஆண்களும் பல பெண்களும்கூட பெண்ணை அழகியல், அன்பியல் நோக்கில்தான் பார்க்கிறார்களே தவிர அறிவார்ந்தநிலையில் ஏனோ பார்ப்பதில்லை. கக்கக்கக்க கல்லூரிச்சாலை பாடலுக்கு முன்வரும் வரிகள்:

இன்பத்தை கருவாக்கினாள் பெண்
உலகில் மனிதனை உருவாக்கினாள் பெண்
(ஏன் மனுஷியை உருவாக்கவில்லையோ!)
விண்ணவருக்கும் மண்ணவருக்கும்
விலைமதிப்பற்ற செல்வம் பெண்

என்பதில் உடமையாக்கப்படுவதைக் காணலாம். மண்ணுலக ஆசாமிகள் மட்டுமல்ல விண்ணுலக சாமிகளும் பெண்ணிற்கு சதிசெய்தே வந்துள்ளனர். பெண்மைபற்றிய கருத்துருவாக்கம் இதுவரை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆண்களாலே தரப்பட்டுள்ளது மிகவும் வசதியாக அவர்களுக்கு இருந்துவிட்டது.

மூவாயிரம் ஆண்டுக்கால விலங்குகள் இப்போது தகர்க்கப்பட்டு வருகின்றன. நிச்சயம் காலம் மாறும் என்ற நம்பிக்கை உள்ளது. இல்லையெனில் ஆபாசத்தின் உச்சத்திற்குச் சென்று இவ்வுலகம் அழியுமேயொழிய மீண்டுமொருமுறை முந்தைய அடிமைநிலைக்கு ஆளாகமாட்டோம் என்பது மட்டும் நிதர்சனம். ஓவியங்கள் சில என்னறிவிற்குப் புரியவில்லை. மொத்தத்தில் 'எக்ஸில்' என் இலக்கிய பரப்பினை விரிவாக்க உதவுகிறது. அந்தவகையில் மிக்க மகிழ்ச்சி. இது போன்று வேறு சஞ்சிகை இருந்தால் அறிமுகப்படுத்தினால் நன்றாக இருக்கும். எக்ஸில் இங்குள்ள பலருக்கு மிகவும் பிடித்துள்ளது. நேரடியாக சிலர் எக்ஸிலுக்கு தொடர்பு கொள்வார்கள்.

நன்றி!

தோழமையுடன்

K. சந்தானலக்ஷ்மி

மதுரை, இந்தியா

✦✦✦

ஆசிரியர் எக்ஸில்!

தங்களின் மே-ஜூன் இதழ் கிடைக்கப்பெற்றேன். நன்றாக இருக்கிறது. நன்றி!

'எக்ஸில்' என்ற பெயரே மிக வித்தியாசமாக இருந்தது.

எக்ஸிலை எதிர்பார்த்தபடி

அன்புடன்

சோலைக்கிளி

கல்முனை, இலங்கை



ஆசிரியர் எக்ஸில்,

தங்களது இரண்டாவது எக்ஸிலில் எனது ஓவியத்தை பிரசுரித்தமைக்கு நன்றி. 'எக்ஸில்' ஒரு நல்ல ஆரம்பத்தின் அறிகுறி. உங்களது முயற்சிகள் வெற்றிபெற வாழ்த்துக்கள்.

இத்துடன் எனது ஓவியமொன்றினது பிரதியை இணைத்துள்ளேன். 'Rape' என்ற இந்த ஓவியம் 'கிரிஷாந்தி கொலை' சார்ந்த சூழலில் வரைந்தது. இங்கு ஓவிய கண்காட்சி நடத்துவது மிகச்சிரமம். அதனால் நான் இதுவரையிலும் கண்காட்சி ஒன்றையும் நடாத்தவில்லை. அத்துடன் எனது ஓவியத்தைப் பார்த்த சில சிங்கள நண்பர்கள் என்னுடன் கதைப்பதையே நிறுத்திவிட்டார்கள். சிங்கள புத்திஜீவிகள் தொடக்கம் சகல கலை இலக்கியவாதிகளுமே எமது கருத்துக்களையும் எமது வெளிப்பாடுகளையும் ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள்.

உங்களது சூழலில்தான் தமிழர்களது இன்னல்களையும் அவர்களது படைப்பாற்றலையும் முழுமையாக வெளிப்படுத்தலாம். முன்னர் ஒரு தடவை ஈழத்தமிழரது இலக்கியத் தொகுதி ஒன்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட நான் சில முயற்சிகள் எடுத்தேன். (Anthology). ஆயினும் கைகூடவில்லை. அண்மையில் லண்டனில் வெளிவந்த Anthology ஒரு சார்புநிலையினை வெளிப்படுத்துவதால் அதை இங்கு அறிமுகப்படுத்தமுடியாதுள்ளது.

உங்களது 'எக்ஸில்'இல் ஆங்கில மொழிபெயர்ப்புகளை (ஈழத்து சிறுகதை, கவிதை போன்றவற்றின்) அவ்வப்போது இயலுமானவிதத்தில் வெளியிட முயற்சி எடுத்தால் காலப்போக்கில் போதிய மொழிபெயர்ப்புகள் தேறும்பொழுது தொகுத்து வெளியிடுவது சுலபமாக இருக்கும்.

உங்களது முயற்சிகள் தொடரட்டும். இங்கிருந்து எமக்கு இயலுமான அனுசரணையை வழங்குவோம்.

நன்றி.

இப்படிக்கு

கொ.ரொ. கொன்ஸ்ரன்ரைன்

கொழும்பு, இலங்கை.

✦✦✦

ஆசிரியர் எக்ஸில்,

அன்புடையீர்,

தங்கள் எக்ஸில் இதழ்கள் இரண்டும் கிடைத்தன. அனுப்பியமைக்கு நன்றி. தேடலில் ஈடுபடும் படைப்பாளிகளுக்கும் வாசகர்களுக்கும் தங்கள் இதழ் பயன்மிக்கது. வாழ்த்துக்கள்.

இத்துடன் எனது நூல்களை தங்கள் பார்வைக்கு அனுப்புகிறேன். 'பாட்டி சொன்ன கதைகளை' எக்ஸில் விமர்சிக்க வேண்டும் என்பதும் எனது விருப்பம்.

பின்னர், எனது ஆக்கங்களையும் எக்ஸிலுக்கு அனுப்புவேன்.

அன்புடன்

லெ. முருகபூபதி

அவுஸ்திரேலியா

✦✦✦

Dear Exil Crew,

இரண்டு எக்ஸில்களும் கிடைத்தன. நன்றி.

விஷயங்கள் செறிவாயும், கனதியாயும், சீரியஸாயுமிருந்தன. முயற்சிக்குப் பாராட்டுக்கள். இது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொடரவேண்டும் என அவா.

பத்திரிகையின் மொழி தமிழ். வாசிக்கின்றவர் களும் அவர்களே. இருந்தும் அயல்மொழிப் பெயர் எதற்கு? காலங்காலமாகத் தமிழில் வழக்கத்தில் இருந்துவிட்ட ஒரு வடமொழி வார்த்தையாகவோ இல்லை இன்ன ஒரு பிறமொழி வார்த்தை என்றாலும் பரவாயில்லை. என்னதான் சமாதானம், நியாயப்ப டுத்தினாலும் பத்திரிகையின் பெயருடன் மனசு ஒன்ற மறுக்கிறது.

புதியவர்களுக்கு நிறைய இடம்கொடுத்து ஊக் குவியுங்கள்.

இப்படிக்கு தோழமையுடன்
**பொ. கருணாகரமூர்த்தி**
பெர்லின்

✦✦✦

அன்புள்ள ஆசிரியருக்கு,

இரண்டு இதழ்கள் EXIL கிடைத்தன. நன்றி. கட் டுரைகள் அருமையாக மிகுந்த தரத்துடன் அமைந் திருந்தன. கவிதைகள் மனதைத் தொட்டன. சிறுக தைகளை விரும்பிப் படித்தேன். அவை சுவையுட னும், கலைநயத்துடனும் அமைந்திருந்தன.

கலைக்கும் ஆபாசத்துக்கும் இடையே மிக மெல்லிய கோடுதான் இருக்கிறது. சிலவேளைக ளில் அந்தக்கோடு மறைந்து போய்விடுகிறது போல எனக்குப்பட்டது. மற்றும்படிக்கு உங்கள் முயற் சிக்கு என் வாழ்த்துக்கள்.

அன்புடன்
**அ. முத்துலிங்கம்**
நைரோபி.

✦✦✦

The Editor Exil,
வணக்கம்,

கல்முனை-
ஓர் இரண்டு மணி நேரப் பயணம்
விலாசம் தெரியாத ஒரு முகத்தின் -
கையில் பூத்திருந்தது 'எக்ஸில்'
கண்களுக்கு மணத்தது
அனுமதியோடு பறித்தேன்.
இதழ்களை விரித்தேன்.
தேன்.
சுவையாகத்தான் இருக்கும்
இதயம் தீர்ப்புக் கூறியது.
காரணம்
என்னால்
நுகர முடிந்தது
இரண்டாம் பூ (ஜூலை-ஆக. 1998)
பிரித்த இதழ்கள்
பன்னிரண்டு சொச்சம்-
"எட்டாமற் போனது எனது..."
கவிதை மட்டுமல்ல
ஆசையும் - பேராசை
எக்ஸிலை
முழுமையாய் விசாரிப்பதற்கு
மனித பரிசோதனை நிலையங்கள்
இடம் தரவில்லை.
மனசு
தேசத்தை நோக்கி
வேட்டுக்கள் தீர்த்தன.
ஞாபகம்
விலாசத்தை மட்டும்
செதுக்கிக் கொண்டது
மட்டக்களப்பு-
புன்சிரிப்பிடம் ஏக்கம்
எக்ஸிலை ஒப்படைத்த -
நன்றி
உதடுகள் உச்சரித்து இருக்கலாம்
எக்ஸில்
எனக்கும் கிடைக்குமா?

எதிர்பார்ப்புடன்
A.M.M. NAZEER
சாய்ந்தமருது, இலங்கை

✦✦✦

அன்புடையீர்,

எக்ஸில் பிரதிகள் இரண்டும் கிடைத்தன. பல வேறுபட்ட பார்வையுடையோரும் அதில் எழுதுவது பற்றி மகிழ்ச்சி.

என்னுடையநேரம் உள்ளூர் வேலைகட்கே போதியதாக இல்லை. எனவே உவ்விடத்து விவா தங்களுள் ஈடுபட நோக்கமில்லை. மாறுபட்ட கருத் துக்களாயினும் வெளிவெளியாக வருவது சிறப்பு.

பத்திரிகை சிறப்புடன் தொடர்ந்து வர எனது நல் வாழ்த்துக்கள்.

அன்புடன்
சிவசேகரம்
கொழும்பு, இலங்கை

✦✦✦

நட்புடன் 'எக்ஸில்' வெளியீட்டாளர்களுக்கு,
வணக்கம்.

எக்ஸிலின் ஆக்கங்கள் குறித்துச் சற்றுப் பேசு வோம்.

இம்முறையும் எக்ஸில் நல்ல தரமான ஆக்கங்க ளோடு வந்துள்ளது. குறிப்பாக இவ்விதழிலுள்ள இர ண்டு சிறுகதைகள் என்னை மிகவும் பாதித்துள் ளது. ஒன்று : சுரண்டலின் கொடுக்குகள் (இதற்கு இந்தப் பெயர் தேவையற்றது; சுரண்டல் என்பதை சுரண்டலென்றுதாம் கூறிச் செல்லணுமா?) மற்றது : அலுக்கு.

இரண்டு கதைகளுமே எனக்குள் அநுபவப்பட் டவை. எங்கள் வாழ்வின் மறுபக்கம் எப்பவுமே கண் ணீரில் கரையும் சூழல். கற்றனிலிருந்து ஒரு சிறிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெண்பிள்ளை (வயது 12 இருக்கும்) எங்கள் உறவினர் வீட்டுக்கு வேலைக்கு வந்தாள். கற்றனிலிருந்து சரவணை சின்னமடுவடிக்கு வந்தாள். வீட்டுவேலை, தோட்டவேலை செய்வாள். மிளகாய்த் தோட்டத்தில் மிளகாய் ஆய்வாள்... அவள் மல்லிகா. ரொம்பவும் சுறுசுறுப்பான சின்னத் தங்கை. அப்போது எனக்கு வயது 14. 8ம் பருவ பள்ளி மாணவன். அவள் கோவிலில் திருவிழா பார்க்க ஆசைப்படுவாள். தேர் பார்க்க கொள்ளை ஆசை. குஞ்சுப்பெட்டை. இருந்திருந்து பாட்டெல்லாம் அழகாய்ப்பாடுவாள். ஆனால், வேலை அவளைத் தன் ஆசைகளைப் பூர்த்தி செய்ய சிலவேளை விடுவதில்லை. இப்படி தேவாவின் பாத்திரம்போல். ஒரு நாள் (அப்போது அவளுக்கு 14 வயதாகிவிட்டிருந்தது) அவளது சீத்தைச் சட்டை - கத்தரிப்பூச்சட்டை குருதியால் தோய ஓடோடி வந்து அழுதாள். புகையிலைத் தோட்டத்துக்குள் வேலைசெய்த பெட்டை ஓடி வந்த கோலம் என்னை இப்பவும் கிலிகொள்ள வைக்கிறது. அவள் வயதுக்கு வந்ததாகச் சொல்லிக் கொண்டாள் எஜமானியம்மா. ஆனால் சிலமணி நேரத்தில் அது தப்பென்றாகியது! அவளுக்கு இரத்தம் கலந்த வயிற்றோட்டம். ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றார்கள். இரண்டு நாள், அவள் நான் அம்மாவோடு பார்க்கச் சென்றபோது புலம்பிக் கொண்டிருந்தாள். "புகையிலை தாங்க ஞானம் ஐயா! புகையிலை தாங்க ஞானம் ஐயா!" என்றாள்.

சற்று இடைவேளைவிட்டு உயிர் நீத்தாள். ஏன்?

விடை ஏதோ கொடிய தொற்றுநோயாம். 1978 இல் அவள் கற்றனில் பிறந்து சரவணையில் வேலை செய்து ஊர்காவற்றுறையில் இறந்து - தொற்று நோயால் இறந்ததின்பொருட்டு பிணமாகியும் வீடு செல்லமுடியாமல், மாட்டுவண்டியில் வைத்து எடுத்துச் சென்று 'தம்பாட்டியில்' உள்ள ஒரு கடற்கரை யோரமாகப் புதைக்கப்பட்டாள். அவள் இறந்ததை பெற்றோருக்குச் சொல்லியும் அவர்கள் வரவில்லை. பாவங்கள்! வருவதற்கு அவர்கள்வசம் வசதியே இல்லை! இப்போது தேவாவின் படைப்பு மல்லிகாவைக் கண்முன்னே கொண்டுவர கவலையதிகம்! ஆனால், மல்லிகாவைப் பின்தள்ளிவிட்டு கதையைப் பார்த்தால், கதை வெறும் சம்பவத் தொகுப்பு. சம்பவங்களுக்குப் பின்னாலுள்ள உணர்வுகளைக் காண பாத்திரத்துக்குள் படைப்பாளி வந்திருக்க வேண்டும்! வெளியில் நின்று கதைசொல்லல் கதையின் பாத்திரத்தின்மீது ஒரு பச்சாதாபத்தை படைப்பாளி கொண்டிருப்பதுபோல் காட்டிவிடுகிறது. 'கிழவன்அவள்மேல் விழுந்து எழும்புவது' பற்றி சொல்வதெல்லாம் கதையை வெறும் சராசரிக் கதையாக்குகிறது. ஏனெனில், இதுபோல் ஆயிரம் கதை வந்துள்ளது. அருமையான கருவை இப்படி தேயவிடவேண்டுமா தேவா? மல்லிகாவை நான் நேரே கண்டு வளர்ந்ததால் எனக்கு இக்கதை மிகமிக சிறப்பான கதையாக என்னைப் பாதிக்கிறது. ஆனால் ஒரு ஷோபா சக்தியாய் சக்கரவர்த்தியாய் தேவா மாறவேண்டும். அப்போது இவ்வகை எழுத்துக்கள் படைப்புநிலைக்கு உயரும்!

'அலுக்கு'. சின்னமடுவடியில் எனக்குள்ளே அநுபவமாகிய வாழ்வும் சூழலுமாகும். சரவணையில் சாதிவெறியும், சண்டையும் வெட்டிக்கொலைகளும் மாதிரி நான் மற்ற இடங்களில் பார்க்கவில்லை. வட்டுக்கோட்டை மாதிரி பலமடங்கு நம்ம கண்முன்னே நடந்து முடிந்தது. எத்தனை முறைகள் சேரி தீயில் எரிந்து சாம்பலாகியது! எத்தனை பேர்கள் கையிழந்தார்கள். உயிர்விட்டார்கள்? பலர்.

விநாயகமென்ற சாம்பாரிலிருந்து நெடுவல் கந்தையாவரை உடல் அங்கம் முதல் உயிர்விட்டார்கள். இது வெளிச்சத்துக்கு வர சரவணை சின்ன மடுவடி தாழ்த்தப்பட்ட மக்களுக்கு படிப்பறிவில்லையே! அலுக்கு கதைபோல் கூறிவிட ஒரு படைப்பாளி உருவாக முடியவில்லை.

ஒரு சிலர் இருந்தார்கள். காவலூர் இராஜதுரை, காவலூர் எஸ். ஜெகநாதன் இத்தியாதி. இவர்களுக்கும் சின்னமடுவடிக்கும் தொடர்பில்லை.

இவையெல்லாம் ஒரு காலத்தில் வெளிவரத்தான் செய்யும். அது மிகவும் முக்கியம். அலுக்கு கதையல்ல. அது நம் வாழ்வு. சின்ன மடுவடிப் பறையனின் - நளங்களின் - வண்ணானின் - அம்பட்டனின் - பள்ளனின் வாழ்வு! இது தாம் தலித் இலக்கியம்! இந்தவகைப் படைப்புக்கு எந்தப் பூச்சும் தேவையில்லை. அது குரூரம் நிறைந்த பாசிச மனோபாவ எம் வாழ்முறையை துல்லியமாகச் சொன்னாப் போதும்; ஒரு டானியலைப்போல!

தேவிகணேசன் சொன்ன கவிதைகளில் நகர்ப்புறவாழ்வு உந்தித்தள்ளிய உதிரிவர்க்க மக்களின் நிலையை கொழும்புமுதல் பம்பாய், சென்னைவரை பார்க்கலாம். பிரான்சில் மட்டுமென்ன? எங்கும் தாம்!

சுகனின் : 'மதிப்பு மறுப்பறிக்கை'

"......................"

இப்படி வரட்டும் கதைகள். போலி ஒழுக்கம்; நெறிகளின் மரிப்பில் மானிட உண்மைகள் மலரட்டும். Gruppen sex எனக்குக்கூட விருப்பம் மட்டுமல்ல, ஊரில் ஈடுபட்டுமிருக்கிறேன். வெளியில் சொன்னால் கவுரவம் போய்விடும். நான் நல்ல மனிதன். எனக்குக் கம்பியடிக்கப் பார்த்த வாத்தியாரையும் தெரியும். நான் மனதுக்குள் ரசிக்கும் பாலியல் வக்கிரத்தையும் தெரியும். எழுதடா மகனே இன்னும்; இன்னும் அதிகமாய். நம்ம பாலியல் போலிகள் நாறட்டும்.

அது சரியடா சுகன். 'உங்கட தலைகீழ் பக்கத்தை' நான் இப்படியும் பார்க்கலாமா?

"எனக்கு உறுத்துகிறது, நான் சாராயம் காய்ச்சி விற்கின்ற விளிம்பு மனிதன்" - (சுகன்)

1 : சாராயம் காய்ச்சுபவர்களெல்லாம் விளிம்பு மனிதர்களா?

2 : விளிம்பு மனிதர்களெல்லாம் சாராயம் காய்ச்சுபவர்களா?

3 : உறுத்துபவர்களெல்லாம் சாராயம் காய்ச்சுபவர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

களாக இருக்கவேண்டுமா?

4 : சாராயம் காய்ச்சினால்தாம் விளிம்பு மனிதனா?

இப்படிக்கேட்டுவிட்டால் தர்க்கத்துக்கு மூடு விழா எடுத்து 'சோ' ராமசாமியாய் குதர்க்கம் செய்ய லாம்.

எப்படி நோக்கம்?

நல்ல சிறுகதைகளுக்கு ஆசிரியனாயிருக்கும் சுகன், குதர்க்கம் செய்வது ஏனோ.

அர்விந் அப்பாதுரையின் படைப்புகள் யாவும் சிறப்புத்தாம். குறிப்பாக பெண்களைப்பற்றிய சினி மாப் பாடல்கள். இவைபற்றி நிறைய 'புதிய கலாச் சாரத்' தோழர்கள் எழுதிவிட்டார்கள். புலம்பெயர் சூழலில் அர்விந் அப்பாதுரையின் எழுத்துக்கள் புதிய மெருகு சேர்க்கும் பெண்ணியத்திற்கு!

கவிதைகளில் கற்சுறா, சேரன், தேவிகணேசன் மிளிர்கிறார்கள். கடவுள் வியாபாரத்தில் : கட்டுரை யில் இறுதியாகச் சொல்லப்படும் 'இருக்கும் ஒன்றை அக்கணமே பற்றிக்கொள்ளல்' எது? தொழில், குடும் பம், பிள்ளை குட்டி, தன்னம்பிக்கை... எது? சொல்லி யிருந்தால் எல்லோருக்கும் புரிந்திருக்கும்.

அம்பையின் கதை மிகமிக நேர்த்தியும் கவித்து வமும் கொண்டது. என்னமாய் எழுதுகிறாள்! ஒரு சிறிய சம்பவம் எப்படி கவித்துவம்போல் கதையா கியது!

சேனனின் மொழிபெயர்ப்பு யாருக்கு? ரொஸ்கி பற்றி பலர் அவர் வாழ்க்கை வரலாற்றைப் படித் துள்ளார்கள். அதில் இவையும் அடங்கும். அது சரி ரொஸ்கிக்கு மகுடம் சூட்டுவது ஏன்? ரொஸ்கியின் தத்துவங்களின் ஈர்ப்பு மாவோவைக்கூட சிதைக் கும் அளவுக்குப் போயுள்ளது. ஆனால் அவருக்கு வழங்கப்பட்ட தண்டனையை யாரும் ஏற்க முடியாது; கொடுமை!

வாசுதேவனின் André GIDE அறிமுகம் நல்ல காரி யம். எனினும், எமக்குத் தெரியும் அதிதீவிரமான தனிநபர் சுதந்திரம் எப்படி உணரப்படுவதென்று, இதன் பலாபலன் யாருக்கு நன்மையென்று. முதலா ளியச் சமூகப்பொருளாதாரம் எப்பவும் தனிநபரின் அதிதீவிர சுதந்திர உணர்வைத் தூண்டிவிட்டே தன்னை வளர்க்கிறது. சமூகத்திலிருந்து விலத்தி தீவிர சுதந்திரவுணர்வு இறுதியில் உதிரி வர்க்க சூழலுக்குள் போய் முடிவதை நாம் சார்த்தர் தவிர் ந்த இருத்தலியலாளர்களிடம் பார்க்கலாம். கீக்க கோர்ட் முதல் சொப்பன்கவர் வரை பட்டியல் போட லாம். ஜெர்மனிய இருத்தல்வாதி பிறிடிறிக் நீட்சே தன் மாணவனாக மார்ட்டின் கைடெக்கரை வளர்த் துச் சென்றார். இவர்களின் தத்துவத்தின் சாபக் கேடு கிட்லரின் பாசிசத்தில் முடிய செயலூன்றியது.

அதிகமாக நீட்சேயை பிரதிசெய்த André GIDE தன் வாழ்வின் மத்திய காலத்தில் - தன் வாழ்வின் மிக நெருங்கிய பகுதியை அசமயவாதியாகும் நோக்கிலேதாம் செலவிட்டார். எனினும் அவரது நீட் சேயின் பாதிப்பு வெறும் பொருட்டளவில்லை. அஃது தாம் அவரது தத்துவவேர்.

என்ன செய்கிறார்?

நோபல்பரிசோடு சல்லாபமிட்டு ஒடுக்குமுறையா ளருக்குக் கொடுக்குக்கட்டி விடுகிறார்.

நோபல்பரிசை எட்டி உதைக்கும் சார்த்தர் எங்கே? ஜீத் எங்கே?

நீட்சேயோ காலமெல்லாம் பெண்களிற்கெதிரா கவே செயற்பட்டார். ஏன்? நீட்சே கூறிய உயர்மனி தன் யார்? கிட்லரின் செயல். பதில்!

நீட்சே ஒரு பயம் நிறைந்த மனிதன், பயந்தாங் கொள்ளி! இவன் உள்ளம் சொல்கிறது :

"Wer lebt nit dem getahr, er lebt wahr withlich!"

யார் அதி பயங்கரங்களுடன் வாழ முற்படுகி றானோ அவனே உண்மையில் வாழ்கிறான்.

ஆனால் சொந்த வாழ்வு எப்படி?

நீட்சேயின் வாழ்வு ஆமையோட்டுக்குள் பதுங்கி யதுபோல்.

ஜீத் ஒருவகையில் நீட்சேயின் மறுபிறப்பு. இவ் வகை விவஸ்தையற்ற அதிதீவிர சுதந்திரக்கோரல் எதை வழங்கியுள்ளது?

யோசிக்க! ஜீத் போன்ற இருத்தல்வாதிகள் மானிட விடுதலைக்காகக் குரல்கொடுத்த தத்துவ வாதிகளாகப்படும். ஆனால் உண்மை வேறு வடிவ மாகும். வாசுதேவனுக்கு நன்றி; அழகாய்த் தமிழில் எழுதுவதையிட்டு.

**ப. வி. சிறீரங்கன்**
வுப்பெற்றால்,
ஜேர்மனி.



'கூட்டலும் கழித்தலும்' பகுதியில், சேரன் பற்றி வெளிவந்த குறிப்பில், படைப்புகளில் கத்தரிப்பு தொடர்பாக என அடிக்குறிப்பிட்டுள்ள செய்தி தவ றானது.

படைப்புகளில் நாம் கைவைப்பதில்லை என அதன் ஆசிரியர்களான சேரனும் சிவகுமாரும் திட் டவட்டமாக குறிப்பிட்டிருந்தனர். அதன் பிறகு சேரன் அவர்கள் பதிலளித்தபோது கட்டுரைகள், கடிதங் கள், செய்திக்குறிப்புகளில் அதன் நேர்த்தி கருதி ஒழுங்குபடுத்துகிறோம். சில கட்டுரைகளில் சில விடயங்கள் திரும்பத் திரும்பக் கூறப்படும். அப்ப



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டிப்பட்ட இடங்களில் மீளவும் கூறுவதை எடுத்துவிடு கிறோம். வருவதை வாசகர்களுக்கு உகந்த விதத்தில் தரமாகக் கொடுக்கவேண்டும். அந்த 'ஆசிரியம்' பணியைச் செவ்வனே செய்கிறோம் எனும் பொருள்படப் பேசினார். பின் தொடர்ந்த நீண்ட உரையாடல்களை அடுத்து, கடிதம் எல்லாம் பிரசுரிப்பதில்லையே என்ற கேள்விக்கு அவர் பதிலளிக்கும்போது 2 கிழமைக்கு ஒரு தடவை வரும் எமது பத்திரிகைக்கு கிழமைக்கு 25 கடிதங்களுக்குமேல் வருகிறது. எல்லாத்தையும் பத்திரிகையில் போடுவதற்கு எமக்கு வசதியில்லை. அப்படி எழுதும் கடிதங்களை எல்லாம் போடத்தான் வேண்டும் என்றால் அவரவர்கள் ஒவ்வொரு பத்திரிகை நடத்த வேண்டியதுதான் என்றார்.

இவைதான் சந்திப்பின்போது நடந்தவை. இது தவறாக விளங்கிக் கொள்ளப்பட்டுள்ளது என நினைக்கிறேன். வாசகர்கள் கவனத்திற் கொள்வாராக.

**கலைச்செல்வன்**
பாரிஸ்

✦✦✦

"பாலியல் கண்காணிப்பும் ஒடுக்குமுறையும். பெண்களின் கட்டுப்பாட்டின் மீதான ஒரு ஒப்பீட்டு நோக்கு"

இக்கட்டுரையின் தேவை, அவசியம் கருதி மொழிபெயர்த்த லக்சுமியை வரவேற்போம்.

"பொதுவான பாலியல் கட்டுப்பாட்டினைப்பற்றி மிகவும் அண்மித்த கூர்மையான பார்வை எங்களிற்கு தேவைப்படுகின்றது என்று பலர் விவாதிக்கலாம்." இந்த நோக்கத்துடன் நான் உடன்படுகின்ற அதேவேளை...-

என அறிமுகம் செய்ததன்மூலமாக, கட்டுரையில் பரப்பி நிரப்பிடாத குறைபாடுகளை அறிமுகக் குறிப்பின் மூலமாக வாசகன் நான் புரிந்துணரக்கூடிய சந்தர்ப்பம் கட்டுரையில் பதிவாகியது என்னவோ உண்மைதான். கீழ்க்காணும் சுழற்சி முறையினூடாக,

தாய்வழிச் சமுதாயமாக இருந்து தந்தைவழிச் சமூகமாற்றம் ⇒ சாதியச் சமூகமான தமிழ்ச்சமூகம் ⇒ பார்ப்பனீய வர்ணாச்சிரம கருத்தியல் ஆதிக்கம் ⇒ பிம்பங்களையும் குறியீடுகளையும் சிதைப்பதற்கான முதன்மைத் தேவை ⇒ மாற்றுக் கலாச்சாரப்பணியின் அவசியம்.

இருப்பினும் கட்டுரையில் ஏற்றப்படாத சுமைகள் பல அதன் அவசியம் உணர்வதாலும்; பெண்கள்மீதான பாலியல், சமுதாய ஒடுக்குமுறைகளை அணுக பல்வேறு நோக்குகள் சாத்தியம் என அங்கீகரிக்கும் ஜனநாயகமுறையின் நம்பிக்கையினாலும் நானும் சிலவரிகளை பெண்களுக்காக சுமக்கலாம்.

பாலுணர்வு, பாலுறவுகளின் மரபுவழிச்சிதைவு கட்டுரையில் அமெரிக்க வைத்தியர் சொல்வது போல் "இது பாலியல்தன்மையின் ஆக்கிரமிப்பு வெளிப்பாடல்ல. ஆக்கிரமிப்பின் பாலியல் வெளிப்பாடு." இலகுவாக வெளிப்படுத்துவதாயின் இயல்பானவற்றை இயற்கைக்கு விரோதமாக்குவதுமான கருத்தியல், சமூகப் பரவலாக்கப்பட்டுள்ளது.

இக்கலாச்சார மரபின் துறவறம் பற்றிய எடுகோள்களை உருவாக்கிப் போரிடுவது அவசியமாகின்றது. அதுவும் தீர்வுகள் குறித்துப் பேசாமல்; தேர்வுகளும், சாத்தியங்களுமே கவனத்தில் கொள்ளப்படவேண்டியவையாகும்.

வரலாறு ஆண்களின் நலன்களை மையக்கருவாகக் கொண்டதே. பெண்களும் இவ்வரலாற்றையே தங்களின் வரலாறாக உள்வாங்கிப் பழகிக் கொண்டார்கள். நாம் சமுதாய மாற்றுக் கருத்தியலின் முன்தேவை உணர்ந்தவர்களாயின்; பெண்நிலைவாதிகள் உருவாக சகஜமாக்கப்பட்டுள்ள பால் வேறுபாட்டிற்கு எதிரான நிலைப்பாட்டை உணரவைப்பதற்கான அவசியத்தைப் பதிப்பதற்கான முன் நிபந்தனைகளை மேற்கொள்ள வேண்டியவர்களாகின்றோம். பாலியல் பண்டமாக்கல் என்பதில் மனித சமூகமே (ஆண்-பெண்) சிகிச்சைக்குரியதுதான் எனக் கருதுவதற்கான ஆய்வுகள் இருப்பதை நான் உணருகின்றேன்.

● தேவிகணேசனின் 'இருள்வெளி' விமர்சனம். ஏதோ ஒர் அதிகாரம் தேவிகணேசனை நிர்ப்பந்திக்கிறது. ஒவ்வொன்றிற்கும் ஆணி அடித்து எல்லைக் கோடுகளை நிறுவியுள்ளார். ஒற்றைப்பரிமாணக் கருத்தாகப் பிரதிபலிப்பது சலிப்பையும் சோர்வையும் ஏற்படுத்திவிட்டது.

● வாசுதேவனின் எக்ஸில் ② இல் வெளிவந்த மொழிபெயர்ப்பு; கேள்விக்குள்ளாக்கப்பட்ட முதலாளித்துவ தனிவுடைமைச் சமுதாயக்கல்வி முறையும், கலாச்சார கருத்தியல் மாற்றத்திற்கான மாற்றுக்கல்விமுறையின் அவசியம், தேவைபற்றி, வாசுதேவனின் மொழிபெயர்ப்பில் பரவியிருந்தது. வரவேற்றேன். எக்ஸில் ③ இல் வெளிவந்த சிறுகதை. யாருக்காகவோ பல நிறங்களிலும் நாகரிகமான ஸ்ரையிலில் பட்டுக் குஞ்சங்களும் வைத்து சரியாக அளவெடுத்துத் தைத்த தொப்பி. தைத்துக் கொண்டிருக்கும்போது வாசுதேவன் நன்றாக சந்தோஷமாக பாடி ஆடித்தான் தைத்துக்கொண்டிருந்தவர்.

"அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே..."
தைத்து முடிக்கும்போது அவர் போடுவாரோ!
கலர் பிடிக்குமோ! ஸ்ரைல் பிடிக்குமோ!
"உச்சி... மீது... வான்... இடி...ந்து... விழு...ந்து... போனால்!!!"
+×−÷ = யாவும் கற்பனையே
நானறிவேன்; நன்கறிந்தவர் வாசுதேவன்.
சூனியத்தில் பொருள் இல்லை என்பதை.
?????

**நாதன்**
பிரான்ஸ்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஒருபுறம் பார்ப்பின் யாழ்ப்பாணியக் குதிரை மறுபுறம் பார்ப்பின் சனாதனக் குதிரை உன்னித்துப்பார்ப்பின்...?

பொ கருணாகரமூர்த்தியின் 'ஒரு அகதி உருவாகும் நேரம்', 'கிழக்கை நோக்கிச் சில மேகங்கள்' எனும் இரண்டு நூல்களினூடேயும் ஒரு வாசகன் பயணிப்பதற்காக நூலாசிரியர் சமைத்துக்கொடுத்த பாதையின் சௌகரிய/அசௌகரியங்கள் பற்றிய இந்தக் குறிப்புக்களை எழுத்தாளனினதும் வாசகனினதும் மனோதர்ம முரண்கள்பற்றிய குறிப்புக்கள் என்றும் கூறலாம்.

இந்த அவசர பிரசுர அவலச் சூழலானது ஒரு முகமனற்ற கறார் விமர்சனத்தை வேண்டி நிற்கிறது.

இதனடிப்படையில் அன்னாரின் எழுத்துமூலமான வாய்மொழிமூலமான உரைகளையும் கருத்திலெடுத்துக்கொண்டே அன்னாரின் எழுத்துலகத்தூடே எனது பயணம் அமைகிறது.

## உதாரண கூற்றுக்கள்:

1. அம்மா இதழ் 6லிருந்து,
"நானறிந்த வகையில் யதார்த்த இலக்கியம் நம்பிக்கைகள் - கருத்துகள் - செண்டிமெண்டல் விடயங்களைத் தவிர்த்து ஸ்தூலமான கிரியாம்சங்களை மாத்திரம் காட்டி நிற்பது. எனது பாணியில் அது இங்கொன்றும் அங்கொன்றுமாக stillshot காட்சிகளாகக் காட்டி ---கொண்டுசெல்லும்."

2. கிழக்கு நோக்கி சில மேகங்கள் முன்னுரையிலிருந்து,
"சமூகத்தில் என்னைப் பாதித்த விடயங்களை - நான் பதிவு செய்ய விரும்புபவற்றை எனக்கு வாய்த்த மொழியில் எழுதுகிறேன் - கருத்தியல் திணிப்புக்கள் எதுவும் கிடையாது."

3. புத்தகவெளியீட்டுவிழா மேடையில் (பேர்லின்),
"நான் இங்கு வந்த ஒரு பாகிஸ்தான்காரனைத் தான் பெர்லின் வரைபடத்தில் லாகூரைத்தேடுவதாக எழுதினேன். பெனாஷிர் பூட்டோவுக்கு கொமொட்டில் கக்கூசுக்கு இருக்கத் தெரியாது என்றா எழுதினேன். எனவே நான் ஒரு நிறுவனமயப்படுத்தப்பட்ட இந்துத்துவன் அல்ல. நான் எழுதுவதெல்லாம் எதிர்காலச் சந்ததி நடந்ததை அறியவேண்டுமென்பதற்காகத்தான்."

இக்கூற்றுக்களிற் தெறிக்கும் பிரகஸ்பதி மனோபாவத்தில் கருத்தியற் பலவீனம் பொருதிக் கிடப்பதைத்தான் ஒரு கறார் வாசகனால் கிரகிக்கமுடியும்.

நானும் தெரியாமற்தான் கேட்கிறேன், எதிர்கால சந்ததி தகவல்களை அறிய விரும்பினால் பத்திரிகை சேமிப்பு நிலையங்களுக்குச் சென்று திகதி-மாத-வருடவாரியாக அறியலாமே. அதற்கு ஒரு நிருபர் போதுமே - கலைஞனின் தேவை ஏன் வந்தது?

ஒவ்வோர் உயிரின் துடிப்பும் - வாழ்வின் பெருமானங்களும் - நாளின் ஒவ்வொரு கணங்களும் மூலதனத்துக்குள்ளும் - இயந்திரமயப்படுத்தலுக்குள்ளும் - யுத்தத்துக்குள்ளும் - உழுத்துப்போயும் உதிரமுறுக்கும் மரபுச் சட்டகங்களுக்குள்ளும் நசுங்கி காயடிக்கப்பட்டுள்ள மனித பிராணிகள் எவ்வளவு பரிதாபகரமானவர்கள் - இந்த யதார்த்தம் (நடப்பு) எவ்வளவு கொடியது. இதைத்தானே நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் - பிறகு அதை அப்படியே காட்சியாக்குவதில் என்ன வாழப்போகிறது? இவற்றின் மீதான தயவுதாட்சண்யமற்ற விசாரணையும் - இவற்றின் மறுமதிப்பீடுகளுமல்லவா தூர்ந்துபோன மனிதமனங்களின் ஊற்றுக் கண்களைத் திறப்பது!

படைப்பாளர்கள் எந்தக் கருத்தியலால் ஆட்கொள்ளப்பட்டுள்ளனரோ அந்தக் கருத்தியலல்லவா அவர்களது விருப்பை - வெறுப்பை - தேர்வை - பார்வையின் தூரங்களை - கோணங்களை - அணுகாத அகலாத தன்மைகளை நிர்ணயிக்கும் கர்த்தாவாகிறது.

எனவேதான் படைப்பதும் - வாசிப்பதும் கர்மாவயப்பட்டதல்ல, ஸ்வகர்மாவயப்பட்டது என்கிறேன்.

## நிதிசாலசுகமா?

தான் வாழ்ந்த கிராமத்தைப்பற்றி இளம்பராய நினைவிடை தோய்தல்.

"கெம்மின் கூடுகளைக்கட்டி மழையில் பெருக்கெடுத்த தண்ணியோடு தெறித்துச் செல்லும் முரல் மீன்களையும் இறாலையும் போட்டிபோட்டுக் கொண்டு சோமனும் பாட்டுவாளிக்கிழவனும் பிடிப்பதைக் கண்டு குதூகலிப்போம். (அரியனக் குடியானவர்கள்)"

சோமனதும் பாட்டுவாளிக்கிழவனதும் வறுமையையும் வாழ்வுச்சிக்கலையும் புரியமுடியாத அல்லது புரியவிரும்பாத இளம்பராயக் குதூகலிப்பில் அது என்ன அடைப்புக்குறிக்குள் கதைக்கு எந்த விதத்திலும் உதவிசெய்யமுடியாத பார்ப்பனிய (அரியனக்குடியானவன்) அகராதி?

அதைப்போன்றே தென்னந்தோப்பைப் பராமரித்த தோட்டக்காட்டுக் குடும்பம் ஸ்ரீமாவோ சாஸ்திரி ஒப்பந்தப்படி நாட்டைவிட்டு வெளியேறியபின் புதிய தென்னம்பிள்ளைகளை நாட்டுதல் - அடிக்கொத்தல் நின்று போனது என்று விசனப்படுகின்ற மனிதன், வேரோடு பிடுங்கி எறியப்பட்ட அந்த மலை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யகக் குடும்பத்தின் சிதிலங்களை 'ஐயா' என்கிற ஒரு பாத்திரத்தை முன்நிறுத்துவதற்காக கொடுக்கும் முண்டாக கதைக்குள் நுழைக்கவேண்டிய அவசியமென்ன. மலையகத் தமிழர்களை தோட்டக் காட்டார் என்று சொல்லுகிற யாழ்ப்பாணீய மொழித் தேர்வு - இரத்தத்தில் ஊறியதல்லவா?

"டேய் யார்றா அவன் பறப்பயல், அண்ணை மச்சான் உறவு கொண்டார்றது?" "ஒரு டிக்கட் தா அண்ணை" என்று கேட்ட ஒருவனை பஸ் கண்டக்டர் இப்படித் திட்டுவது கதையின் காட்சி. இதற்கு வரவேண்டியது தார்மீகக் கோபமல்லவா? ஆனால் கதாசிரியர் தமாஷ் காட்டுகிறார். எல்லாப் பயணிகளது குலம் கோத்திரம் எல்லாம் அறிந்து வைத்திருக்கும் கண்டக்டரை இலங்கைப் போக்குவரத்துச் சேர்மனாக நியமிக்கலாம் என்று. இது முழங்கால் சிரட்டை பெயர்ந்து அவதியுறும்போது உள்ளங்காலில் கிச்சு கிச்சு மூட்டுவதுபோன்ற பொருந்தா நகை!

ஒரு நாவலுக்குத் தோதான தொகைப் பாத்திரங்களை சிறுகதைக்குள் தாராளமாகச் சொரிந்திருப்பது எல்லாக் கதாமாந்தர்களையும் நினைவில் வைப்பதில் வாசகனுக்குச் சிரமத்தைக் கொடுக்கும்.

ஈழத்து மண்வாசனையில் கணிசமாக தமிழ் நாட்டு வட்டார மொழியைப் பாவித்திருப்பதும் நெருடுகின்றது. நிதி சால சுகமா என்று ஐயா அலட்சியமாகப் பாடினாலும்,நிதிதான் இகலோக வாழ்வின் சகல சுகங்களையும் கட்டிப்போட்டிருக்கிறது. நிதி பங்கீட்டின் பாகுபாடுகளே தோப்புச் சொந்தக்காரன் - தோட்டக்காட்டான் - தெய்விக்கிழவி - பாட்டுவாளிக் கிழவன் - சோமன் - குடியானவன் சுந்தரன் இவர்களின் பாகுபாடுகளை வகுத்து வைத்திருக்கிறது.

## கலைஞன்:

இக்கதையில் அமைப்புரீதியாகவும் கருத்துரீதியாகவும் நான் மிகவும் முரண்படுகிறேன். கலைஞன் என்னும் தலைப்பு கதையின் சாரம். ஒரு ரயில்நிலையம் கதாமாந்தனின் களம். கள அறிமுகத்துக்காக எட்டுப் பந்திகளில் ரயில்நிலைய விபரணை தேவையற்ற ஒன்று..இந்த எட்டுப் பந்திகளும் கதைக்கு எவ்விதத்திலும் சம்பந்தமில்லாதது. அந்த ரயில் நிலையத்தில் என்று தொடங்கியிருந்தால் கதை இறுக்கமாகச் செதுக்கப்பட்டிருக்கும். சிறுகதை மேதைகள் சொல்வார்கள் குடை என்றொரு சொல் வந்தால் அடுத்த இரண்டு வரிகளுக்கிடையில் மழையோ - நல்ல வெயிலோ இருக்கவேண்டுமென்று.

இந்தக் கதையில் ஒரு பங்-ஹிப்பி இசைஞனைப் பற்றிக் கூறப்படுகிறது. கதை கூறுகிற 'நான்' ஒரு கதாபாத்திரமா - அல்லது கதாசிரியனா? அல்லது இரண்டும் கலந்த ஒன்றா?

இந்த நானின் ஹிப்பிமீதான அவதானங்களும் அனுமானங்களுந்தான் கதை. சாளரத்தினூடு அவதான அனுமானங்கள் இப்படிச் செல்கின்றன.

1. கண்வலையத்தில் ஐரோப்பியச் சுருக்கம்.

2. இவன் வேலைவெட்டி இல்லாத ஒருவனாக இருக்கவேண்டும். (இவன், நமக்குத் தொழில் இசைப்பது என்றால் என்ன செய்வீர்கள்?)

3. தினமும் இரண்டுமணி நேரம் ஒரு பூக்கடையில் வேலைசெய்தாலே ராஜகுமாரனாக வாழலாம்.

4. பாவம் இவனும் ஒரு கலைஞன் இது என்ன தொனி! (மைக்கல் ஜாக்ஸனைத்தான் கலைஞனாக ஏற்பீர்களோ?)

5. சோம்பேறிகள் இசையை போதையாகக் கொண்டு வாழ்வின் மறுபரிமாணங்களை காணத்தவறிவிடுவது, தவறவிடுபவைபற்றி அறியாதிருப்பது இவர்களின் பொதுக்குணம். (இச்சமயத்தில் எனக்கு 'காஃப்கா'வின் விசாரணை நினைவுக்கு வருகிறது.)

6. குளிர்காலம் வர என்ன செய்வானோ? இவனுக்கு எனது வீட்டில் இருக்க இடம் கொடுக்கலாம் - ஆனால் இவன் குளிப்பதில்லை என்ற ஒரு பொலிஸி வைத்திருந்தால் - கிடாய் மொச்சை அடிக்கும் பெம்மானோடு மானுடர் உறைவது எங்ஙனம். (இது மிகவும் கீழ்த்தரமான எள்ளல்)

7. ஆயிரமிருந்தும் நன்றாகவே கற்பனையோடு இசைக்கிறான். நான் ஒரு நாள் சூடாக உருளைக்கிழங்கு வாங்கிச் சாப்பிட்டபடி ஸ்ரூலில் அமர்ந்து அவனது இசையை ரசித்தேன். (சபாஷ்! சொர்க்கத்தை அனுபவிக்கத் தெரிந்த ஸ்ரீலங்கன்)

அதன்பின்னால் வந்த ஒவ்வொரு வசந்தத்திலும் அவனது தூளியும் தோற்பையும் அங்கேயே இருக்க அவனையும் அவனது இசையையும் காணவில்லை என்று பரிதாப உணர்வோடு கதை முடிகிறது.

சக மனித அவசங்களையும் - விடுவிக்கமுடியாத அகவுலகச் சிடுக்குகளையும் அமானுடமாகப் பார்க்க விதித்தது யார்? விளிம்புநிலை மாந்தர்கள்மீது திமிரையும் மேல்தட்டு மக்கள்மீது கூழைக்கும்பிடையும் இயல்பாகவே கொண்ட யாழ்ப்பாண மத்தியதர வர்க்க மனோபாவமா? இந்த மனிதனை நிறுத்துப் பார்க்க உபயோகிக்கும் எடைக்கற்கள் சனாதனிகளின் குடியிருப்புக்களில் பொறுக்கி எடுத்ததா?

இச் சமூகக் கரைகளுக்குள் ஊர்ந்து செல்லும் நோஞ்சான் ஓடைகளா வேண்டும் எங்களுக்கு? கரைகளை அகட்டியும் தேவையேற்படின் தகர்த்தும் எல்லாக் கழிவுகளையும் கழுவி நுரைத்தெழுந்து ஊழியாடும் பிரவாகமல்லவா தேவை!

எங்கள் கைப்பாத்திரங்களால் அளந்தூற்றுவது தான் மகாநதி என்றாகிவிடுமா?

இக்கதை முழுக்கவே கதாசிரியர் முயல்வது அந்த ஹிப்பி கிளீன் சூட்டுடன் வேலைக்குப் போக வேண்டும் என்பதையே. ஆனால் கடைசியில் அவ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

னது இசையைக் காணவில்லை என்று ஓர் ஆதங்க முடிச்சு - நான் சொல்கிறேன் உங்கள் அலுப்புத் தாங்காமல் அவன் வேலைக்குப் போய்விட்டான்! நோஞ்சான் ஓடையாகிவிட்டான்! திருப்திதானே?

### ஆவுரஞ்சிகள்:

மீண்டும் ஒரு 'நான்'பாத்திரம் - கதை சொல்கிறது. மருமகளின் பிராவில் கை வைக்கும் கணவனின் தந்தை. அவளின் கணவன் மர்ம தற்கொலை. புருஷன் இறந்தபின் சங்கரி கர்ப்பமாக இருப்பது. பல லொறிகளின் சொந்தக் காரனுடைய ஒரே மகள் வயது முதிர்ந்த திருமணமான அவர்களது றைவரோடு ஓடியது.

மொத்தம் பதினைந்து பக்கச் சிறுகதையின் மூன்று பக்கத்தில் கதைக்கருவைத் தொடும் எழுத்தாளர் மீதிப் பன்னிரெண்டு பக்கத்திலும் கதைக்கு எதுவித தொடர்பும் அற்று 'நான்' என்னும் கதாபாத்திரத்தையும் அதன் சூழலையும் வளர்த்தெடுப்பதில் மிகை கெட்டிருக்கிறார். 5நிமிட கீர்த்தனத்துக்கு 55 நிமிட ஆலாபனைபோல.

பாலுறவு - பாலுணர்வு - தாம்பத்யம் பற்றிய சமகால தமிழ்ச் சமூகத்தின் உளவியற்போக்கை நன்றாகவே விசாரிக்கக்கூடிய நிகழ்விது. மருமகள் பாத்திரத்தின் அகச்சூழல் - புறச்சூழல் திணிப்புகளை அலட்சியப்படுத்தி நகரும் இக்கதையில் மருமகளின் பிராவில் கைவைத்தது கிழவன். ஆனால் பாய்வது என்னமோ சங்கரியின்மீது, "ஏய் சங்கரி, இதை எப்படி உன்னால் அனுமதிக்க முடிந்தது? உன் பெண்மை ஏன் விழிக்கவில்லை? இதுபற்றி நான் எப்படி உன்னிடம் பேசுவேன்? எங்கு தொடங்கி எங்கு முடிப்பேன்?" (விடைகள் குலுக்கல்மூலம் எடுப்பதில்லை கதாசிரியரே!)

ஆனால் இதே 'நான்' பாத்திரம், முன்பொரு நாள் சங்கரியின் ரம்மியமான முறுவல் தன்னைச் செல்லமாகக் கடித்ததென்றும் - அழகு உடனே கண்மூடித் தனமாகத் தாக்கினாலும் அறிவு விழித்துக்கொண்டது என்றும் கூறுகிறது.

முடிவில் சங்கரியும் நல்லபெண்தான். அவள் காலை இடற வைத்தவர்கள் வேறு எங்கோ இருக்கிறார்கள் என்று சங்கரிக்கு பாவமன்னிப்பு கொடுக்கின்ற பரமண்டலப்பிதாவின் பார்வையோடு முடிவு காட்டப்பட்டாலும் சங்கரி என்னும் கதாபாத்திரம் தற்கருத்துச் சொல்லமுடியாத ஒரு பலவீன படைப்பு. இருதலைக் கோள்வாத அடிப்படையில் படைக்கப்பட்டுள்ளது. இதை ஆவுரஞ்சிகள் என்னும் பன்மைத் தலைப்பு மீளுறுதி செய்கிறது.

### காலத்தில் காதல் செய்து:

கேளீரே! குருதியில் தோய்ந்த ஈழத்துக் ஹைக்கூ கேளும் என்று முன்னுரையில் முகவரியிட்ட கதாசிரியரால் இதைத்தான் கொடுக்க முடிந்ததா? இந்திய ராணுவம் கனிவுமற்ற கருணையுமற்ற இரத்த சாட்சியங்களை பதித்த காலத்தில் ஒரு விளையாட்டுத்தனமான அம்புலிமாமா கதை!

பாவிக்கமுடியாத காரொன்றை காரின் சொந்தக்காரன் அழிக்கின்ற போதும் - பெயரிட்டு வளர்த்த பன்றியொன்றை இறைச்சிக்குப் பயன்படுத்திய போதும் - நொந்துபோகும் ஆசிரியரின் மனோதர்மம் பெயரிட்டு வளர்த்து - பச்சை இலுப்பைவெட்டி - பால்வடியத் தொட்டில்கட்டி..... மனிதவெடிகுண்டுகளாய் - எதிரியால் - நண்பனால் அழிந்த - அழிந்து கொண்டிருக்கும் தனது சொந்த சமூகத்தின் இளஞ் சந்ததிபற்றி என்றாவது ஒருநாள் தன் எழுத்துலகில் வலம்விட வேண்டும் என்பது எனது ஆதங்கம்.

அரசியற் தடைகளுக்கடுத்தபடி, ஈழத்தமிழர்களின் ஆபத்பாந்தவர்கள் ஏஜென்சிக்காரர்களே என்று நிறுவமுயலும் ஒரு போக்கு அகதி உருவாகும் நேரத்தின் அஸ்திவாரம்.

யுத்தம் கொடிது! பணவீக்கம் கொடிது! மத்தியதர வர்க்கத்தின் ஆசைக்கனவுகள் கொடிது! இவற்றின் உபரி உற்பத்திதான் இந்த ஏஜென்சிகள். இவர்களின் செயற்பாட்டுக்கு தர்க்கரீதியாக சாதகமான வாதங்களை வைத்தாலும் வைக்கோல்மாட்டுத் தீவனம் என்பதால் நெல்விதைப்பதே மாட்டுக் காகத்தான் என்பதை ஒத்தவாதமிது.

நிற்க! ஒரு கிராமமனிதனின் பிரபஞ்சமே அவனது கிராமந்தான். இந்த மனிதர்கள் அதுவும் கள்ள பாஸ்போட்டில் சட்ட இடுக்குகளில் சிக்கி விழி பிதுங்கி - மூச்சுத் திணறுவதை நகைத்து ரசிக்க எப்படி முடிகிறது?

ஓர் ரஷ்யக் கவிஞனின் பாடல்வரிகள்:

நகரம் புகுந்ததோர் கிராம இடையன்,
இறைச்சிக்கடை தொங்கும் மாட்டின்
படங்களைப் பார்த்து
ஒவ்வொன்றாய் சிரம் தாழ்த்தல்போல்
என் இறந்தகால இழப்புகளுக்கான
சிரந்தாழ்த்தல்!

இதுதானய்யா வியாபாரிக்கும் கலைஞனுக்குமிடையிலான வேறுபாடு!

போடர் கடக்கையிலே ஆறடிச்சுப் போனோரை இக்குளத்தில் எங்ஙனம் நான் தேடுவது சுந்தரனே உதவிக்கு வா!

சிலகதைகளில் பெண்ணியம் ஆங்காங்கே தொடப்பட்டாலும் பாத்திரங்களின் அகப்பரிமாணங்களை அகழமுடியாத எந்தப்படைப்பும் அதன் உச்சத்தை நோக்கி நகரமுடியாது. ஒரு தனித்தவனத்தில் கதை அனைத்துக் கதைகளிலுமிருந்து விலகி கனவுகள்கூட பிடுங்கப்பட்ட ஒரு தமிழ்ப் பெண்ணை முன்னிறுத்தியிருக்கிறது.

கதாபாத்திரங்களின் புறவார்ப்பும் அகவார்ப்பும் களமும் - காலமும் கருத்திலெடுத்துக் கொள்ளப் படவேண்டியது மிகவும் முக்கியம் வாய்ந்தது. எழுத்தாளன்/எழுத்தாளி தன்னில் இருந்து விலகி பிறரது உணர்ச்சிகளைப் புரிந்துகொள்வதன்மூலமே இதன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவசியங்கள் உணரப்படும். படைப்பாளர்கள் கூடு விட்டுக் கூடுபாயும் வித்தையை கட்டாயம் கற்றுக் கொள்ள வேண்டும்.

1. இவரது கதாபாத்திரங்களும் களமும் -கால மும் மிகவும் தூரநின்றே பார்க்கப்பட்டுள்ளது.

2. கதைகளில் உலாவரும் தமிழர்கள் அல்லாத அனைத்துப் பாத்திரங்களும் யாழ்ப்பாணிய மர புச் சட்டவலைகளின் சிலந்திக்கு முட்டாள்க ளாக, கலாச்சாரக் குறையுள்ள பாத்திரங்க ளாக இரையாக்கப்பட்டுள்ளார்கள்.

3. கட்டடங்களின் சரிவுகளை stillshots எடுத் துள்ள எழுத்தாளர் அதன் அஸ்திவாரங்களின் - கட்டிட மூலப்பொருள்களின் மீதான எந்தவித சந்தேகங்களையும் தவிர்த்துள்ளார்.

4. உலகமயப்படுத்தல் - சர்வதேச நாணய நிதி யம் - எச்ச சொச்ச - நிலப்பிரபுத்துவம் - காலனித் துவம் என்பவற்றின் சூட்சுமங்களை உணராது மேலைத்தேய நாடுகளின் பொருள் வசதிக ளுக்கு தலைவணங்கும் மிகைப்போக்குடன், அதேநேரம் கலாச்சாரம் என்று வந்துவிட்டால் நேரெதிராக இருக்கிறார். இது ஒரு சார்புச்சமூ கத்தின் பிரதிநிதித்துவ மனோபாவம்.

5. மொத்தத்தில் இவ்விரண்டு நூல்களிலும் கதா மாந்தர்கள் குறிப்பிட்ட அளவுள்ள நூல்களி னால் கட்டப்பட்டு மட்டுப்படுத்தப்பட்டுள்ள எல் லைவரையுமே நகர அனுமதிக்கப்பட்டுள்ளார் கள்.

இந்த நூலின் நீளம் கதாசிரியரைக்கட்டி இயக் குகிற யாழ்ப்பாணிய மரபுவாதக் கைகளில் தங் கியுள்ளது. யாழ்ப்பாணிய மரபுவாதக் கைக ளைப் பிணைத்துள்ள நூல் இந்துத்துவ (சைவ) சனாதனக் கைகளினால் இயக்கப்படுகிறது. இக்கட்டை அறுக்கும்வரை அன்னாரின் எழுத்து லகின் பாதைகளில் பயணம் செய்வது தீவிர வாசகனுக்கு எவ்விதத்திலும் மொச்சம் தீர்க் காது! எம்பிப்பாய்தலும் முடியாது!

6. சில கதைகளில் கள விபரணைகள் இலங்கை அல்லது இந்திய தமிழ் வாசகனின் தகவல் ஆவ லைத் தீர்ப்பதற்காக ஒரு சுற்றுலாத்துறையின் அக்கறையோடு கொடுக்கப்பட்டுள்ளது. இது சிறுகதையின் செறிவைக் குறைத்துள்ளது. மொத்தத்தில் வாழ்வு என்பது எளிதில் வசப்படு வதற்கு ஒன்றும் ரப்பர்த்துண்டல்ல.

கலைவிஷயத்தில் அர்த்தமும் லாவகமுமே உருவத்தைச் சமைக்கிறது. புதிய சிந்தனைகளுக் கேற்பவே புதிய லாவகமும் புதிய உருவார்ப்பும் ஏற்ப டுகின்றன. இலக்கியம் கோழைத்தனம் கொண் டுவிட்டால் மனிதநாகரீகம் நசித்துப்போய்விடுமென் பதால்த்தான் இலக்கியமென்பது ஒரு சமூகத்தின் ஆத்மா என்றும், படைப்பாளர்கள் அந்த ஆத்மா வின் தொடர்பாளர்கள் என்றும் சொல்லப்படுகிறது. நடப்பியலின் பேரால் எழுதிக்கொண்டு தங்களை படைப்பாளர்களாக உருவகித்துக்கொண்டிருக்கும் நாங்கள் இவற்றைக் கண்டுகொள்ளாது, ஒரு நிருப ருக்கும் படைப்பாளிக்குமிடையிலான பேதங்கூடத் தெரியாத பேதமைக்குள் அழுந்திப் போயுள்ளமை சமகால தமிழ் இலக்கியச் சூழலில் குறிப்பாக புலம் பெயர்ந்தோர் இலக்கியச் சூழலின் நிதர்சனம்.

லட்சோப லட்ச மானுட வரலாற்றில் நேற்றைய மீறலும் - ஆச்சரியங்களும், இன்றைய நடைமுறை - இன்றைய ஆச்சரியங்களும் - மீறலுந்தான் நாளைய நடைமுறை இதுதான் காலமும்! வாழ்வும்!

ஓர் ஆரோக்கியமான வாதத்துக்காக

**அமுகமன்**

நான்
உதிர்ந்து கொண்டிருந்தாலும்
உறங்கி
விடவில்லை
நகர்ந்து கொண்டே
இருக்கின்றேன்
தோல்வியின்
வடுக்கள்
தோள்களில்
கனமாக
கனத்தாலும்
புதிய சிறகுகளை
சேகரித்த வண்ணம்
"புதிய ஜனநாயகம்"
நோக்கி
ஓர்
புதுப்பார்வையுடன்.

**இரா. சுதாசீலன்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இடம் தரும் பொருள்

அர்வீந்

இசையை வெளிப்படுத்த உதவும் பதிவு நாடாக்கள், இசைத்தட்டுகள், வீடியோ நாடாக்கள், வானொலிப்பெட்டிகள், தொலைக்காட்சி போன்ற பல உத்திகளும், எலக்ட்ரானிக் இயந்திரங்களும் பெருகிவிட்டன. இப்பொருட்களை வாங்குவது, தமிழ்ச்சமுதாயத்தில் ஒரு கௌரவப் பிரச்சனையாகவே வளர்ந்துவிட்டது. இப்பொருட்களுக்கு முதலாளியாக வேண்டும் என்று வாழ்ந்து மடியும் தமிழர் ஏராளம்! வீட்டில் நூல்நிலையங்களை வைத்திருக்கும் தமிழர்களைவிட,இச்சாதனங்களை வாங்கி வைத்திருக்கும் தமிழர்கள் அதிகம். படிப்பறிவுப் பிரச்சனை இதற்கு ஒரு காரணமாக இருந்தாலும், பாரம்பரியமும் இந்த நிலை ஏற்பட ஒரு முக்கிய அம்சமாகத் திகழ்கிறது. பல நூற்றாண்டுகள் பழமை வாய்ந்த தமிழ் இலக்கியத்தில் அச்சு மரபு இருப்பினும், இல்லத்தில் நூல்நிலையம் வைத்திருக்கும் மரபு தமிழரால் போற்றப்படவில்லை. ஆனால் தற்காலத்தில், எலக்ட்ரானிக் சாதனங்கள் இப்படிப் போற்றப்படுவதை அவதானித்தால், இந்த ஊக்கமும் உற்சாகமும், அவை கொடுக்கும் சொகுசுக்காகவும், சுகத்துக்காகவும் என்றுதான் எண்ணத் தோன்றுகிறது!

எலக்ட்ரானிக் சாதனங்கள் பெருகியதில், இன்று எங்கும் இசை, எப்போதும் இசை என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. பதிவு நாடாக்கள் வீடியோக்கள் ஆகியவற்றின் பெருக்கத்தினால் தமிழரின் இசை உணர்வில் என்ன மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதைப் புரிந்துகொள்ள எத்தனிப்பது இந்தக் கட்டுரையின் நோக்கம்.

## பதிவு நாடாக்களும் இசைத்தட்டுகளும் இல்லாத உலகம்

செவிக்கு வந்தடையும் சப்தங்களிலும் சமாச்சாரங்களிலும் ஏராளமான மாற்றங்கள் நிகழ்ந்து முடிந்துவிட்டன. இன்னும் பல மாற்றங்கள் நிகழ்ந்த வண்ணமே இருக்கின்றன. ஐம்பது ஆண்டுகளுக்கு முன் வானொலிப் பெட்டிகள் நுழையாத வீதிகள் ஏராளமாக இருந்தன என்று தற்காலச் சரித்திரம் சுட்டிக்காட்டுகிறது. இசையை விநியோகம் செய்யும் எலக்ட்ரானிக் சாதனங்கள் இல்லாத காலத்தில் மக்களுக்கும் இசைக்கும் இருந்த உறவு வித்தியாசமானதாக இருந்திருக்கவேண்டும். அப்போதெல்லாம் இசையைக் கேட்கவேண்டுமெனில் இசைக் கலைஞர்களுடன் நேரடித்தொடர்பு இருந்திருக்கவேண்டிய அவசியம் இருந்தது. அந்தக் காலங்களில் செவிக்கு எட்டிய இசை நேராகக் கருவிகளிலிருந்து பிறந்தது. இயந்திரங்களுள் நுழைந்து, ஒலிபெருக்கியின் மூலம் நம்மை வந்தடையும் இசையில் கருவிகள் வெளிப்படுத்தும் இசையின் பல அங்கங்கள் அழிக்கப்படுகின்றன. கருவியிலிருந்து பிறக்கும் இசையை நேராகக் கேட்பது வளமானது.

இசையை விநியோகிக்கப் பயன்படும் எலக்ட்ரானிக் கருவிகள் இல்லாத உலகில் இசையின் அந்தஸ்து (சமூகம், அரசியல், பொருளாதாரம், தார்மீகம், ஆன்மீகம் போன்ற துறைகள் ரீதியில்) வேறாக இருந்திருக்கும்.

அப்போதெல்லாம் இசை பிறந்த ஒவ்வொரு கணமும் ரசிகர்களின் கவனத்தைக் கவர்ந்திருக்க வேண்டும். தற்காலத்தில், வானொலிப்பெட்டி பாடிக் கொண்டிருக்க அதைக் கண்டுகொள்ளாமல் அவரவர் வேறு வேலைகளைக் கவனிக்கும் நிலையைப் பல்வேறு சூழ்நிலைகளில் நாம் காண்கிறோம். இதிலிருந்து இசையின் வெளிப்பாட்டிற்கும் மனிதப்ரக்ஞைக்கும் இருந்த உறவு மாறிவிட்டது தெளிவாகிறது.நாட்டுப்புறங்களில் நாத்து நடும்போதும், களை யெடுக்கும்போதும் பாடல்கள் பாடப்படுகின்றன. இவ் வேலைகளைச் செய்யும் அதேநேரத்தில் பெண்கள் அந்தப் பாடல்கள் பாடுவதிலும் பங்கேற்கிறார்கள் என்பதை அவதானிக்கவேண்டும். ஆனால் எலக்ட் ரானிக் கருவிகளால் ஒலிக்கப்படும் இசையின் கூடவே சேர்ந்து பாடுபவர்களின் எண்ணிக்கை வெகு குறைவு.

இசை ஒலிக்கும்போது கவனக்குறைவாகக் கேட்பதால், இசையின் ஸ்வரங்களின் ஸ்தானத்திற்கு பாதங்கம் விளைகிறது. இதன் தாக்கம் தமிழனுக்கும் இசைக்கும் இருக்கும் உறவில் மாற்றம் ஏற்படுத்துகிறது.

## கச்சேரி இசை, பதிவு செய்யப்பட்ட இசை

சங்கீதக் கச்சேரியைக் கேட்பதற்கு அரங்கத்தை நோக்கி ரசிகர்கள் போகவேண்டும். ஆனால் பதிவுசெய்யப்பட்ட இசையோ வீடுதேடி வருகிறது. கர்நாடக இசையை எடுத்துக்கொண்டோமானால், நேரத்துக்குத்தக்க ராகங்கள் இயற்றும் மரபும், கேட்கும் மரபும் பதிவு நாடாக்களால் களையப்பட்டுவிட்டன எனலாம். இசைக் கலைஞர்கள் கர்நாடக சங்கீதத்தின் மரபுக்குக் கீழ்ப்படிந்து, அந்தந்த ராகத்தை அந்தந்த நேரத்தில் பாடுவது வழக்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மாக இருந்தது. இன்று சில நட்சத்திர உண வுவிடுதிகளில் எல்லா ராக்கங்களும், எல்லா நேரங் களிலும், கழிவறைகளிலும் கூட ஒலிபரப்பப்படு வதைக் காணலாம். இது தமிழரின் இசை உணர்வில் ஏற்பட்ட இமாலய மாற்றம் எனலாம்.

## இசையும் பொருளாதாரமும்

இசைக்கும் பொருளாதாரத்திற்கும் நிறைய நெருங்கிய தொடர்புகள் இருக்கின்றன. இசைக் குழுக்களை எடுத்துக்கொண்டோமெனில், தமிழ் இசை சரித்திரத்தில் இன்று சினிமாவுக்கு இசைய மைக்கும் குழுக்களைப்போன்ற பெரிய பல கருவி களை உள்ளடக்கிய குழுக்கள் இருந்ததாகத் தெரியவில்லை. சினிமா உலகில் பணம் நிறைய இருப்பதால், திரைப்படங்களுக்கு இசையமைக்கும் குழுக்களில் அங்கம் வகித்த கலைஞர்களின் எண் ணிக்கை பெருகியது. இசைக்கும் பொருளாதாரத் திற்கும் இடையில் இருக்கும் 'அமைப்புரீதியிலான' தொடர்பை இந்த உதாரணம் எடுத்துக் காட்டு கிறது.

பொருளாதாரம் ரசனையை மாற்றியமைக்கிறது என்றால் மிகையாகாது. திரைப்படப்பாடல்களுக்கு மவுசு நிறைந்திருக்கும் தற்காலத்தில், வாத்திய (தனித்த) இசையைக் கேட்பவர்களின் எண்ணி க்கை அருகிவருவதை காண்கிறோம். பாடல்களின் நேரத்தையும் பொருளாதாரம் மறைமுகமாக நிர்ண யிக்கின்றது என்று சொல்லலாம். விநியோக வசதி யைக் கருதி இன்று பாடல்கள் அதிகபட்சம் பத்து நிமிடங்களைத் தாண்டுவதில்லை. சினிமாப் பாடல் கள் ஒன்றிலிருந்து பத்துநிமிட நீளமானவை. கிரா மங்களில், அரைமணிநேரம், ஒரு மணி நேரம் இழுத் துப் பாடப்படும் பாடல்களின் காலஅளவைப் பின் பற்றி சினிமாவில் பரிசோதனைகள் நடக்கும் என் பது தற்காலத்தில் எதிர்பார்க்கமுடியாத ஒன்றா கும்.

கச்சேரி மேடைகளிலும், பொருளாதாரத்தின் நேரடித் தாக்கத்தைக் காண்கிறோம். தயாரிப்பா ளர்களின் கோரிக்கைக்கேற்ப, இன்று கர்நாடக சங் கீதக் கச்சேரிகளில் மனோதர்ம சங்கீதம் அருகி வருவதைக் காணமுடிகிறது.

இசை ஒரு கலைப் பொருளாக விற்கப்படும் ரீதி யில், கச்சேரிக்கும், பதிவுநாடாக்களுக்கும் பொரு ளாதார அடிப்படையில் இருக்கும் வித்தியாசம் நன்கு விளங்குகிறது.

கச்சேரி ஒருமுறை அளிக்கப்படும் இசைவி ருந்து. சம்பவம் நடந்து முடிந்தவுடன், இசை பங்கெ டுத்த ரசிகர்களின் நினைவில் மட்டும்தான் நிற்கும். ஆனால் பதிவுநாடாக்களிலும், இசைத் தட்டுக்களி லும் பண்படுத்தும் சக்தி இருக்கிறது. ஒரு இடத்தில் ஒரு இசைக்கலைஞன் தன் கருவியை மீட்டிப் பிறக்க வைக்கும் இசையைப் பதிவுசெய்து அதை எண்ணி லடங்கா அளவில் பண்படுத்தி, அந்த இசை மழையை எங்கும் எப்போதும் பொழியச் செய்யலாம். பண்படுத்தும் இயந்திரங்களின் சொந்தக்காரர்க ளில் சிலர், இந்தத் தன்மையைப் பயன்படுத்தி, இசைக்கலைஞர்களுக்கு பண்படுத்த உத்தரவுப்ப ணம் (royalty) கட்டாமல், அப்படித் தயாரிக்கப்பட்ட காசெட்டுகளை விற்கவும் செய்கிறார்கள். இந்நி லையில், இன்று தமிழ்ச் சமுதாயத்தில், இந்தியா வில் இலவசமாகக் கிடைக்கும் மூலப்பொருள் (raw material) இசை மட்டும்தான் எனலாம். இதை அவதா னிக்கும்போது, சட்டங்களை இயற்றுபவர்கள் இந்த எலக்ட்ரோனிக் இயந்திரங்களால் இசைக்கும் இசைக்கலைஞர்களுக்கும் ஏற்பட்டிருக்கும் மாற்றங் களை அவதானித்துச் செயற்படுகின்றனரா என்ற கேள்வி எழுகிறது.

## இசை/பாடல்கள் : சில கூறுகள்

பல்வேறு சூழ்நிலைகளில் பல்வேறு நோக்கங்க ளைக்கொண்டு எழுதப்படும் பாடல்களையும், இயற் றப்படும் இசையையும் கீழ்வரும் கூறுகளாகக் கரு தலாம்.

- பக்திப்பாடல்கள் (இந்து, கிறிஸ்துவ, இஸ்லா மிய)
- நாட்டுப்புறப் பாடல்கள்
- சினிமாப் பாடல்கள்
- அரசியல் பாடல்கள்
- மரபு இசை(கர்நாடக, ஹிந்துஸ்தானி)

சினிமாப் பாடல்களில் பக்திப்பாடல்களும் உள் ளன. நாட்டுப்புறப்பாடல்களும் உள்ளன. அரசி யல்தொனிப் பாடல்களும் உள்ளன. ஆக திரை இசையில் 'பல்துறை' கூறுகள் இடம்பெறுகின்றன.

## இடம் தரும் பொருள்

படம் பார்க்கும்போது கேட்கப்படுவதைவிட, சினிமாப் பாடல்களைத் தனித்துக் கேட்பதற்கான சூழ்நிலைகள் அதிகம். பல மதச் சடங்குகளிலும், சமூக வைபவங்களிலும், அரசியல் கூட்டங்களிலும் சினிமாப்பாடல்கள் ஒரு இன்றியமையாத அம்சங்க ளாக மாறிவிட்டன.

சினிமாப்பாடல்களை பதிவுநாடா, இசைத்தட்டு களின் உதவியோடு தனித்துக் கேட்கும்போதும் அவற்றின் நிலை வேறுபடுகிறது. வீடியோவில் ஒலி-ஒளியுடன் தனித்துக் கேட்கும்போதும் சினிமாப்பா டல்களின் ஸ்தானம் வேறுபடுகிறது.

இந்த வேற்றுமைகள், கற்பனாரீதியிலும், தார் மீக ரீதியிலும், நினைவுல்க ரீதியிலும் வெளிப்படு கின்றன.

ஒலிபெருக்கியின்மூலம் எல்லாத்திருமண விழா க்களிலும் விநியோகிக்கப்படும் "வாராயோ என் தோழி வாராயோ" என்ற பாடலை உதாரணத்துக்கு எடுத்துக் கொள்வோம். 'பாசமலர்' என்னும் திரைப்ப டத்தில், கல்யாணப்பெண்ணின் அண்ணன் தன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தங்கையை அவருடைய வருங்காலக் கணவனின் கைகளில் "அவளைக் கண் கலங்காமல் பார்த்துக் கொள்" என்று சொல்ல பாடல் தொடங்குகிறது. இந்தப் பாடலின் இடையில் திருமணச் சடங்கை நடத்தி வைக்கும் மந்திரங்கள் ஓதப்படுகின்றன. திருமண விழாவில் ஒலிபெருக்கியின்மூலம் விநியோகிக்கப் படுவதால், மந்திரங்கள் சடங்கு 'நிஜ நிகழ்வு' நடப்பதற்கு முன்னும் பின்னும் காற்றில் தள்ளாடுவதை நம்மால் கேட்கமுடிகிறது. தார்மீக ரீதியில் சினிமாப் பாடல்கள் கொண்டு வந்த மாற்றத்தை இந்த உதாரணத்தின்மூலம் உணர முடிகிறது. இப்படிப் பாடல்கள் ஒலி பரப்பப்படுவது யாருக்கும் அதிர்ச்சியைக் கொடுப்பதில்லை. மாறாக இதைப் போன்ற நிகழ்வுகளை சர்வசாதாரணமான ஒன்றாகவும் மக்கள் கருதுகிறார்கள்.

இப்படி ஏதோ ஒரு காரணத்திற்காக இயற்றப் படும் பாடல்கள், பதிவுநாடாக்களின் உதவியாலும், இசைத்தட்டுகளின் இயல்பாலும் வெவ்வேறு சூழ்நிலைகளில் வெவ்வேறு காரணங்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன. ஆக ஒவ்வொரு 'இடமும்', சூழ்நிலையும் திரைப்படப் பாடல்களுக்கு வெவ்வேறு பொருட்களை அளிக்கின்றது.

## கவிஞரின் பொறுப்பு

திரைப்படப்பாடல்களில் சமூக விழுமியங்களைப் பற்றிய ஏராளமான கருத்துக்கள் வெளியாகின்றன. ஆண், பெண், காதல், குடும்ப உறவுகள் போன்ற கருக்கள் கவிதை வடிவம் பெறுகின்றன. சினிமாவுக்கு எழுதப்படும் பாடல்களில் சொல்லப்படும் கருத்துக்களுக்கு கவிஞர் பொறுப்பா? அதாவது, கதைகளில் வரும் பாத்திரங்களால் பாடப்பட்டு வெளிக்கொணரப்படுவதால் இக்கருத்துக்கள் அந்தப் பாத்திரங்களுடையது. பாத்திரங்களுக்கு இயம்பியவண்ணம் என்னைப் பாடல் எழுதச் சொன்னதால்தான் நான் இக்கருத்துக்களை வெளிப்படுத்தினேன் என்று கற்பனா பாத்திரங்களின்மீது பழியைப் போட்டுவிட்டு கவிஞர்கள் தப்பித்துக் கொள்ள சினிமா வாய்ப்பளிக்கிறது. சினிமாப்பாடல்கள் ஒரு சக்திவாய்ந்த கருவியாகிவிட்ட தற்காலத்தில் அவற்றில் கூறப்படும் கருத்துக்களுக்கு யார் பொறுப்பு என்ற விவாதம் நடந்தே ஆக வேண்டும்.

ஆண்கள் மட்டுமே ஆக்கிரமித்து வரும் சினிமாப் பாடல் சிம்மாசனத்தில் பெண்களை அமர்த்தினால் எப்படி இருக்கும்? பெண்ணியவாதத்தின் குரலாக, ஒரு சில சினிமாப் பாடல்களாவது அமைந்துள்ளனவா? தமிழ்த் திரைப்படப்பாடல்களைப்பற்றி ஆராய்ச்சியை எந்த வழிகளில் மேற்கொள்ளலாம்? என்ற கேள்விகளுக்கு அடுத்த எக்ஸிலில் வெளிவரவிருக்கும் 'பெண்ணைப் பாடச் சொன்னால்' என்ற கட்டுரையின்மூலம் சில விடைகளைத் தேட எத்தனிப்போம். ■

# சந்திப்பு

சந்தோஷிக்க நேர்ந்தது
மிக அபூர்வமாய்
அன்றைய பொழுதில்
யாதாயினும் ஒரு இடறலில்.

கீற்றாய்க் கிழிந்து
மின்னிப் புன்னகைக்கும்
அவஸ்தைப் பொழுதில்.
விழிப்பொட்டின்
மையக் குவியத்தில்
தொலைந்தது போக
எஞ்சிய அடையாளங்களுடன்
நீ விழ.

அதற்காய் அல்ல,
இன்று
சருகெனவாயினும்,
தளிர்ப்பொழுதில்
உன்னில் சேமிக்கப்பட்ட,
தொலைந்ததும்
சிதறிச் சிதைந்ததுமான
என் நிஜத்தின் சுயத்தை
உன் விழியோரக் கசிப்பில்
உணர்கையில்.
ஈரம் புறக்கணிக்க,
உலர்ந்து போன
என் பிரதேசத்திலும்,
பலவந்தமாய் நிகழ்ந்த
ஊற்றுச் சுரப்பில்,
மிக அபூர்வமாய்
இமைகள் ஈரப்பட...

சந்தோஷிக்க நேர்ந்தது
அன்றைய பொழுதில்.

**பொன்னையா விவேகானந்தன்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மீறல்கள்

என்.கே. மகாலிங்கம்

"என்னப்பா - நான் சொன்னது கேக்கேல்லையா?" என்ற இழுப்புடன் தன் பல்லவியை ஆரம்பித்தாள். அதற்கு அனுபல்லவி பாட அவன் தயாராக இல்லை. இந்த இழுப்புக் கேட்டும் கேட்காதது போல இருந்தான். எத்தனையோ தரம் அதற்குப் பதில் சொல்லிவிட்டான். இருந்தும் எந்தப் பதிலும் அவளுக்குத் திருப்தி தரவில்லை. தராது என்பது அவனுக்குத் தெரியும். அதனால்தான் அப்படிப் பாராமுகமாக இருந்தான். பாராமுகமாக இருந்தால் விட்டுவிடுபவளல்ல அவள்.

"நான் கேட்டுக்கொண்டே இருக்கிறன். நீங்க என்னை அலட்சியப்படுத்திறீங்க?" என்று அவள் இவனைச் சரிவரப் புரிந்து கொண்டு பேசுவது மாதிரியே மேலும் சொன்னாள். ஆனால் அவன் மசிவதாய் இல்லை.

"நானும் உங்களைப்போல உழைச்சுக்கொண்டு வாறன். கஷ்டப்பட்டு வேலை செய்யிறன். உங்களுக்கும் பிள்ளைகளுக்கும் சமைச்சுப் போடுறன். உடுப்புத் தோய்க்கிறன். அப்படி இருந்தும் நான் மட்டும் கார் ஓடக்கூடாதா?" - அவள் திரும்பவும் தான் செய்யும் தொண்டுகளையும் தனக்குள்ள குறையையும் அப்பட்டமாக அவனுக்கு ஏதோ தெரியாதமாதிரி புரியும்படி சொன்னாள். அதற்கும் அவன் பேசாமல் இருந்தான். ரிவியில் அவன் கண்ணாக இருந்தான். மனம் மட்டும் இவளின் அரிப்பால் சஞ்சலப்பட்டுக் கொண்டிருந்தது. ரிவியில் றெஸ்லிங் மிக மும்முரமாகப் போய்க்கொண்டிருந்தது. உதை, அடி, மிதி எல்லாம்.

"என்ரை ஐயா எவ்வளவு சீதனம் தந்தார். வீடு, காசு, உங்கள் தங்கச்சிமார் வாழ பணம், கலியாணவீட்டுச் செலவுக்குக் காசு" இதை இன்று அவள் சொல்லவில்லை. அதைச் சொன்னால் அவனுக்குக் கெட்ட கோபம் வந்துவிடும். கையில் உள்ளது எதுவானாலும் அதைத் தூக்கி எறிந்து அடித்து அமர்க்களமே நடந்துவிடும். அதை அவள் சொல்லாமலும் இல்லை. அது அவளின் கடைசி ஆயுதம். இனி மேல் தாங்கமுடியாது என்று அவள் நினைத்தபோது அவனை எப்படியாவது காயப்படுத்த வேணும் என்று நினைத்தபோது அவளை அறியாமலே அவள் உபயோகிக்கும் கடைசித் துரும்பு. அந்தப் பாணத்தை அவிழ்த்து விட்டால் அவன் அப்படியே மயங்கி விடுவான். அவன் என்ன செய்வான் என்றே அவளுக்குத் தெரியாது.

பதினைந்து வருசம் முடித்து, இரண்டு பிள்ளைகளைப் பெற்றிருக்கிறாள். கொழும்பில் அவனின் கிளறிக்கல் சம்பளத்துடன் கஷ்டப்பட்டுக் காலம் கழித்திருக்கிறாள். அவன் அவ்வளவு மோசமான பேர்வழி இல்லை. குடித்து அவளின் சீதனக்காசைச் செலவழிக்கவில்லை. தன் சகோதரிகளை வாழ்விப்பதற்காக தன் குடும்ப கஷ்டம் மற்றவர்களுக்குத் தெரியாமல் ஓட்டுவதற்காக அவளின் சீதனப்பணம் முழுவதும் கரைந்திருக்கிறது. இனிமேலும் கொழும்பில் ஒட்டுக் குடித்தனம் வாழமுடியாது. கிளாஸ் ரூ கிளறிக்கல் சம்பளத்துடன் வாழமுடியாது என்று பலமுறை நினைத்தபோதுதான் 83 இனக்கலவரம் வந்தது. வாழ்க்கையில் திருப்பம் பலமாதிரி வருகிறது. எந்த உருவத்தில் வந்தால் என்ன திருப்பம் திருப்பம்தானே.

வெளிநாடு போவதைத் தவிர வேறு வழியே இல்லை என்ற நிலை பலருக்கும் வரமுன்னரே அவனுக்கு வந்துவிட்டது. இந்த நாடு எக்காலமும் திருந்தப்போவதில்லை என்ற ஞானோதயம். அது பலருக்கும் காலம் சென்று தான் வந்தது. ஆனால் அவனுக்கு தூர திருஷ்டியில் அப்போதே தெரிந்திருந்தது. அது மட்டுமல்ல, கனடா என்றொரு நாடு. அதில் எஸ்கிமோவர், உறைபனி, இக்ளூ கொட்டில் என்றதுடன் பலருக்குப் பூகோள அறிவு இருந்த போது அங்கு மனிதர்களும் வாழலாம் என்று கண்டு பிடித்தது அவன் உள்ளுணர்வு. அதுமட்டுமல்லாமல் அதுவும் யாழ்ப்பாணத்தில் கொடும் வெய்யிலிலும் கடும் மழையிலும் வாழ்ந்த தமிழன் குளிரில் விறைத்துச் சாகாமல் உயிர் தப்பி வாழலாம் என்றும் தன் அகக்கண்ணால் தெரிந்து இலட்சக் கணக்கில் பணம் செலவழித்து இலட்சக் கணக்கானவர்கள் வர முன்னர் பிளேன் ரிக்கற்றுடன் வெளிக்கிட்டு "ரூ றிஃப்பியுஜி ரிக்கற் பிளீஸ்" என்று சொல்லி உள்நுழைந்தவர்களின் காலத்தில் மொன்றியலில் வந்து இறங்கியவன். அவனின் கண்டுபிடிப்புக்கு மாலைபோட்டு தகவல் பத்திரிகையில் அட்டைப்படத்தில் படம் போட்டிருப்பாங்கள். ஆனால் அவர்களுக்கும் தெரியாமல் றெஸ்ரோறன்ரிலும் ஃபக்ரறியிலும் வேலை செய்து அவன் இலை மறையில் தொங்கும் தனியப் பழுத்த மாங்காயாகவே வாழ்ந்து கொண்டு தினமும் மனைவியுடன் மல்லுக்கட்டிக் கொண்டிருக்கிறான்.

மனைவியைக் கூப்பிடுவதற்குப் பலகாலம் சென்றது. அகதிகள் அனைவருக்கும் மன்னிப்புக் கொடுத்து கனடா அவர்களையும் மனித சமூகத்தில் அங்கத்தவர்களாய் ஏற்றுக்கொண்ட காலத்தில்தான் அவனால் மனைவியை அவனால் அங்கு சட்டபூர்வமாக இறக்குமதி செய்யக் கூடியதாய் இருந்தது. அதனால்தான் அவள் தன்னுடன் வேலை செய்பவர்களுக்கு - நானும் இவங்களைப்போல் அகதியாக வந்தனான் என்று நினைத்துக் கொண்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டிருக்கினம் - என்று தன்னைப் போல் வந்தவர்கள் என்று தெரிந்தவுடன் மறைவாகத் தன்னை வேறுபடுத்திப் பெருமைப்பட்டுப் பேச முடிகிறது.

கனடாவிற்கு வந்தபோது மொன்றியலில்தான் மனைவி வரும்வரை இருந்தான். ஆனால் பிள்ளைகள் ஆங்கிலத்தில் படிக்காவிட்டால் இந்த நாட்டில் சுபீட்சம் இல்லை என்று அகக் கண்ணால் தெரிந்து நேரகாலத்துடனே மனைவியும் பிள்ளைகளும் வந்தவுடன் ரொறன்ரோவிற்கே வந்துவிட்டான். ஆனால் வேலைதான் அவனை அன்றும் இன்றும் அலைக்கழித்துக் கொண்டிருக்கிறது. இங்குள்ள காலநிலை போல. காலநிலை அறிவிப்புகள் கூடக் காலைவாரிவிடும் போது வேலைமட்டும் கை கொடுத்து இவனின் தன்மானத்தைக் காப்பாற்றிவிடாமல் பனிக் காற்றில் ஆடி, தூக்கி எறிபடும் பனித்தூறல் போல அள்ளுண்டு போய்விடும். ஆனால் மனைவிக்கு மட்டும் வந்த காலத்தில் இருந்தே ஒரே ஃபக்ரறியில் வேலை. அதுவும் ஏறக்குறைய நிரந்தரம்போல. அதனால் அவளுக்கு தன்னில் ஒரு இளக்காரம் என்ற இவன் நினைவு. "இவர் படிச்செண்னத்தைக் கண்டார். ஒரு நாளைக்கு ஒரு இடத்தில் வேலைசெய்வார். அடுத்த நாள் சண்டை பிடிச்சுக்கொண்டு வந்திடுவார். நான்தான் இரவும் பகலும் வேலை செய்து வீட்டைக் கவனிச்சுக் கொள்ளிறது" என்று அவனுக்குச் சொல்லாவிட்டாலும் அவள் நினைத்துக் கொள்கிறாள் என்று அவனுக்குச் சந்தேகம்.

இப்ப கொஞ்சக் காலமாக கார் பழகவேணும், கார் ஓட்டவேணும் என்பது அவள் விருப்பம். அவளுடன் வேலைசெய்யும் பெண்களில் பலர் தனியக் கார் ஓட்டிக் கொண்டு வருகிறார்கள். தான் மட்டும் இவ்வளவு காலம் கனடாவுக்கு வந்தும் காரோட்டத் தெரியாமல் இருப்பது அவமானமாகப் பட்டது அவளுக்கு. அவருடைய கையையே எதிர்பார்த்து இருக்க வேண்டி இருக்கிறது.

அவன் காலையில் வேலைக்குக் காரில் கொண்டு வந்து விட்டுப் போகிறான். வீட்டுக்குத் தேவையான சாமான்கள் எல்லாவற்றையும் வாங்கிக்கொண்டு வருகிறான். பிள்ளைகளைச் சில வேளை பாடசாலைக்குக் கூட்டிக் கொண்டு போகிறான். கலியாண வீடு, சாமத்தியவீடு, பிறந்தநாள், கோயில் முதலிய எல்லா இடங்களுக்கும் கூட்டிக்கொண்டு போகிறான். அவள்மட்டும் பக்கத்தில் இருக்கவேண்டி இருக்கிறது. அவ்விடத்தைக் கூடச்சிலவேளை பிள்ளைகள் பிடித்துக்கொண்டு விடுகின்றன.

இவள் ஏன் கார் பழக வேண்டும்? இவள் முந்திப் பிந்திக் கார் ஓடி இருக்கிறாளா? இன்னொரு கார் வாங்க எங்களிட்டை வசதி இருக்கிறதா? இன்ஷுரன்ஸ் எவ்வளவு வரும் என்பது அவன் வாதம். இந்த வாதம் அவளுக்குப் புரிகிறதாயில்லை என்று அவனுக்கு ஒரு பக்கத்தில் கோபமும் வருத்தமும். அவளுக்கோ இவன் தன்னை அடிமையாக தன்னில் தங்கியிருக்கச் செய்வதற்கு இது ஒரு வழிமுறை என்று நினைக்கிறாள். இது இன்னும் தீர்வதாக இல்லை.

"ஆர் உன்னைக் கார் பழக வேண்டாம் எண்டு சொன்னது? தாராளமாக பழகு" என்றுரிவிக்கு முன்னால் இருந்துகொண்டு முகத்தைத் திருப்பாமலே அவளுக்குக் குசினிக்குள் கேட்கும் படியாகவே சொன்னான்.

"நான் பழகத்தான் போறன். நீங்கதான் பழக்கமாட்டன் என்றீங்களே" என்றாள் பதிலுக்கு அவள்.

"இந்த வயசில் இப்படி ஆசை வந்தா... இனி எல்லா ஆசையும் ஒவ்வொண்டா வரும்..." இது அவன்.

"எனக்கு அப்படி ஒரு ஆசையும் வராது. வந்திருக்கிறதா இருந்தா எப்பவோ வந்திருக்கும்." ஏதோ அவர்கள் இருவருக்கும் புரியும் சங்கேத மொழியில் பேசிக் கொண்டார்கள்.

அவள் சொல்வாள். செய்ய மாட்டாள் என்றுதான் அவன் எண்ணினான்.

"கார் பழக்கிற பாலா உன்ரை மச்சான்தானே. அவனைக் கூப்பிட்டால் பழக்குவான்தானே."

"அவன் பழக்கிறன் எண்டுதான் சொன்னவன். நீங்கதான் தேவை இல்லை என்று சொல்லிப் போட்டியள்."

"இப்ப பழகத்தானே சொல்றன். போய்ப் பழகலாம்தானே."

"நான் பழகத்தான் போறன். இருந்து பாருங்கள்."

போட்டாபோட்டியாக கதைத்துக்கொண்டே இருந்தார்கள். அது ஞாயிற்றுக்கிழமை. சாப்பாட்டிற்கு நேரம் வந்தது. அவள் சமைத்துப்போட்டாள். அவன் சாப்பிட்டான். சாப்பிட்டு விட்டுத் தூங்கினான். அடுத்த நாள், அதற்கு அடுத்த நாள் அவனுக்கு வேலை இல்லை. அவளுக்கு ஒவ்வொரு நாளும் வேலை. சாப்பிட்டபின் அவள் தூங்கவில்லை. உடுப்புத் தோய்த்தாள். உடுப்புக்களை மடித்து வைத்தாள். பிள்ளைகளுக்கு சாப்பாடு கட்டி வைத்தாள்.

அடுத்த நாள் வேலைக்கு அவளைக் காரில் கூட்டிக் கொண்டு சென்றான்.

மாலை வந்தது. அவள் வேலைவிட்டு வர நேரம் ஆகியது. அவள் இன்னும் ஏன் வரவில்லை என்று அவனுக்கு யோசனை. கார் பழகப் போய்விட்டாளோ என்று சந்தேகித்தான். அவள் வந்தாள். ஏதோ மாற்றம் தெரிந்தது. என்னவென்று கண்டுபிடிப்பது சிரமமாக இருந்தது.

"அம்மா உங்களுக்கு இது நல்லா இருக்குது. உங்களைப் பார்க்க எங்கடை ரீச்சரைப்போல இருக்குது." மகள் சொன்ன பிறகுதான் அவள் தலைமயிரை வெட்டி இருந்தாள் என்பது அவனுக்குப் புரிந்தது. அவளின் நீண்ட கூந்தலைக் காணவில்லை. குளித்துவிட்டு, சாமி அறையில் விளக்கேற்றி, விபூதி பூசி, குங்குமப் பொட்டிட்டு, தேவாரம் பாடி, பிரார்த்தித்து விட்டு வருகையில் பிருட்டத்தில் விழுந்து ஈரப்படுத்தும் அவள் கூந்தலைக் காணவில்லை. ■



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஒரு இலக்கியக்காரனின் 'கென்டயினர்' பயணம்

மானுடபுத்ரன்

எதிலிருந்து ஆரம்பிப்பது? எங்கே தொடங்குவது? யாரிடம் சொல்லமுடியுமிதை? யார் ஆற்றுவார்? பரவாயில்லை. இது ஒரு எழுத்திலாவது பதியப்படட்டும்! பின்னரொரு நாளில் யாராவது பார்த்து என்னையும் என்னைப் போன்றவர்களையும் ஆற்றுப்படுத்தட்டும். ஒரு நப்பாசை மேலிடுகிறது.

இது என் கதை. என் போன்ற எத்தனையோ பேரின் கதை. குமுறிக் குமுறிக் கொண்டிருக்கும் நெஞ்சங்கள் வெளியே எழுத முடியாத அல்லது எழுதத் தெரியாத கதை.

இங்கேதான் அனுபவமே இல்லாத அனுபவமொன்றுக்குள் உங்களை அழைத்துச் செல்லப்போகிறேன். நீங்களெல்லாம் அகதிகளாக இருக்கலாம். அரசியல் அகதிகளா? அல்லது பொருளாதார அகதிகளா? என்றெல்லாம் நான் இப்போது கேட்கப் போவதில்லை. அது எனக்குத் தேவையுமில்லை. ஆனால் 'கென்டெயினர் பயணம்' அல்லது 'ஆட்கடத்தல்' கேள்விப்பட்டிருப்பீர்கள்தானே. அதென்றால் என்ன? ஒரு இலக்கியக்காரனான எனக்கே ஏற்பட்டுப்போச்சே, அதுதான் அனுபவ அதிஷ்டம் என்பது. ஏனென்றால் ஒவ்வொரு தமிழனும் எப்படியெல்லாம் ஏஜென்டிடம் பணங்களை அள்ளிக்கொடுத்து, உயிரைக்கொடுத்து வருகிறான் என்பதையாவது தெரிந்துகொள்ளவேண்டாமா?

ஒல்லாந்து-பிரான்ஸ்-ஜேர்மனி போன்ற நாடுகளில் வைத்துச் சொன்னார்கள். இந்த நாடுகளில் மொழி படிக்கவேண்டும். இங்கிலாந்து போங்கள் மொழி லேசு. அகதிகளை ஏற்கிறார்கள். வேலையும் செய்யலாம்.

ஒரு ஏஜென்டைப் பிடித்து 3500மார்க் கொடுத்துப் போக வேண்டுமாம். இலங்கையில் இருந்து காசை வரவழைத்தாயிற்று. அனுப்புகிறோம் வாருங்கள். அழைப்பு வந்தது. எப்படிக் கொண்டு போகிறார்கள்? யார் கொண்டு போகிறார்கள்? எதுவுமே தெரியாது. வரச் சொன்னார்கள் போனேன். பெல்ஜியத்தில் ஒரு வீட்டில் இருக்கச் சொன்னார்கள். இருந்தேன். என்னோடு சேர்த்து நான்கு பேர் ஏற்கனவே இருந்தார்கள். தமிழர்கள்தானே பாஷை புரிகிறதே அது போதும். சமைத்தார்கள் சாப்பிட்டோம்.

அன்றிரவு பதினொரு மணி போல ஒருவன் வந்து சொன்னான் "வெளிக்கிடுங்கோ!" காரில் ஏற்றினான். கார் போகிறது புகைப் போல... ஒன்றரை மணித்தியாலம் மட்டில் கார்ப்பயணம். ஓரிடத்தில் நிறுத்தி இறங்கச் சொன்னான். இறங்கியாயிற்று. "இறங்கி ஓடுங்கோ". ஓடினோம். "பற்றைக்குள் படுங்கோ". படுத்தோம்.

அவன் போய் கென்டயினர் வரிசையாய் நிற்கும் இடங்களை அவதானித்தான். ஏதோ ஆமிக் கேம்பை தகர்க்கும் பாணியில் - உத்திகளோடு எல்லாம் சுழண்டு படுத்து அனுகூலம் பார்த்து ஒருவாறாக ஒரு றெக்ஸீன் கென்டயினரை அவிழ்த்து "ஒவ்வொருத்தராய் வந்து ஏறுங்கோ" உத்தரவுப் பிரகாரம் வந்து ஏறினோம். "இங்கிலாந்து போவியள். இனி உங்கடை பாடுதான். சத்தம் போடாமல் இருக்கவேணும். இருங்கோ." பக்குவமாக வெளியில் கட்டினான். போய்விட்டான்.

நடுச்சாமம். படுக்கவேண்டும். நித்திரை வருகிறது. என்னைப் படுக்க மற்றவர்கள் விடுகிறார்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ளில்லை. நான் ஒரு குறட்டை ஆசாமி. எல்லோரு மாய் என்னைத் தட்டி எழுப்பிக் கொண்டிருந்தார் கள். கென்டயினர் அரைவாசி வெறுமனேயே கிடக் கிறது. குளிருகிறது பேய்க் குளிர்.

என் மனைவியே! நான் ஐரோப்பா வரும்பொழுது ஏன் அப்படியெல்லாம் அழுதாய்? இரண்டு கிழமைக ளாக என்னைக் கட்டிக்கொண்டு அழுதாயே. என்ன எனக்கெல்லாம் சகுனம் தெரிந்ததா என்ன? இப்படி யெல்லாம் அகதிகள் அலைக்கழிக்கப்படுகிறார் கள் என்று. பலகைத் தட்டு, ஊத்தைக் கென்டயினர் படுக்கமுடியவில்லை. முதுகெலும்பு வலியெடுத்தது. போகவேண்டும். ஆம் போகத்தான் வேண்டும் இங்கி லாந்துக்காவது.

காலையில் 'கென்டயினரை' எடுக்கிறான் சாரதி ஓடுகிறது அது. ஓடிக்கொண்டே இருக்கிறது. ஒரு மூன்று மணித்தியால ஓட்டம். திடீரென்று நிற்கிறது. றெக்ஸீன் சீற்றுக்குள்ளால் ஓட்டைபோட்டு வெளியே பார்த்தான் வந்தவனில் ஒருத்தன்.

அதற்கிடையில் திடீரென்று வந்து பின் கத வைத் திறந்தான் சாரதி. அதிர்ச்சி அடைந்தான். "இறங்கி ஓடுங்கோ" ஆங்கிலத்தில் திட்டினான். ஓடி னோம். எங்கே என்று தெரியாமல் ஓடினோம். பெரிய பாதையால் ஓடினால் பொலிஸ் பிடிப்பார்கள். பிரிந்து பிரிந்து இவ்விரண்டு பேராக ஓடி ஒரு மாதிரி ஒரு சிறிய வங்கியைக் கண்டுபிடித்து காசு மாற்றினோம். கையிலிருந்தது பவுன்ட். கை நிறையத் தந்தார்கள் பெல்ஜியம் பணத்தை. சுத்திச் சுத்திச் சுப்பற்றை கொல்லேக்குள்ளதான் வந்து சேர்ந்திருக்கிறோம். ஆம் பெல்ஜியத்துக்குள்ளேதான்.

பொலிஸுக்குப் பயந்தோம். பிடித்தானென்றால் அந்த நாட்டுக்குள்ளேயே அகதியாய் அலைக் கழிப்பானே. பயம்தான். ரயில் பிடித்து மீண்டும் முதல் நாள் நின்ற அதே வீட்டுக்கு ஏஜென்டிடம் வந்து சேர்ந்தோம். இது ஒன்றும் புதினமில்லை ஏஜென் டுக்கு. எனக்கு ஏதோ பெரிய பாடாக இருந்தது.

சமைக்கச் சொன்னான்; சமைத்தோம். சாப்பிடச் சொன்னான்; சாப்பிட்டோம். அசதி மிகுதியால் படுத் துக் கிடந்தோம். நித்திரை வந்தது.

முதல் நாள் செவ்வாய்க்கிழமை. அன்றைக்கு புதன். நித்திரையில் வந்து எழுப்பினார்கள். அவசர மாய் கழிசானைப் போடுங்கோ. என்ன இழவு இது. கழிசானுக்கு மேலால் கழிசான். ஷேட்டுக்கு மேலால் இன்னும் 3 ஷேட்டுகள் போடவேண்டாமா? அதுதான் 'பை' ஒன்றும் கொண்டு போக விடமாட் டார்களே. வேறென்ன செய்வது. அங்கை போய் என் னத்தைப் போடுறது. நான் இவற்றை எல்லாம் போட முதல் இன்னும் நாலு பேரைக் கூட்டிக்கொண்டு போய்விட்டார்கள். அவர்கள் இங்கிலாந்து போய்ச் சேர்ந்து 'கிறைடோன்' அகதி விடுதியில் அல்லல்ப டும் கதை தனி.

அதிருக்கட்டும். எனது பயணனுபவங்கள்தானே தொடருகிறது. தொடரட்டும் விடுங்கள்.

எங்களைக் கூட்டிக்கொண்டு போனார்கள். என் னோடு இன்னும் மூன்று தமிழர்கள். தமிழர்களைத் தமிழர்கள் ஏற்றும் தமிழர் கதை இது. அவசரமாய் வரச் சொன்னார்கள். போனோம். கொண்டு போனார் கள் காரில் இரண்டு மணித்தியாலங்கள் வரை. காரின் பின் ஆசனத்தில் 4பேரை அடைத்து ஏற்றி இருந்தார்கள். ஒருவன் எங்கள் நான்கு பேரையும் கற்கள்,முட்கள், செடிகள் ஊடாக சுமார் ஒரு மைல் தூரமளவிற்கு நடத்திக் கூட்டிக்கொண்டு போனான்.

ஒரு துறைமுகம் வந்தது. 'கென்டயினர்கள்' நிறைய நின்றன. ஆசுவாசமாய்ப் போய் ஒரு கென் டயினர் நாடாவை அவிழ்த்துவிட்டு உள்ளே ஏறும் படி சொன்னான். ஏறினோம். அப்பாடா இதுவாவது இலண்டன் போகுமா? அல்லது இங்கிலாந்தின் ஏதா வது ஒரு கரையையாவது தொட்டுப் பார்க்குமா? மனவலி, முதுகுவலி அப்பாடா. ஏறினால் உள்ளே எல்லாம் எழுதும் காகிதங்கள் அல்லது அச்சடிக் கும் வெள்ளைக் காகிதங்களின் பெரிய பெரிய கட் டுகள். எங்களில் வந்த ஒரு புத்திசாலி(?) சொன்னா னாக்கும். இது இலண்டன்தான் போகிறது சந்தேக மேயில்லை. எழுதும் காகிதம் அல்லது அச்சடிக்கும் காகிதம் என்றால் இலண்டனுக்குத்தானே போக வேண்டும். அட பாவி உனக்கு எங்கேயிருந்து இந்த மூளை வந்ததடா? எனக்கு ஒன்றுமே சொல்லத் தோன்றவில்லை. படுத்தேன். சுகமாக இருந்தது. இலக்கியக்காரனுக்கு காகிதம் என்றால் அதன் மேல் படுத்தாலும் சுகம் வருமாக்கும். எனக்கு நித் திரை வரப்பார்க்கிறது. விடுகிறான்களில்லை மற்ற வன்கள். எழும்பு, உன்ரை குறட்டை எங்களையும் சேர்த்துக் காட்டிக் கொடுத்துவிடுமே; பயப்பட டார்கள். குந்திக்கொண்டு கோழித் தூக்கம் போடக்கூட விடுகிறார்களில்லை.

"அடேய் நான் ஒரு எழுத்தாளனடா! என்ரை கவிதைகளை கதைகளை போட்டு அல்லது படித்து மற்றவர்கள் என்னை மதிக்கிறார்களடா! நான் ஒரு அறிவிப்பாளரும் கூட. எடா, என்னை எப்படியெல் லாம் எல்லா இடங்களிலும் கவனித்தார்களடா."

"எழுத்தாளரும் மயிரும். இப்ப, நீ குறட்டை விடக் கூடாது. சத்தம் போட்டுப் பேசக்கூடாது. என்னண்டா லும் இப்ப நீ எங்கடை 'கென்டயினர்' கூட்டாளி. இதுக்கு சிலவைகளை நாங்கள் சொல்லுறமாதிரித் தான் கேக்கவேணும். கென்டயினரிலை போறதுக் கொண்டு சில வழிமுறைகள் இருக்கு. சத்தம் போடக்கூடாது. மூத்திரம் பெய்யக்கூடாது. கக்கூ சுக்கு போகக்கூடாது. குறட்டைவிடக்கூடாது. இப் படி... இப்படி..."

அப்படியா? கட்டுண்டேன். வழிப்படத்தானே வேண்டும். வழிப்பட்டேன்.

காலையில் கென்டெயினரைப் பூட்டிக்கொண்டு துறைமுகத்தை விட்டு வெளியில் எடுக்கிறான் சாரதி. இதாவது போகட்டுமே இங்கிலாந்துக்கு. ஒருவன் நெஞ்சை இடப்புறம் வலப்புறமாகத் தொட்டு சிலுவை யேசுவைப் பிரார்த்தித்துக் கொண்டான். மற்றைய இருவரும் கைகளைத் தலைக்கு மேல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தூக்கி கும்பிட்டுக் கொண்டார்கள். எனக்கென்னவோ லண்டன் போகும் வரை யோசனைதான். உயிருக்கும்கூட. என்னாகுமோ? எத்தனை நாளாகுமோ?

'கெண்டயினர்' துறைமுக செக்கிங் எல்லாம் முடிந்து வெளியே ஓடுகிறது புலப்படுகிறது. எண்ணி 1/2மணித்தியாலத்திற்குள் கெண்டயினரை நிற்பாட்டிவிட்டு சாரதி வந்து பின் கதவைத் திறக்கிறான். திறப்பது தெரிந்தது. ஏறி எட்டிப் பார்த்தான். நாங்கள் நால்வரும் படுத்துக்கொண்டு இருந்தோம். சாரதி எங்களைக் கண்டுவிட்டான். ஒருவன் எழும்பி சாரதியைக் கும்பிட்டான். அவனுக்கெங்கே 'கும்புடு' விளங்கப் போகிறது. எழும்பி மெதுவாக நடந்து வந்தோம். 'கெண்டயினர்' அவ்வளவு நீளம்.

சாரதி சிரித்தான். அவனை இப் பூவுலகில் நல்லவனாகப் படைத்தவன் எவனோ அவனுக்கு நயம் மிகு நன்றிகள். "எங்கே போகிறீர்கள்?" கேட்டான் சாரதி. "லண்டனுக்கு..." "ஓ மை... கோட்"

எல்லோரும் அப்படியே இருங்கள் என்றுவிட்டு பின் காகிதக்கட்டில் வைக்கப்பட்டிருந்த அவனுக்கான கடிதத்தை எடுத்து, தான் போகவேண்டிய விலாசத்தைப் பார்த்தான். "நான் பிரான்ஸ் போகிறேன். தேவையென்றால் அங்கு கொண்டு போய் விடட்டுமா?" ஆங்கிலத்தில் கேட்டான் அவன்.

"எங்களை இந்த இடத்தில் இறக்கிவிடு ராசா" நான் சொன்னேன்.

"இந்த இடம் ஆபத்து. உங்களைப் பொலிஸ் பிடிக்கும். அப்படியே இருங்கள். பாதுகாப்பான இடத்தில் விடுகிறேன். யார் கண்ணிலும் படாமல் போய்த் தப்புங்கள்."

என்ன ராசி இது? இவனும் மகா நல்லவன். உலகத்திலே உள்ள நல்ல கெண்டயினர் சாரதிகளில் இவனும் ஒருவனே! நல்ல சாரதிகளே நீவிர் வாழ்க! ஒரு நிலக்கரிச் சுரங்கம் அல்லது நிலக்கரி உலை. அதனண்மையில் எங்களை இறக்கிவிட்டு கைலாகு கொடுத்து போகச் சொன்னான். தேடிப் போய் நடையாய் நடந்து ஒரு கடை கண்டு பிடித்து கடைக்காரனிடம் அடிமாட்டுவிலைக்கு பவுண் மாத்தி பசிக்கும் தாகத்திற்குமாய் 'கோலா' குடித்துவிட்டு ரயில் நிலையம் தேடி பணம்மாற்றி பயணச்சீட்டு எடுத்துக்கொண்டு அந்த ஏஜென்டின் வீட்டுக்கு வந்தடைந்தோம். இரண்டாவது பயணமும் பாழ்.

"எனைத் துணையர் ஆயினும் என்னாம் தினைத் துணையும்
தேரான் பிறன் இல் புகல்?"

வள்ளுவனே! நீ என்னத்தை நினைத்துக் கொண்டு சொன்னாயோ? இந்த நேரத்தில் ஞாபகத்துக்கு வந்து தொலைக்கிறதே இது! மீண்டும் பெல்ஜியத்துக்குள்ளேதான்.

எல்லாக் கனவுகளுக்கும் மண். எங்கள் பூமியில் இருந்தே உயிரை விட்டிருக்கலாம். ஏனிந்த இங்கிலாந்து? அரசியல் அகதிகளுக்கு அங்கே என்ன சொர்க்கமா தரப்போகிறார்கள்? முதுகு வலிக்கிறது. ஒவ்வொரு எலும்பு மூட்டுகளுக்குள்ளாலும் வேதனை பீறிடுகிறது. பசியாலும் தாகத்தாலும் வலுவிழந்து போனேன். 'கெண்டயினர் பயணம்' என்றால் என்ன இலேசானதா? 21பேர் ஒரு முறை மாதக் கணக்காக பயணம் செய்யும் கப்பல் கெண்டயினர் ஒன்றில் இருந்து ஒன்றாகவே செத்துப்போனார்களாமே. இது எல்லாம் கதைகளல்ல. தினம் நடைபெறும் உண்மையான கண்ணீர் அவலங்கள்தானே.

ஓ கவிஞர்களே! சர்வதேசப் பிரபலங்களே! ஒரு முறையாவது அனுபவித்துப் பாருங்கள். "பிச்சை வேண்டாம். நாயைப் பிடி" என்பீர்கள். ஒவ்வொரு தமிழனும் இப்படித்தான் அனுபவிக்கிறானா? என்னரிய தாய் நாடே, ஏனெம்மை விரட்டி வதைத்து வேதனைப்படுத்துகிறாய்? சமாதானத்தின் காவலர்களே சொல்லுங்கள்! இன்னும் சில காலங்களுக்குள் இலங்கையை குட்டிச் சோமாலியாவாக்க பிரயத்தனப்படும் யுத்தப் பிசாசுகளே! உங்களுக்கெங்கே தெரியும் இந்த வேதனைகள்? புதுச் சட்டமாம் இலங்கைப் பாராளுமன்றத்தில்...

ஐரோப்பிய மற்றும் நாடுகள் திருப்பியனுப்பிய அகதிகளை கட்டுநாயக்க விமானநிலைய விசாரணைக் குழுவிடம் ஒப்படைத்து 2 லட்சம் ரூபா அபராதம் அல்லது ஐந்து வருட சிறைத் தண்டனை. அட பாவிகளா!

பெல்ஜியம் ஏஜென்ட் வீட்டில் வைத்து வழமையான சாப்பாடு. பின் அசதி மிகுந்த தூக்கம். 24 மணித்தியாலத்திற்கொரு தடவையாவது சோறு தின்னக் கிடைத்த பாக்கியமாவது கிடைத்தது பாருங்கள்.

வியாழன், மூன்றாவது நாளிது. வழமைபோல் இரவு 11மணிபோல் வந்து எழுப்பினார்கள். நாங்கள் நான்கு பேரும் வாரிச் சுருட்டிக்கொண்டு எழும்பி ஓடினோம். வழமையாக அல்லாமல் கார் ஓடிக் கொண்டே இருக்கிறது. எங்கே போகிறதோ? அட எனக்குப் பரிச்சயமான இடம் வருகிறதே. 'அம்ஸ்ரடம்' பின்னர் 'றொட்டடம்'. ஆ.. இது... ஒல்லாந்து. இடையில் வேறொரு காரில் மாற்றப்படுகிறோம். ஓடி... ஓடி... உலகப் பிரசித்தி பெற்ற துறைமுகத்துக்கு அருகில் கொண்டு வந்துவிட்டார்கள்.

ஏதோ பெரிய அதிரடிப்பாணியில் எங்களுக்குப் பயிற்சி தரப்பட்டது. தமிழ் ஏஜன்ட் ஒரு துருக்கிக் காரனுக்கு பொறுப்புக் கொடுத்திருந்தான். கீழே மாகடல். கப்பல்கள் நிற்கின்றன. மேலே கம்பி வேலி. அப்பாலே கெண்டயினர்கள் அடுக்கி நிற்கின்றன. சரிவாய் கட்டிய சீமெந்துப் பாதையில் குனிந்து கொண்டு அரைமைல் தூரம் நடக்கவேண்டும். பின்னர் மேலேயும் ஒரு கம்பி கீழேயும் ஒரு கம்பி. சுமார் 20மீட்டர் வரை கம்பியில் நடக்கவேண்டும். தவறி விழுந்தால் கீழே ஆழ்கடல். அவ்வளவுதான் யாரும் காப்பாற்றமாட்டார்கள். கடலில் மூழ்கி செத்துப் போகவேண்டும். ஒரு மாதிரி ஆபத்துகள் தாண்டி வந்தால், ஒருபுறம் எங்களுக்கு நல்ல காலம். மறுபுறம் ஏஜென்டுக்கு இலங்கைப் பணப் பெறுமதிப்படி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தலைக்கு ஒரு லட்சத்து பதினேழாயிரத்து ஐநூறு ரூபாய் தேறுகிறது.

எட்டிப் பார்த்தான் எங்களை அழைத்து வந்தவன். செக்கியூரிட்டி எங்கே போனான்? அவனின் அறைமட்டும் திறந்திருக்கிறது. ஆளில்லை. ஒண்டுக்கு ரெண்டுக்கு போயிருப்பானாக்கும். வெள்ளைக்காரனே! உன் கண்ணில்கூட விரலைவிட்டு ஆட்ட எப்படிப் பழகிக்கொண்டான் என்னவன்?

வேலி ஏறிக் குதித்து ஒரு கென்டயினர் அருகில் உயிரைக் கொடுக்காமல் கொடுத்து வந்தாயிற்று. எல்லோரையும் அதன் கீழே படுக்கச் சொன்னான்; ஏறினோம். அப்படி ஏறுவது, மற்றும் ஏற்றுவது கிரிமினல் குற்றமாமே. எங்கள் நால்வரோடு சேர்த்து ஒரு அல்பானியன். இன்னுமொரு பாகிஸ்தானியன். மொத்தமாக ஆறுபேர். உள்ளே ஏறினால் கென்டெயினரில் கொக்கோக்கோலா ரின்களை பெட்டி பெட்டியாக நிரப்பி அடுக்கி இருந்தார்கள். ஒரு மணித்தியாலமளவில் லண்டன் போவீர்கள். சொல்லிவிட்டு கென்டயினரை முதல் இருந்ததுமாதிரிக் கட்டிவிட்டு அவன் போய்விட்டான். இருக்க இடமில்லை. கிடைத்த சிறிய இடைவெளிகளைப் பகிர்ந்துகொண்டு இடுப்பெலும்பு நோக நோக இருந்தோம். பசித்தது; உணவில்லை. தாகித்தது. "கொக்கோக்கோலாவை ஏற்றியனுப்பிய முதலாளியே! அல்லது நிறுவனமே! எங்களை மன்னித்து விடுங்கள். குடித்துக் குடித்தே தாகம் தீர்த்தோம். இரவும் பின்னரொரு பகலும்.

அடுத்தநாள் பகல் 12மணியளவில் கென்டயினரை எடுத்துக் கப்பலில் ஏற்றுவது தெரிந்தது. அதென்ன அப்படிச் சத்தம்? இடி இடியென... கப்பல் எப்படி இருக்கும்? எங்களுக்கெல்லாம் இருட்டு மட்டும்தானே துணை. என்னது ஒரு மணித்தியாலமா? கப்பலே எங்கு போகிறாய்? எண்ணிக்கை தவறாமல் 13மணித்தியாலங்கள் போகிறது கப்பல்.

இதென்ன இங்கிலாந்தைச் சுற்றிக்கடல் ஊர்வலமா? அதில் ஒருவன் சொன்னான்: கொக்காக்கோலாவை ஏற்றிக்கொண்டு கப்பல் என்ன சவூதிக்கா போகிறது? ஆருக்குத் தெரியும். மாலுமிகளே! உங்களுக்குத் தெரியுமா இங்கு ஆறு உயிர்கள் ஆலாய்ப் பறப்பதை?

ஒருவாறாக கப்பல் ஒரு துறைமுகத்தை அருகணைப்பது விளங்குகிறது. நங்கூரம் இறக்கப்படுகிறதோ என்னவோ. சத்தம் கர்ணகடூரமாக... எங்கே நிற்கிறோம்? தெரியவேயில்லை. கென்டயினரை ஒருவாறாகக்கொண்டு வந்து துறைமுகக்கரையில் நிற்பாட்டினார்கள். நேரம் அதிகாலை 3.15. காத்திருந்தோம் வெளியில் எடுக்கும்வரை; பகலாச்சு. மற்றக் கென்டயினர்களை வாகனம் வந்து கொண்டு போகிறது தெரிகிறது. நாங்கள் இருக்கிறோம். இருக்கிறோம் இருந்துகொண்டேயிருக்கிறோம். எடுக்கிறார்களில்லை. மனமும் சலித்துவிட்டது. பசியை நீக்க எந்தக் 'கோலா'வால் முடியும்? பொறுமை இழந்து அந்தப் புத்தி அல்பானியனுக்கு வந்தது. றெக்ஸீன் திரையை வெட்டி இறங்குவோம். சரியென்றோம்.

அல்பானியனும் பாகிஸ்தானியனும் முதலில் இறங்கிப் போய்விட்டார்கள். தமிழர்கள் நாம் நால்வரும் இறங்குகிறோம். முதலில் போன இரண்டு நண்பர்களும் பொலிஸில் மாட்டுப்பட்டுவிட்டார்கள். துறைமுக கமெரா எங்களைக் காட்டிக்கொடுத்துவிட்டது. அல்பானியன் பிடிபட்டது பின்னர் தெரிய வந்தது. பாகிஸ்தானியன் எங்கேயோ வெளியில் ஓடித் தப்பிவிட்டான். பிடிபடவேயில்லை. சரி, கமெராக்கண்ணில் மண்ணைத் தூவிவிட்ட பாகிஸ்தானியனே நீயாவது எங்காவது போ! போய் நல்லாயிரு!

அட இங்கிலாந்தின் ஒரு மூலைக்கு வந்துவிட்டோமையா!

வெள்ளைக்காரனுக்கு வணக்கம்!

இன்முகத்துடன் வரவேற்க உனக்குத் தெரிகிறது! அதென்ன துறைமுகத்தைச் சுற்றி ஜீப்பில் எங்களை வைத்து ஊர்வலமா போகின்றாய்?

"வாருங்கள்!" ஆஹா என்ன வரவேற்பு?

"என்ன வேண்டும் உங்களுக்கு?"

"அகதி அந்தஸ்து தா!"

"அதனைத் தீர்மானிக்கவேண்டியது அதிகாரிகள்!"

"உங்களுக்குப் பசிக்கிறதா?"

"ஆமாம். கடும் பசி. கொண்டு வா வெள்ளைக்காரத் தோழனே! மணக்க மணக்கக் கோழித் தொடை, உருளைக்கிழங்குத் துண்டுகள் சிப்ஸ், அட சனியனே மீண்டும் 'கோலா'வா? சரி தா!

மிளகுப்பொடி, உப்புப்பொடி - யார் பெத்த மகனோ?

யார் வீட்டுப்பணமோ? நன்றியடா நன்றி.

எங்கள் தாய்பூமியை வைத்து 150 வருடங்களாக வளங்களைச் சுரண்டி எடுத்து நாசமாக்கினாயே. அதற்கான நன்றிக்கடனா! அல்லது வேறென்ன? அட எங்கள் அயல்தேசத்து விலைமதிக்க முடியா கோடிக்கணக்கான பெறுமதியுடைய 'கோஹினூர் வைரத்தை' வைத்திருக்கின்றாயே அதற்காகவா?

புகைப்படம், கைவிரலடையாளம், கேள்விகள் முடிந்தாயிற்று. போங்கள்! எங்காவது இங்கிலாந்தில் வாழுங்கள். பின்னரழைப்போம் அகதிகளே!

அனுபவ வேதனைகளைப் பகிர்ந்தாயிற்று. போக்கிடம் தேடி இப்படித்தானே எம்மக்கள் அலைகின்றனர். வாழ்வின் அந்திமங்களிலாவது தாயகமே அமைதிபெறமாட்டாயா?

எங்கே அந்த ஆயுத வியாபாரிகள்? தீர்வுப்பொதிக்காரர்கள்! யுத்தப்பிரியர்கள் இவர்களைத் தாண்டிக்கொண்டு எந்த ஆண்டில் எம் தாயகம் நோக்கிய பயணப்பாடு அமையப்போகிறது?

[குறிப்பு: அரசியல் அகதிகளை மனிதவுரிமைகள் என்ற போர்வை போர்த்திக் கொண்டு நசுக்கும் ஐரோப்பிய சமூகத்தின் போக்கை இன்னொருகால் எழுதுகிறேன்.] ■



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சாதீயம்

## [சில சிந்தனைகள்]

பி. நடராசன்

### I

இலங்கையின் மிகக் கொடிய சாதிக்கொடுமைக்குரிய தளமாக யாழ்குடாநாடே திகழ்ந்து வருகின்றது.

எம். ஆர். ஸ்டாலின்
எக்ஸில் 1 – பக்.6

கட்டுப்பாடுகள் நிறைந்த இக்கட்டுக்கோப்பிலிருந்து விடுபட்டு எப்படியோ கல்வி வசதி பெற்று மேனிலை எய்திய உயர்நிலையற்ற சாதியினருடன்(...) உயர்சாதியினர் பிறபிரதேசங்களில் சம வாழ்வு நடத்தியும் வந்தனர். மீண்டும் அந்த விரிவற்ற சமுதாயத்துக்குத் திரும்பும்பொழுது பழைய படி சம்பிரதாயங்களைப் பேணி வந்தனர். இதனால் தான் "ஆனையிறவுக்கங்காலை எல்லாரும் ஒண்டு தான்" என்று தொடர்வழக்கில் வரலாயிற்று. (இக் கருத்து உண்மையான யாழ்ப்பாணத்தின் சமூக வெல்லை ஆனையிறவே என்பதையும் காட்டு கிறது.)

பேராசிரியர் கா. சிவத்தம்பி
ஈழத்தில் தமிழிலக்கியம் 1978 பக். 174

'யாழ்ப்பாணத்திலை எவடம்?' இந்தக் கேள்வியை அநேகமாகப் புலம்பெயர்ந்து வாழுகின்ற தமிழ்மக்கள் எல்லோருமே சந்தித்திருப்பார்கள்.

'மரங்கொத்தி'
எக்ஸில் 1 – பக். 9

### II

சாதி ஒடுக்குமுறை இலங்கையிலும் இந்தியாவிலும் இந்துத்துவ கலாச்சாரம் பரவியுள்ள தென்கிழக்காசிய நாடுகள் சிலவற்றிலும் மட்டுமே காணப்படுகின்ற ஒரு சமூகக்கட்டுமானமாகும். 5000 ஆண்டுகளுக்கு முன் வர்ணாச்சிரம தர்மம் என்ற மனிதப் பிரிவுகள் இன்றுவரை கோலோச்சுகின்றன.

வட இந்தியாவை வென்ற ஆரிய வம்சத்தவரிடம் இருந்து ஆரியரல்லாத சுதேசிகளை வேறுபடுத்திக் காட்டவே 'வர்ணம்' ஏற்பட்டது.

எக்ஸில் பக். 5

மிகப்பழைய நூலாகிய இருக்குவேதத்தின் முதல் ஒன்பது மண்டிலங்களிலும் சாதிவேற்றுமை பற்றிய குறிப்பு ஒன்றுமே காணப்படவில்லை. பத்தாம் மண்டலம் எழுதப்பட்ட காலத்திலேதான் முதல்முதல் நால்வகை மக்கட்பிரிவு தோன்றுவதாயிற்று. இவ்வகுப்பினார் உயர்ந்தோர் இவர் தாழ்ந்தோர் என்னும் வேறுபாடு தோன்றிற்றில்லை. உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாது வேண்டப்படும் நால்வகைத் தொழில் செய்வோர் நால்வேறு வகுப்பினராகக் கொள்ளப்பட்டனர்.

மறைமலையடிகள்
சாதிவேற்றுமையும் போலிச்சைவரும் – பக். 5

அந்நால் வகுப்பினரும் இறைவனுக்குப் புதல்வர். பிராமணன் - வாய், ராஜந்யன் - தோள், வைசியன் - தொடை, சூத்திரன் - பாதம்.

இருக்கு 10ஆம் மண்.

12 பழைய உபநிடதங்கள் உண்டான காலத்திலுங் கூடப் பிறப்பளவில் சாதிவேறுபாடு சொல்லப்படவில்லை.

சுக்கில யசுர்வேதம், தைத்திரீய பிராமணத்திலும் பல்வேறு தொழில்களையும் செய்யும் பல்வேறு மக்கட் கூட்டத்தின் பெயர்கள் மட்டுமே எடுத்துரைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றுட் சாதிவேறுபாடுகளும் உயர்வு இழிவுகளும் பேசப்படவில்லை.

மறைமலையடிகள் பக். 10

சாதிவேற்றுமை என்பது ஒன்றில்லை. உலக முழுவதும் நான்முகனாற் படைக்கப்பட்டமையால் தொடக்கத்தில் எங்கும் பிராமணரே இருந்தனர். தொழில்களினாலேயே சாதிகள் உண்டாயின.

மகாபாரதம் சாந்திபாவம்
பிருகுமுனிவர் கூற்று

சாதிவேற்றுமையினை முதற்கண் உண்டாக்கினவர்கள் மருதநிலம் அல்லாத மற்றைநிலத் தமிழ் மக்களும் அல்லார். புறம்பேயிருந்து வந்த ஆரியமக்களும் அல்லர்.

உழவுத் தொழிலையறிந்து நடத்திய தமிழ்வேளாளர்களே தாம் சென்ற இடங்கள் தோறும் சாதி வேற்றுமையினை உண்டாக்கினர். வேளாளர் மலிந்த இத் தென்தமிழ்நாட்டின் கட் சாதிவேற்றுமையின் கொடுமை காணப்படுமாறுபோல் வடநாட்டின் கட் சாதிவேற்றுமை அத்துணைக் கொடுமையாகக் காணப்படுகின்றிலது.

மறைமலையடிகள் பக். 45

### III

எங்கேனும் யாதாகிப் பிறந்திடினும்
தன்னடியார்க்கு
இங்கே என்றருள் புரியும் எம்பெருமான்

–சம்பந்தர்

ஆவுரித்துத் தின்றுலையும் புலையரேனும்
அவர் கண்டீர்
நாம் வணங்கும் கடவுளாரே

– அப்பர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தில்லைவாழ் அந்தணர் தம்
அடியார்க்குமடியேன்
திருநீலகண்டத்துக் குயவனார்க் கடியேன்
—சுந்தரர்

சாத்திரம் பல பேசும் ?ழக்கர்காள்
கோத்திரமுங் குலமுங் கொண்டென் செய்வீர்
—அப்பர்

சாதி குலம் பிறப்பென்னும் சுழிப்பட்டுத்
தடுமாறும்
ஆதமிலி நாயேன்
—மாணிக்கவாசகர்

சாதி இரண்டொழிய வேறில்லைச்
சாற்றுங்கால்...
...இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்
—ஔவையார்

பார்ப்பானுக்கு மூத்தான் பறையன்
கேட்பாரில்லாமற் கீழ்ச்சாதியாயினான்

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்
—வள்ளுவர்

ஒழுக்கமுடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்.
—வள்ளுவர்

## IV

எல்லா மக்களையும் தோற்றுவித்த இறைவனாகிய தம் அப்பன் அமர்ந்திருக்கும் பொதுஇடமாகிய கோயிலிற் சென்று மக்கள் எல்லோரும் மனங்கரைந்து வணங்கவேண்டியமாயிருக்க அப்பொது இடத்திலும் பொல்லாத சாதிவேற்றுமையை நுழைத்து இறைவன் படைத்த மக்களுட் பெரும்பாலாரைத் தாழ்ந்த சாதியாக்கி அவர்களைக் கோயிலினுள் நுழையவிடாத கொடுஞ் செய்கையினுங் கொடியது வேறு யாதிருக்கின்றது?

மறைமலையடிகள் பக். 90

## சாதியாசாரம், சமயாசாரம் இல்லாத எழுந்துச் சாதியாற் பயன்யாதோ?

சைவசமயக் கிரியா விஷயத்தில் எனக்குத் தோன்றுவன சிலவற்றை வெளிப்படுத்துகிறேன். சைவக்குருமார்களும் சைவ பண்டிதர்களும் சிவாகமப் பிரமாணங்கொண்டு விவாதித்து உண்மையை நிறுத்தக்கடவர்கள். உண்மையென்று நிறுத்தப்பட்டவைகளைச் சைவசமயிகள் எல்லோரும் கைக்கொண்டு நடக்கக் கடவர்கள்.

நாவிதரோ வண்ணாரோ உயர்ந்த சாதி? நாவிதரோ கரையாரோ தாழ்ந்த சாதி? கரையாரிற் றாழ்ந்த சாதியர் நாவிதரென்றால் செட்டி வேளாளர் கரையாருக்குச் சவரம் பண்ணுகிற நாவிதரைத் தள்ளலும் கரையாருக்குச் சவரம்பண்ணாத நாவிதரைக் கொள்ளலும் என்னையோ? இது செய்யும் செட்டிவேளாளர் கரையாருக்கு தீட்சை அந்தியேட்டி செய்யும் குருமாரைத் தள்ளாது கொள்வதென்னையோ?

சிவபதப்பேறு சிவநிந்தையை வெறுத்த நாவிதருக்கோ? சிவநிந்தையை வெறுக்காது தழுவிய சைவகுருமார், பிராமணர், வேளாளர் என்னும் இவர்களுக்கோ?

பிராமணர் முதல் பறையர் ஈறாகிய எல்லாச் சாதியாருள்ளும் சைவர் உண்டன்றோ?

இங்கே நளவருக்குள்ளே சிலர் கள்ளுக்குடிப்பதைவிட்டும் பறையருள்ளே சிலர் மாட்டிறைச்சி உண்பதைவிட்டும் திருத்தமடைகிறார்கள். இவர்கள் யோக்கியரா? மாட்டிறைச்சி தின்று சாராயம் குடிக்கும் லலாட சூனியர்களாகிய வேளாளர்களும் இவர்களுக்கு அந்தியேட்டி, கல்யாண ஓமஞ்செய்யும் சைவகுருமார் பிராமணர் யோக்கியரா?

சாதியாசாரம் சமயாசாரத்தால் பயனில்லையெனில் தங்களை உயர்ந்த சாதியாரென்று பாராட்டிக் கொள்வதேனோ?

—ஆறுமுகநாவலர்



ஓவியம்: SUBHA DE



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பெரியாரியம்

ரதன்

1909ம் ஆண்டு ஒன்பது வயதுக்குழந்தைக்கும், 12வயது வாலிபனுக்கும் திருமணம் நடைபெற்றது. சுமார் 80 நாட்களின் பின்னர் மாப்பிளை இறந்து விட்டார். பெண் கதறத் தொடங்கினாள், "நானா கேட்டேன் திருமணம் வேண்டும் என". பெண் பெரியவளானதும் அப்பெண்ணுக்கும் ஓர் இளைஞனுக்கும் திருமணம் நடைபெற்றது. குடும்பம் அதிர்ந்தது. பெண்ணின் தாயார் தூக்கில் தொங்கப்போகுமளவுக்கு அதிர்ச்சியாக இருந்தது. திருமணத்தை நடாத்தியவர் குடும்பத்திலிருந்து விலக்கப்பட்டார். அவர் வேறு யாருமல்ல ஈ.வெ.ரா. பெரியாரே. சில நூற்றாண்டுகளுக்கு முன்பாக கன்னடத்திலிருந்து பலிஜா நாயுடு வகுப்பினர், தமிழ்நாடு வந்து குடியேறினர். பின்னாளில் இவர்கள் நாயக்கர்கள் என அழைக்கப்பட்டனர். இக்குடும்பத்தில் 1879ம் ஆண்டு செப்டெம்பர் 17ம் நாள் பெரியார் பிறந்தார்.

இங்கு ஈ.வெ.ரா. பெரியார் கூறிய சில கருத்தாக்கங்களைப்பற்றிச் சில கருத்துகளைக் கூற விரும்புகின்றேன். இத்தகவல்கள் யாவும் எனக்குக் கிடைத்த நூல்களின் அடிப்படையிலேயே கூறுகின்றேன். சில கருத்துகள்பற்றி மேலதிக ஆய்வுகள் தேவை.

ஈ.வெ.ரா. வாழ்ந்த காலப்பகுதி, அக்காலத்தையொட்டிய நிகழ்வுகள் என்பன மிகவும் முக்கியமானவை. அவரது இயக்கம், இயக்கத்துக்கான கரு, கருவைச் சுற்றி அல்லது கருவிற்கான கருத்துக்கள், நடைமுறைகள் என்பனபற்றி நாம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

பெரியாரியம் என்பது திராவிட இயக்கத்துக்கான கரு. பெரியாரியம் முக்கியமாக சில அம்சங்களைக் கொண்டுள்ளன.

1. திராவிடம் - திராவிடநாடு
2. பெண்விடுதலை
3. மதம்-நாத்திகம்-பகுத்தறிவுவாதம்
4. ஆரியம் - பார்ப்பனியம்
5. மொழி

இவற்றில் ஆரியம் - பார்ப்பனியம் என்பனவற்றிற்கான தீர்வே திராவிடம் - திராவிடநாடு என்பதாகும்.

பெரியாரியம் சம்பந்தப்பட்ட இயக்கங்கள் கருவை நோக்கி நகர்ந்தனவா? அல்லது விலகிச் சென்றனவா?

## பெண்விடுதலை

பெண்கள் அடிமைக்கெதிராக மிகவும் தீவிரமாகவும் தெளிவாகவும் பல கருத்துக்களைப் பெரியார் முன்வைத்துள்ளார். பெரியாரது சமகாலத்துள் வாழ்ந்தோரில் பாரதியார் போன்ற சிலரே பெண் விடுதலைபற்றி நல்ல கருத்துக்களைக் கூறியுள்ளனர். பல நல்ல திட்டங்கள் நிறைவேற்றப்படுவதற்கு பெரியார் துணைபுரிந்துள்ளார். உதாரணமாக தாசிகள் ஒழிப்புத் திட்டம், சிறுவர் திருமணத்தடை போன்ற பல. அத்துடன் நின்றுவிடாது விதவைத் திருமணம், கலப்புத் திருமணம் போன்றவற்றை நிகழ்த்தி ஒரு இயக்கமாகவே இயங்கியுள்ளார். பெண்களுக்கு கணவனின் சொத்தில் சமபங்கு இருக்கவேண்டும், குடும்பச்சொத்தில் சமஉரிமை பெண்ணுக்கும் வழங்கப்படவேண்டும், விதவைப்பெண்ணுக்கு கணவனின் சகல சொத்துக்களும் வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார். இவை அவளுக்கு பொருளாதார சுதந்திரத்தை வழங்குகிறது என்றார்.

பெண்விடுதலையின் முதல் எதிரி 'கற்பு'. இது ஆணுக்கும் பெண்ணுக்கும் சமம் என்றார். பெண் விடுதலைபற்றிய பெரியாரின் சில கருத்துக்கள். 'பெண்கள் சுதந்திரம் வேண்டுமென விரும்புபவர்கள். பெண்களை நன்றாகப் படிக்கவைக்கவேண்டும். வாழ்க்கைக்கு ஏதாவது ஒரு தொழிலை கற்றுக் கொடுக்கவேண்டும். அவளாகவே பார்த்து தகுந்த ஒருவனைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளவேண்டும். கன்னிகாதானம், கலியாணம், தாராமுகூர்த்தம் என்ற வார்த்தைகள் அகராதியில்கூட இல்லாமல் ஒழியவேண்டும்.'[1]

கற்பு என்பதை இவர் வெறும் உடலியல்ரீதியான பண்பாகக் காணாமல் சமுகரீதியானதாகக் காண்கிறார்.

'பெண்கள் எப்படி வேண்டுமானாலும் ஒழுக்கயீனமாக நடந்து கொள்ளலாமா என்று கேட்பவர்களுக்கு பதிலாக பின்வருமாறு கூறுகிறார். கணவன்-மனைவி என்பதாக இருவர் சேர்ந்து இல்வாழ்க்கை நடத்துவதாகச் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்பலனாகவோ, காதலர்-காதலி என்கிற முறையில் இருவரையும் சமநிபந்தனை-கொண்ட கற்பு என்னும் சங்கிலி எவ்வளவு இறுகக் கட்டினாலும் அது எவ்விதத்திலும் பெண்விடுதலைக்கு இடையூறாக இருக்காது என்கிறார்.'[2]



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மிகவும் முக்கியமாக கர்ப்பத்தடையை வலியுறுத்துகிறார். குழந்தை பெறுவது பெண்ணுக்குரிய சுதந்திரம். அதை அவளே தீர்மானிக்க வேண்டும் என்கிறார். இதற்கும் மேலாக பெண்கள்பிள்ளைப் பேறு அடையவேண்டியதில்லை என்கிறார். இக்கருத்து இந்தியாவைப் பொறுத்தவரை பொருளாதாரரீதியாக மிகவும் முக்கியமானதாகும். ஆனால் இது குடும்பச் சிதைவிற்குக் காரணமாகிவிடும் என சில விமர்சகர்கள் கருத்துத் தெரிவிக்கிறார்கள்.

ஆனால் உடன்கட்டை ஏறுவதை நிறுத்தி சட்டம் இயற்றப்பட்டபோது பெரியார் பின்வருமாறு கருத்துத் தெரிவித்தார்.

'மூடத்தனத்தின் முடைநாற்றம் வீசுகின்ற சமுதாயத்தில் கைம்பெண்ணின் மறுமணம் மறுக்கப் பட்டதனால் மகளிர் ஆயுளுக்கும் சொல்லொணாத் துன்பம் அடையவேண்டியதாகிறது. அதைவிட உடன்கட்டை ஏறினால் துன்பம் விரைவில் தீர்ந்துவிடும். எனவே இச்சட்டம் மகளிருக்கு நன்மையைத் தரவில்லை.'[3]

விதவைத் திருமணத்தை வலியுறுத்திய பெரியார் இவ்வாறான கருத்துக் கூறியது ஆச்சரியமே.

'பெண்களுக்குக் கல்வியளிப்பது நாட்டு விடுதலையைவிட முக்கியமான தேவையாகும்.'[4] என பெரியார் கூறியுள்ளார். இக்கருத்து பெரியாரியத்தின் கருவைத் தெளிவுபடுத்தும் ஒரு கருத்தாகும்.

பெரியாரின் காலகட்டத்தில் பெண்விடுதலை அல்லது அநீதிக்கெதிரான குரல் கொடுத்தல் என்பன அத்தியாவசியமாக இருந்தது. இதனை செயலில் காட்டியுள்ளார் பெரியார்.

உதாரணமாக '1921ம் ஆண்டு 2 631 788 பெண்கள் முப்பது வயதுக்கும் முன்பாக விதவைநிலையை அடைந்துள்ளனர். 11 892 சிறுமிகள் 5 வயதுக்குள்ளாக விதவைநிலையை அடைந்துள்ளனர். 85 037 பெண்கள் 5-10 வயதுக்குமிடையில் விதவைநிலையை அடைந்துள்ளனர்.'[5]

## ஆரியமும் திராவிடமும்

தமிழ்மொழி, கலாச்சாரம் என்பன ஆரியரின் வருகையால்தான் பாதிக்கப்பட்டுள்ளது. மூடத் தன்மை கொண்ட மொழியாகவும் பண்பாடாகவும் மாற்றியமைக்கப்பட்டுள்ளது என்பது பெரியாரின் கருத்து. இக்கருத்தை நிறுவுவதற்கு சில வரலாற்றுக் கருத்துக்களைப் பார்ப்போம்.

மொஹஞ்சதாரோ, ஹரப்பா நாகரீகம், இந்த நாகரீகம் தென்னிந்தியர்களுக்குரியது என்பது ஒரு சாராரின் கருத்து அல்லது இதன் தொடர்ச்சியான நாகரீகம் தென்னிந்தியாவில் நிலவியது என்பது இவர்கள் மேலும் கூறும் கருத்து. இந்த நாகரீகத்தில் செல்வந்தர்கள் வாழ்வதற்கு ஒரு பகுதியிலும், கீழ்நிலையில் உள்ளவர்கள் வாழ்வதற்கு மற்றொரு பகுதியிலும் வீடுகள் அமைந்திருந்ததாக ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றார்கள். ஆனால் மொஹஞ்சதாரோ, ஹரப்பா நாகரீகத்துக்கும் தென்னிந்திய நாகரிகத்துக்கும் இடையில் தொடர்புகள் இருந்தமைக்கான ஆதாரங்கள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை. ஆனால் மொஹஞ்சதாரோ, ஹரப்பா நாகரீகத்தில் நாகரீகம் இருந்தது. ஆரியத்தின் வருகையின் பின்னரே நாகரீகம் வளர்ந்தது என்பது தவறு.

'ஆரியர்கள் இந்தியாவிற்குள் குடியேறியபொழுது சிந்துவெளி மக்களுடைய நாகரீக அமைப்பைவிட தாழ்ந்த அமைப்பிலேயே அவர்களுடைய நாகரீகம் இருந்தது.' என்கிறார் நம்பூதிரி பட்.[7] மேலும் அவர் கூறுகையில் 'சிந்துவெளி நாகரீக தடயங்களில் காணப்படுகிற எழுத்து வடிவமும், அது பிரதிநிதித்து வப்படுத்துகிற மொழி, இலக்கியம் ஆகியவற்றை ஆரியர்கள் பயன்படுத்தியிருக்கவேண்டும். வேதங்கள் உபநிடதங்கள், புராண இதிகாசங்கள் ஆகிய வைகளின் வளர்ச்சியில் இவைகளும் முக்கிய பங்காற்றி இருக்கவேண்டும்.' என்கிறார்.[8]

ஆரிய திராவிடர்களுக்கிடையிலான யுத்தங்கள் - யுத்தங்களின் முடிவில் யுத்தத்தில் தோல்வியுற்றோர் கைதிகளாக்கப்பட்டனர். ஆரியருக்கும் ஆரியரல் லோதாருக்குமிடையில் நிறவேற்றுமையே அவர்களுக் கிடையில் இருந்த முதல்வேறுபாடு. இதுவே ஆரம்ப கால சமூகவேற்றுமையின் அடிப்படை. அத்துடன் இவர்களுக்கிடையில் ஏற்றத்தாழ்வுகளோ, தொடக் கூடாமை, தீண்டாமை போன்றனவோ இருக்கவில்லை. இரு சமூகங்களுக்கிடையில் திருமணமும் நடைபெற்றன.

தென்னிந்தியாபற்றிய பல வரலாறு சம்பந்தமான கேள்விகளுக்கு இன்னமும் விடை கிடைக்கவில்லை.

சரித்திர முற்காலத்தில் தென்னிந்தியாவில் மக்கள் வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் உண்டு. எனினும் பின்னர் சேர, சோழ, பாண்டியர் ஆட்சிபற்றிய தடயங்களே கிடைக்கப்பெற்றுள்ளன. இவற்றுக் கிடையிலான காலங்கள் பற்றிய தகவல்கள், அகழ்வாய்வுகள் இதுவரை கிடைக்கவில்லை.

'தெய்வம் - பழந்தமிழர்களின் தெய்வம் முருகன் - வேலவன், பிற்காலத்தில் கந்தன், சுப்பிரமணியன், ஆறுமுகன் என்றெல்லாம் பெயர் பெறுகிறார். சிவனின் மகன் என்றும், தேவசேனாதிபதி என்றும் கார்த்தி கேயன் என்றும் ஆரியம் கூறும். எனினும் பல தமிழ் இலக்கியங்கள் முருகனை தாய்வழி உரிமை பெறும் திராவிட தெய்வமாகக் காட்டுகின்றன.'[9] இது பண்டைய நாட்களில் தாய்க்கு இருந்த முக்கியத்துவத்தை காட்டுகின்றன. சிவனின் வளர்ச்சியைத் தொடர்ந்து சைவசித்தாந்தம் தோன்றுகிறது.

வேலன்-கூத்து ஆடுபவரைக் குறிப்பிடுவது. இன்றும் ஆதிதிராவிடர்களுக்கிடையில் காணப்படுகிறார். ஆரம்பத்தில் கூத்து ஆடுபவரிடம் மந்திரசக்தி இருந்ததாக மக்கள் நம்பினார்கள். இறுதியில் அவர், வேலன், வேலவன், முருகக் கடவுளானார். 'முருகவழிபாட்டுமுறை, சமுதாயக் கூட்டு வாழ்க்கை அடிப்படையில் தோன்றியது.'[10] என்கிறார்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கைலாசபதி. இன்னும் ஆதிதிராவிடர் அதே பெயருடன் காணப்படுகிறார்கள்.

'பின்நாட்களில் சிவன், விஷ்ணு என்பவர்கள் வேகமாக வளரத் தொடங்கினார்கள். கலாச்சார ஒருமைப்பாட்டின் அவசியத்தில் சிவன், விஷ்ணு, கிருஷ்ணன் ஆகியோர் ஒன்றாக்கப்படுகின்றார்கள் - மகாபாரதத்தில்'[11] என்கிறார் கைலாசபதி. தனியுடைமை அடிப்படையில் பல மதங்கள் தோன்றின. அவற்றின் அடிப்படையில் சைவமும் வைணவமும் செழித்தோங்கின. சிவவழிபாடு நிலப்பிரபுக்களுக்கும் தனவந்தர்களுக்கும் உரியதாகவும், வைணவம் விவசாயம், சிறுபொருள் உற்பத்தியாளர்களுக்குரியதாகவும் இருந்தது. ஆனால் இவ்விரு மக்களுக்கிடையிலான பூசல்கள் 19ம் நூற்றாண்டுவரை இருந்தது.

சோழ இராச்சியத்தில் வேளாளர், நிலவுடைமையாளர் செல்வாக்குப் பெற்றிருந்தனர். அவர்கள் கோயில் சொந்தக்காரர்களாகவும், கோயில் சொத்துக்களை நிர்வகிப்பவர்களாகவும் இருந்தனர். யாழ்ப்பாணத்தில்கூட தஞ்சைப்பெரிய கோவிலுக்கு நிலம் இருந்தது. இன்றைய திருப்பதியைவிடக் கூடியளவு நிலபுலன்களுடன் தஞ்சைப்பெரியகோவில் இருந்தது. பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரியின் கருத்துப்படி 'மத்தியகால இந்துக்கோவில்களுக்கு நிகரான நிறுவனங்கள் உலகவரலாற்றிலேயே அருமையாகத்தானிருந்தன'[12] என்கிறார். விவசாயத் தொழிலாளிகள் ஓரளவிற்கு அடிமைகளாகவே நடாத்தப்பட்டனர். வேளாளருக்கு ஒரு நீதியும் தாழ்த்தப்பட்டோருக்கு மற்றொரு நீதியும் வழங்கப்பட்டுள்ளன. வேளாளர் குற்றம் செய்தால் தண்டனை குறைவு. இவ்வாறு தோன்றி வளர்ந்த கோயிலை சைவசித்தாந்தத்தின் ஓர் அம்சமாக காண்கிறார் மெய்கண்டார். சிவஞானபோதம். இதுவே திராவிடத்தில் தோன்றிய முதல்நூல் எனக் கருதப்படுகிறது.

பெரியாரின் முக்கிய குற்றச்சாட்டு ஆரியத்தின் வருகையாலேயே தமிழ்மொழியில் பிற்போக்குத் தனமான இலக்கியங்கள் தோன்றின என்பது. ஆனால் ஆரியரின் வருகைக்கு முன்னர் தோன்றிய இலக்கியங்களில் பிற்போக்குத்தனம் இல்லையா?

சில உதாரணங்கள் :

சிவஞானசித்தியார் செய்யுள் 270.

சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன நால்வகை முத்திகள். இது சகலருக்கும் பொருந்தும். சாலோக, சாமீப, சாரூப, சாயுச்சிய முத்திகள். சாயுச்சியம் - இந்த முக்தியை அடைந்தவர்கள் இறைவனுடன் ஒன்றறக் கலப்பார்கள். ஆனால் இது கோயிலுக்கு உட்செல்லக்கூடியவர்களுக்கே (சாதியில் கூடியவர்கள்) இந்த முக்திநிலை கிடைக்கும். சாலோக, சாமீப, சாரூப முக்தியடைந்தவர்கள் அதா வது சாதியில் குறைந்தவர்கள் மீண்டும் பிறந்தே சாயுச்சிய நிலையை அடையலாம்.[13] இது அன்றே சாதிநிலை இருந்ததைக் காட்டுகிறது.

பெரியாரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மற்றுமொரு நூல் திருக்குறள் - இதற்கு பரிமேலழகர் உரை எழுதும் போது திரித்துவிட்டார் என்பது பெரியாரது வாதம்.

குறள் 901-909 வரை, அதிலிருந்து சுருக்கமாக[14]

1. மனைவிக்கு அஞ்சி நடப்பவன் மறுமையை அடையமாட்டான்.

2. மனைவி சொல் கேட்போன் சிறந்த பயன் அடையமாட்டான்.

3. மனைவிக்கு அடங்குபவனின் ஆண்மையைவிட, பெண்மையின் நாணம் சிறந்தது.

4. மனைவியின் விருப்பம்போல் நடப்பவன் நண்பனின் குறையைத் தீர்க்கமாட்டான்.

## கிறிஸ்தவம்

இதன் வருகைக்குப் பின்னரே இந்தியாவில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. இவர்கள் தமது மதத்தை பரப்புவதற்கு மொழியை ஓர் ஊடகமாகக் கையாண்டார்கள். இதன் வெளிப்பாடாக பைபிள் போன்றவை தமிழில் மொழிபெயர்க்கப்பட்டன. உதாரணமாக, '1605ல் இந்தியா வந்து 1606இல் தமிழ்நாடு வந்து சேர்ந்த றொபட் த நொமிலி தனது பெயரையே 'தத்துவ போதக சுவாமிகள்' என மாற்றிக்கொண்டு மதத்தைப் பரப்பினார். இவரது கருத்தின்படி கிறிஸ்தவன் ஆவதால் ஒருவன் தனது பாரம்பரியத்தை இழக்கவேண்டியதில்லை என்பது.'[15]

இவ்வாறாக கிறிஸ்தவம் திட்டமிட்டு ஸ்தாபன மயப்படுத்தப்பட்டு, மக்கள் மத்தியில் மாத்திரமல்ல, அரசு இயந்திரத்தையும் கைப்பற்றியது இவர்களது வருகைக்குப் பின்னர் பல நிலச் சொந்தக்காரர்கள் ஸ்தாபனமயப்படுத்தப்பட்டனர். ஆனால் பல நூற்றாண்டுகளுக்கு முன்பாகவே இந்தியாவினுள் புகுந்த முஸ்லிம்களால் கிறிஸ்தவர்கள் அளவு வெற்றிகரமாக இலக்கியத்தில் புகமுடியவில்லை. காரணம்

1. முஸ்லிம்களின் மதவழிபாடுகள் அனைத்தும் அரபுமொழியிலேயே, சைவமதத்தைப் போன்று

2. அவர்களது நோக்கம் வணிகம். இந்த ஊடுருவல்கள் வெற்றிகரமாக நடைபெற்று முடிகையில் தோன்றியதே பிராமணியம் - பிராமணரல்லாதோர் வேறுபாடு. இதுபற்றி மகாகவி பாரதியார் பின்வருமாறு கூறுகின்றார்.'பிராமணரல்லாதோர் கிளர்ச்சி காலகதியிலே தானே மங்கி அழிந்துவிடும். உண்மையில் இந்தியாவில் சாதி பேதங்கள் இல்லை. பெரும்பாலும் சர்க்கார் அதிகாரங்களையும், ஜில்லா போக்கு, முனிசிபாலிட்டி, சர்க்கார் அதிகாரங்களை கைப்பற்று வதிலேயே இவர்கள் ஆவலுடையவர்கள். திருஷ்டாந் தமாக பிராமணருக்கு அநேகமாக அடுத்தபடி தென் இந்தியாவில் பல இடங்களில் சைவவேளாளர் என்ற வகுப்பினரே. இந்த வகுப்புக்குக் கீழே பஞ்சமர் வரை சுமார் 2000 சாதி வகுப்புகள் உள்ளன. அவர்களுக்கு மேலே பிராமணராகிய ஒரு வகுப்பினரே உள்ளனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்தநிலையில் தம்முடைய சைவவேளாளருக் கிடையில் கிளர்ச்சியில் ஈடுபடுவோர்கூட தமக்கு மேலே உள்ள பிராமணருடன் மணம்புரிந்து வாழ அவர்கள் மறுக்கிறார்கள் என்பதுதான் பிரச்ச னையே தவிர, தமக்குக் கீழே உள்ள இரண்டாயி ரத்து சில்லறை சாதியினர்களுடனும் தாம் சேர்ந்து கொண்டு வாழுமாறு யாதொரு பிரயத்தனமும் செய் யாதிருக்கிறார்கள்.'[16]

பிராமணியம் எனப்படும் பிராமணர்களது கொள்கை, நடைமுறை 'மிகவும் தவறானது'. ஆனால் இதுபற்றி கருத்துத் தெரிவித்த சில விமர்சகர்களது கருத்துக்களை இங்கு முன்வைக்க விரும்புகின்றேன்.

1. பஞ்சமர் எனப்படும் மற்றைய சாதியினரின் எழுச்சியைக் குறைக்குமுகமாகவே இது தொடங் கப்பட்டது.

2. உயர்தொழில், வர்த்தகம். நிலச்சொந்தக்கா ரார் அடிப்படையில் தோன்றிய போட்டியே இதற்குக் காரணம் என்பது அடுத்த வாதம்.

3. வெள்ளையருக்கு எதிரான போராட்டத்தைத் திசைதிருப்புவது

பெரியாரியம் முன்வைத்த பல கருத்துக்கள் இம் மூன்றையும் தெளிவாக்க உதவவில்லை. ஆனால் ஆங்கிலமொழி பற்றிய அவரது கருத்துக்கள் பல கேள்விகளை எழுப்புகின்றன என்பது உண்மையே.

## மொழி

தமிழ்மொழி ஆரியவருகையால் பாதிக்கப் பட் டுள்ளது. பிற்போக்குத்தனமான கருத்துக்களின் வருகை இவ் ஆரியத்தாலேயே ஏற்பட்டது என்பது பெரியாரது கருத்து. சரி. அப்படியாயின் அதற்குத் தீர்வு என்ன? அதையும் பெரியாரே கூறுகின்றார். பெரியாரது தீர்வுகள் :

1. மொழியில் கலந்துள்ள மத, சைவக் கூறு களை களைதல் வேண்டும்.

2. ஆங்கிலம் போதனா மொழியாகவும், ஆட்சி மொழியாகவும் வைத்துக்கொள்ளப்பட வேண்டும்.

இவர் ஆங்கிலத்தைத் தேர்ந்தெடுப்பதற்கான காரணங்கள்

1. ஒருவர் ஆங்கிலமொழியை சுலபமாகக் கற் றுக் கொள்ளலாம்.

2. ஆங்கிலமொழியைக் கற்றறிந்தவன் உலகின் எந்தப் பாகத்துக்கும் சென்று அறிவைப் பெற்றுத் திரும்பிவர இயலும்.

3. ஆங்கிலமொழி அறிவைத் தூண்டுகிற உணர் ச்சியை ஏற்படுத்தி இருக்கிறதே தவிர, அது சுதந் திரமாக சிந்திக்கின்ற தன்மைக்கு விலங்கிட்ட தாக ஒருபோதும் கிடையாது.[17]

மொழி என்பது வெறும் கருத்துப் பரிமாற்றுச் சாதனம் என்கிறார் பெரியார். தமிழ்மொழி காட்டு மிராண்டித்தனமானது. ஆனால் ஆங்கிலமொழி?

அடுத்ததாக இந்திய சுதந்திரப்போரில் பெரி யாரின் பங்கு - வெள்ளை ஏகாதிபத்தியம் பற்றி எரிந்த காலத்தில் இவரது செயற்பாடுகள் அதற்கு எதிராக அமையாமல் பார்ப்பனியத்திற்கு எதிரா கவே இருந்தது. இதற்கும் மேலாக இவரது திராவிட நாட்டு கோரிக்கை இதற்கு சாதகமாகவே இருந் தது.

திராவிடர் யார்? பெரியார் குழப்பிவிட்டார். ஆரம் பத்தில் பிராமணர் அல்லாதோர் இணைந்த பிரதே சம் (அதாவது கன்னட, ஆந்திர, கேரள, தமிழ் பிரா மணரல் லாதோர்)

பிராமணரை எப்படிப் பிரிப்பது. ஆங்கிலேயருடன் இணைந்து பிராமணரை வெளியேற்றவேண்டும். இது ஒருவகையில் யாழ்ப்பாணத்திலிருந்து முஸ்லிம் களை வெளியேற்றியதுபோல். இவரது திராவிட கோரிக்கை இரண்டாவது உலகப்போரின்போது குறைந்து போரின்பின் மீண்டும் தொடர்கிறது. எனவே அரச இயந்திரத்துக்குச் சார்பாகவே இவர் இயங்கியுள்ளார்.

பெரியார் ஆரியம்பற்றிக் கூறிய கருத்துக்கள் மேலோட்டமானவை. சரியான ஆய்வு இல்லை என் பது உண்மையே. யார் ஆரியர்? யார் திராவிடர்? யார் ஆதி திராவிடர்?

மகாபாரதத்தில் திரௌபதிக்கு 5 கணவன்மார். உண்மையைக் கூறப்போனால் 20ம் நூற்றாண்டுக்கு முன்பு படைக்கப்பட்ட படைப்புகள் அனைத்தும் மதத்துடனும், பொருள் உள்ளோரினதும், அவ் அவ் சமூக நீக்கங்களுடன் தொடர்புடையனவே. அவ்வா றாயின் சகல இலக்கியங்களும் பிற்போக்கான வையா? சமூகநீதி என்பது அன்றைய காலகட்டத் தில் ஆளப்பட்டோரால் தீர்மானிக்கப்பட்டன.

ஏன் யாழ்ப்பாணத்தில் சாதிப்போராட்டம், வெள் ளாளரியம் என்று நடைபெறவில்லை. தீண்டாமைப் போராட்டம் என்றே நடைபெற்றது. தீண்டாமைப் போராட்டம் சகல சாதிகளும் அடக்கும். எனவே பிராமணியம் என்பது பொருட்போராட்டத்துக்கான ஓர் போராட்டமே.

தலித் இயக்கத் தலைவர் சித்தலிங்கையா 'சுப மங்களா'வுக்கு அளித்த பேட்டியில் இருந்து 'பிரா மண எதிர்ப்பு என்பதை அதன் தத்துவப் பின்ன ணியுடன் புரிந்துகொள்ள வேண்டும். நிலப்பிரபு என்ப தற்காக எல்லாவிதத்திலும் அவன் பிழையானவ னல்ல. அதேபோல, கூலி, தலித் என்பதற்காக அவர் கள் கடவுளல்ல. அவர்களிலும் பிழையானவர்கள் உண்டு. நோக்கம், வாழும்முறை, யோசிக்கும் முறை ஆகியவற்றைக் கணக்கிலெடுத்தே நாம் ஒருவனை மதிப்பிடல்வேண்டும். இதன் பின்னணியில் பிராமணரல் லாதோன் - தாழ்வுமனப்பான்மையால் பிராமணிய மதிப்பீடுகளை தழுவிக்கொள்கிறான். சுரண்டல் வாதிகள் தலித்துகளை தலைமையேற் றுவதை தவிர்க்கப்படவேண்டும். அதேபோன்று பிராமணருள்ளும் பொதுவாக ஒருவனை சாதிப் பின்னணியில் வைத்துப் பார்ப்பதைவிட, அவனை அக்கறை, உழைப்பு சார்ந்து பார்த்தல் அவசியம்.

எனவே பிராமணியம், அதன் எதிர்ப்பு என்ப



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வற்றை மேலும் ஆய்வுக்குட்படுத்தவேண்டும்.

பெரியார் ஆதரவு அளித்த நீதிக்கட்சி, பல நல் விடயங்களை செய்துள்ளது. உதாரணமாக, 1917-37ம் ஆண்டுக்கு இடையில் பிராமணரல்லாதோருக்கு வேலை வாய்ப்புக்கள் இரண்டு மடங்காக உதவி புரிந்துள்ளது. ஆதிதிராவிடப் பிள்ளைகளைச் சேர்த்துக்கொள்ளாத பள்ளிகளுக்கு உதவித்தொகை வழங்குவது நிறுத்தப் பட்டுள்ளது. சென்னைப் பல்கலைக்கழகம் தமிழ்மொழிக்கு முதலிடம் தராமையால் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் தொடங்கப்பட்டது. பார்ப்பனரல்லாதோர் பள்ளிமுதல்வராக இருந்தால் கல்லூரிக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுக்க ஓர் குழு அமைக்கப்பட்டது.

பெரியார் இறுதிவரை உறுதியாகத் தனது கொள்கைப்பிடிப்புகளுடன் வாழ்ந்தார். சமூக சீர்திருத்தவாதி இவர். இவர் கூறியதுபோல் எந்த ஒரு கருத்தையும் பகுத்தறிவுடன் சிந்தித்தே முடிவு செய்யவேண்டும்.

உசாத்துணை நூல்கள் :

[1] 'தந்தை பெரியாரின் பகுத்தறிவுச் சிந்தனைகள்' பாரதி பதிப்பகம், சென்னை 17 - பக்கம் 57

[2] 'தந்தை பெரியாரின் சிந்தனைகள்' பாரதிபதிப்பகம், சென்னை 17 - பக்கம் 52

[4] 'தமிழ்க் கவிதையில் திராவிட இயக்கத்தின் தாக்கம்'- சே. இராசேந்திரன், பூமணி பதிப்பகம் சென்னை 39 - பக்கம் 198

[5] 'தமிழ்க் கவிதையில் திராவிட இயக்கத்தின் தாக்கம்' - சே. இராசேந்திரன், பூமணி பதிப்பகம் சென்னை 39 - பக்கம் 202

[6] 'பெரியாரியம்' - விடியல் பதிப்பகம், சென்னை - பக்கம் 61-62

[8] 'இந்திய வரலாறு ஒரு மார்க்சிய கண்ணோட்டம்' எஸ். நம்பூதிரிபட் - பக்கம் 41

[9] 'பண்டைத்தமிழர் வாழ்வும் வழிபாடும்' - கலாநிதி கைலாசபதி - பக்கம் 10

[10] 'பண்டைத்தமிழர் வாழ்வும் வழிபாடும்' - கலாநிதி கைலாசபதி - பக்கம் 14

[11] 'பண்டைத்தமிழர் வாழ்வும் வழிபாடும்' - கலாநிதி கைலாசபதி - பக்கம் 19

[12] 'பண்டைத்தமிழர் வாழ்வும் வழிபாடும்' - கலாநிதி கைலாசபதி - பக்கம் 162

[13] 'தமிழ்இலக்கியத்தில் மதமும் மானிடமும்', கா. சிவத்தம்பி - பக்கம் 151

[14] 'பத்தினித் தெய்வங்களும் பரத்தையர்வீதிகளும்', பிறேமா அருணாச்சலம், South Asian Books

[15] 'தமிழ்இலக்கியத்தில் மதமும் மானிடமும்', கா. சிவத்தம்பி - பக்கம் 42

[16] 'அருணன் கட்டுரைகள்', அன்னம் வெளியீடு - பக்கம் 41

[6] 'தமிழ்க் கவிதையில் திராவிட இயக்கத்தின் தாக்கம்' சே. இராசேந்திரன் பூமணி பதிப்பகம் சென்னை 39 - பக்கம் 103

# கரடியுடன் பொருதுதல்

பயத்தை வெளிக்காட்டாமல்... சும்மா
சிலிர்த்துக்கொண்டு நில்!
உன்கண்களை நேர் நோக்க விடாதே - எதிரி
நீ 'ரெளத்ரம்ஸி கொண்டதாய் நினைக்கட்டும்
கழி ஏதுமிருந்தால் தூர வீசிவிடு
உன்னால் பிரயோகிக்க முடியாது!
இனிச் சர்வ ஜாக்ரதை!
உம்முள் இடைவெளி விடுதல் அபாயம்
நீ கடிபட்டுக் குதறவோ, பிராண்டவோ
படலாம்!
ஆதலால்...
எதிரி எதிர்பாராத ஒரு மின் கணத்தில்
'லபக்ஸி'கெனப் பாய்ந்து கட்டிப்பிடி!
கெட்டியாய் நெருக்கி நெருக்கிப்பிடி
இம்மியும் திணற அனுமதியாதே!
இன்னும் இன்னும் முழுவலுவுடனும்
காற்றுவெளி யிலாதபடி இறுக்கிப்பிடி!
இறுக்கி அழுத்தி அமுக்கி மெருகையில்
மெல்ல சாந்தி உண்டாகும் காண்!

(மேற்படி உத்தியை யாரும் கணவன் மனைவியிடமோ, காதலன் காதலியிடமோ பிரயோகிப்பின் விளைவுகளுக்கு நான் ஜவாப்தாரியல்ல!)

சுபம்.

**காருண்யன்**

23/08/98



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# திரைப்படப் பார்வையாளர்களும் அடையாளப்படுத்திக்கொள்ளுதலும்:

எஸ். வி. ரஃபேல்

தமிழ்த்திரைப்படம் பார்க்கும் மக்களைப் பொதுவாக 'மக்கள்' என்று எளிதாகச் சொல்லிவிட்டு விட முடியாது. தமிழ்த் திரைப்படங்களைப் பார்ப்பவர்கள் என்றவகையில் அவர்கள் பார்வையாளர்கள், அதற்காகச் செலவிடுவோர் என்றவகையிலும் அதை, அதிலிருந்து எடுத்துக்கொள்வோர் என்ற வகையில், பெறுவோர் /நுகர்வோர். குறிப்பிட்ட சங்கேதங்கள் பொதிந்து வைக்கப்பட்ட பனுவலாகத் திரைப்படத்தைக் கருதும்போது சமிக்ஞையை அவிழ்ப்போர் என்றும் பல்வேறு நிலைகளில் இருக்கின்றனர். இவற்றைப்போலவே இப்பார்வையாள மக்களை வேறுவிதங்களிலும் பாகுபடுத்தலாம்.

## பார்வையாளக்குழுக்கள்:

தமிழ்த் திரைப்படம் வெளியிடப்படும் நிலவியல் பகுதிகளில் இருப்பவர்கள் அவர்களை அறிந்தோ அறியாமலோ திரைப்படத்திற்கு முகம் கொடுக்கின்றனர். இவர்களைப் பொதுவான குழு[1] அல்லது வெகுமக்கள் குழு (mass) என்று பாகுபடுத்தலாம். இந்த மக்களை, எப்போதும் நிலைத்திருக்கும் திரைப்படத்திற்குப் பொதுவான மக்கள் குழு என்பதே சரி. இந்த வெகுமக்கள் குழு ஓர் மொழிக்குரிய, நிலவியல் எல்லைக்குள்தான் இருக்கும் (உ+ம் தமிழ்நாடு, இலங்கை, மொரிசியஸ், மலேசியா, சிங்கப்பூர்) ஓர் அரசுக்குரிய அல்லது பண்பாட்டு நிலவியல் எல்லைகளுக்குள் வராது.

குறிப்பிட்ட சில காரணங்களுக்காகத் திரைப்படம் பார்க்கும் குழுவொன்றும் இருக்கிறது. இது சமூகத்தில் இருந்து கொண்டு தங்கள் தேவைகள் சார்ந்து வெளிப்படையான செயல்பாடுகளுடன் உள்ள குழுவாகவோ, வெளிப்படையாக செயற்பாடுகள் இல்லாமலோ இருக்கும். பொதுவாக அமைப்பில்லாத குழுக்கள் இவை. அரசியல்சார் வசனங்களுக்காக, அவிழ்த்துப்போடும் காட்சிகளுக்காக, சமய, சாதியக்குறிப்பான்களுக்காக, அடிதடிக்காக, பாட்டுக்காக, சில நகைச்சுவைக் காட்சிகளுக்காக என்று திரைப்படம் பார்ப்பவர்கள்.

இரு பிரிவுகளைக் கொண்டிருக்கும் முக்கியமான குழுவே அடுத்தது. நடிகர்களின், இயக்குனர்களின் தீவிர ரசிகர்களும் அழகியல், தொழில்நுட்ப, வெளிப்பாட்டுத்திறன்களை விரும்பி 'கலைப்படம்' என்று பார்ப்பவர்களும் இக்குழுவின் இருபிரிவுமாகும். இவர்கள் தீவிரத் தேர்வுடன் திரைப்படம் பார்ப்பார்கள்.

நல்லபடம், நல்லாயில்லாத படம் என்பனதான் உண்டு என்று சொல்லி, கலைப்படம் என்ற வகையைப் புறந்தள்ளினாலும் இவ்விரு பிரிவினரிடமும் குழு நடத்தைகள் காணப்படுகின்றன. நல்லபடம் விரும்பிப் பார்ப்போர் என்ற பிரிவாகவும், குழு நடத்தைகளை வெளிப்படுத்தும் (ரசிகர்மன்ற) ரசிகர்கள் என்ற பிரிவாகவும் இவர்களைப் பார்க்கலாம்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை கண்தானம், ரத்ததானம், தண்ணீர்ப்பந்தல், இதழ்வெளியீடு, மாநாடு (கட்சி நடவடிக்கை) என்று ரசிகர் மன்றக் குழுச் செயல்பாட்டு நடத்தைகள் இன்று வெளிப்படை. இதனாலேயே இவர்கள் வெகுமக்களில் இருந்து வேறுபட்டு நிற்கின்றனர்.

திரைப்பட சபாக்களும் (Film club or Film society) மேற்சொன்னவற்றுக்குச் சற்றும் குறையாத குழுநடத்தையை வெளிப்படுத்துவனவே. எழுத்து வெளியீடுகள், குறிப்பாகத் திரைப்படங்களைத் திரையிடல், ரசனை குறித்த விவாதம், படம்பார்க்கும் முறைகள்-ரசனைகள் குறித்த உரையாடல்கள் என்பன குழு நடத்தைகளாக இவர்களை வெகுமக்களில் இருந்து வேறுபடுத்தி நிற்கிறது. அதேவேளை இவ்விரு பிரிவினரும் பொதுவான ஓர் தன்மையினால் ஒரே குழுவிலேயே வருவர். இவர்களுடைய ரசனைத் தன்மை, கோரல், வினாக்கள் திரைப்படங்களின் தன்மையை நிர்ப்பந்திக்கிறது. திரைப்படங்களின் கரு, இவ்விரு பிரிவினரின் விருப்பிற்கேற்பப் பல இடங்களில் மாறுவது கண்கூடாகிறது. ரசிகர்கள் ஒருபடி மேலே போய் கருக்கள், கையாளும் வடிவம், பாத்திரப்படைப்பு, உடை, தலைமயிர், நடை வரைக்கும் இப்படித்தான் வேண்டும் என வேண்டுதல் வைக்கின்றனர்.

[1] பொதுவான நோக்கில் பொதுவான நடத்தை வெளிப்பாடு உள்ளவர்கள்தான் குழு எனப் பார்க்கப்படுவார்கள். இக்குழுக்களின் அளவு 5பேரில் இருந்து 5-6 மில்லியன்வரை இருக்கும் குழுக்களின் எண்ணிக்கையும் ஒரு குறிப்பிட்ட நிலவியல் பகுதியில் லட்சங்கள் வரைகூட, ஒரு சமூகப் பண்பாட்டு எல்லைக்குள் இருக்கலாம் (பெரிய நாடுகளில்). ஒருவரே 5-10 குழுக்களில் பங்குகொண்டிருப்பது சாத்தியமே.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கலைப்படத்தினரோ, தாமறிந்த கலைக்கோட்பாடுகளின் அடைப்புக்குறிக்குள் அல்லது கலைக் கோட்பாடுகளுக்கும் பிடிபடாத அடைப்புக்குறிக்குள் வரும் படங்களை எதிர்பார்க்கிறார்கள், அதை விமர்சனமாக எழுதுகிறார்கள், படமாக வரவைக்கிறார்கள். வாணிபத் திரைப்பட ஊடகவலைப்பின்னலில் சிக்குண்டு அவ்வூடகத்தின் மூலமாக உருவாக்கப்படும் பழக்கத்துக்கு உள்ளாகிய பார்வையாளரே வெகுமக்களில் சரியான இளிச்சவாயர்கள் அல்லது அப்பாவி நுகர்வோர். இவர்கள் விளம்பரத்தினால் ஈர்க்கப்பட்டு, 'சும்மா' கடைக்குப் போய், 'சும்மா' எதுக்கும் இருக்கட்டுமென்று வங்கிமட்டையை (bank card) கொடுத்து, 'சும்மா' பொருட்களை வாங்கிக் குவிப்பதுபோல்; படங்களைப் பார்த்துக் குவிக்க, கட்டாயப்படுத்தப்படும் அப்பாவிப் பார்வையாளர். அனைத்துப் பார்வையாளர்களும் ஏதோ ஓர் குழுவில் இருப்பதன்மூலம் திரைப்படத்தில் ஏதோ ஓர் செய்தியை அவிழ்க்கும் செயலைச் செய்து கொண்டே இருக்கவேண்டிய கட்டாயத்தில்...

## செய்தித் தொடர்பு ஊடகமாக:

திரைப்படம் இந்த வகையில் கூர்ந்து பார்க்குமளவு ஓர் வெகுமக்கள் ஊடகமா? என்று வரும் கேள்விக்கு இயல்பாகவே இதிலென்ன சந்தேகம் என்று பதில் கேள்வி எழுவது இயல்பே. ஆனால் தொடர்பூடகம் ஒன்றின் இயல்புகளுக்கும் திரைப்படத்திற்கும் பொருத்தப்பாடு இருக்குமா? திரைப்படத்தின் நோக்கத்திற்கு (செய்தி, பொழுதுபோக்கு இன்னபிற), வடிவத்திற்கு, பொருண்மைக்குத் தொடர்புடையதாக திரைப்படத் தயாரிப்பாளரும் பார்வையாளரும் ஏற்படுத்திக் கொண்ட இதுதான் திரைப்படம் என்ற ஓர் அடையாள அங்கீகாரம் இருக்கும்.

பார்வையாளர், அவர்கள் முன்னரேயே பார்த்துப் பழகிய அனுபவங்களில் இருந்து கட்டமைக்கப்பட்ட திரைப்படத்துக்கேயென்றான, குறிப்பிட்ட, முன்கூட்டிய விளக்கங்களை வைத்திருப்பர். இந்த விளக்கங்கள் ஒருவிதமான சட்டகங்களாக (Frame) அல்லது வார்ப்புக்களாக (Mold) உருவாக்கி வைத்திருப்பர். இத்தகைய சட்டகப்படுத்தல்கள் எப்போதும் மாறாத அமைப்புடையனவாய் பெரும்பாலும் இருக்கும். இம்மாறாத சட்டகப் பொதுமைகளால்தான், தனிமனிதத் திரிபுகள், வேறுபாடுகள் இருந்தபோதும்கூட அதையும் விஞ்சிய ஓர் 'கூட்டுமனோநிலை' பார்வையாளரிடம் காணக்கிடைக்கிறது.

முன் அனுபவமில்லாப் பார்வையாளர்கூட பிற ஊடகங்கள் வழியாகவும், தொடர்ந்து பார்ப்பதன் வழியாகவும் சட்டகப்படுத்தல்களைப் பழக்கிக் கொள்கின்றனர். இதற்குப் பிற பார்வையாளர்களின் சுற்றுச்சூழல் அவர்களுக்கு உதவுகிறது. இப்படியான 'போன்மையுடைய' சட்டகங்களின் துணையிருந்தும்கூட ஒரே மாதிரியான சட்டகங்களுக்குள்ளேயே ஒரே உள்ளடக்கம் பலவித பொருண்மை வேறுபாடுகளைத்தரவும், வேறுவேறு பின்பாட்டு அமைப்புக்களில் இன்னும் வேறு பொருண்மைகளைத் தரவும் கூடுமாகிறது. ஊடகத்தின் (திரைப்படத்தின்) தன்மையைப் பொறுத்தே அதன் அளவு வேறுபாடுகள் அமையும். ஊடகமே பெரும்பாலும் இவற்றை 'நிர்ணயிக்கும்'காரணியாக அமைகிறது. ஒரேமாதிரியான சட்டகப் படுத்தல்களை, திசைவழிப்படுத்தப்பட்ட குறிப்பீட்டாக்கங்களையே (Significations) ஊடகமும் முன்வைக்கிறது. வேறுவிதமாகச்சொன்னால் ஓர் குறிப்பிட்ட மெய்மையை, அனுபவத்தை, பொருண்மையை குறிக்கப்பட்ட விதத்தில் தான் பார்வையாளர் பெற வேண்டும் என்று ஓர் திசை சுட்டப்பட்டு அதையே பார்வைக்குக் கொடுக்கின்றனர்.

திரைப்படம் இப்படிப் பொதுவாகப் பழகிய ஒரு கதையாடலை ஏற்படுத்துவதுடன் மீப்பண்பாட்டு வடிவங்களை நிலைநிறுத்த முயற்சிக்கின்றது. எனவே குறிப்பிட்ட கதையாடல் அமைப்பை அதன் வினைப்படிமுறைகளை, முன்கூட்டியே தீர்மானிக்கப்படக்கூடிய படிமங்களை; சில குறிப்பிட்ட, மீண்டும் மீண்டும் வரும் அடிக்கருக்களைக் கொண்டதாகத்தான் திரைப்படம் இருக்கும்.

நாம் ஓர்மத்துக்குள்ளாக்க வேண்டியது "நான் என்ன எடுக்கிறேனோ அதான் படம். நீ என்ன நடிக்கிறாயோ அதான் நடிப்பு. அதை ஜனங்க பார்த்துத் தீரணும்,அது அவங்க தலையெழுத்து" (காதலிக்கநேரமில்லையில் நாகேஷ் பேசும் வசனம்)என்ற மாதிரியான திரைப்படங்களையல்ல. பண்பாட்டில் திரைப்படம் எமது பார்வையாள-மக்களால் எப்படிப் பார்க்கப்படுகிறது; பண்பாட்டை அது என்னவாகக் காட்டுகிறது; திரைப்படம் என்னவாக இருக்கிறது என்றே திரைப்படங்களைப் பார்க்கவேண்டியுள்ளது.

## புராணிகத் திரைப்படங்கள்:

இப்படிப் பார்க்கப்படுவதற்குத் திரைப்படம் பண்பாட்டைப் பிரதிபலிக்கிறதா என்ன? சந்திரனை வெறுங்கண்ணால் பார்ப்பது போலவா, தொலைநோக்கி வழியாகப் பார்ப்பது போலவா, உடைந்த கண்ணாடித்துண்டுகளில் தெரியும் சந்திர பிம்பங்கள் போலவா, புவியியல் படத்தில் பார்ப்பது போலவா, கண்ணாடிப் பெட்டகத்தினுள் பார்ப்பது போலவா திரைப்படம் பண்பாட்டைப் பிரதிபலிக்கிறது. உண்மையில் இவையனைத்துமான கலவையாகி, சிலவேளை உருப்பெருக்கி வழியானதாக, பெரிஸ்கோப் வழியானதாக எல்லாம் போலவுமே இது நிகழ்கிறது. அதாவது பண்பாட்டுக் கூறுகள் அனைத்தும், மறுவிழுமியப்படுத்தப்பட்டு ஓர் அதீத நிலையில் வெளிப்படுத்தப்படுகின்றன.

ஓர் திரைப்படம் எவ்வளவுதான் இயல்புத் தன்மையுடையது, எதார்த்தமானது என்று கூறப்பட்டாலும் அது பொய்யே. எதார்த்தமான எந்தத் திரைப்படமும் தன்னளவில் புனைவுத்தன்மையுடையதே. செய்திப்படம் (Documentary), இனவரைவியற்படம் (Eth-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

nographic film) கூட புனைவுத் தன்மையுடைய னவே. இப்படிப்பட்ட புனைவுத்தன்மை (Fictionality) திரைப் படத்திற்கே உரித்தான தொழில்நுட்பத்தினால் உருவாகிறது. நாவல், சிறுகதையை விடவும் கட்டு ரையைவிடவும் திரைப்படம் அதன் தன்மையிலேயே புனைவுத் தன்மை கொண்டது.

திரைப்படம் தனது சொல்லாடலில் (இடம்) காலம் (time), வெளி (space), இரண்டையும் குலைத்து விடும். இக்கால, வெளிகள் இயல்பான மனித ஓர்மத் தில் இருந்து விடுபட்ட, தப்பித்த தன்மையுடை யவை. ஓர் சம்பவம் / நிகழ்வு / கதை / அடிக்கரு காட் சியாகும்போது காட்சிக்குள்ளாகும் அடிக்கரு கால எல்லையை ஒழுங்கைமீறி, வெளி புதிதாகி, முன் பின்னாக நகர்த்தப்பட்டு, புரட்டப்பட்டு, தலைகீழாக் கப்பட்டு இயல்புக்கு மாறாகிவிடுகிறது. இதற்கு ஒளிப்பதிவியின் அசைவு, சட்டகம் உள்ளேயான நடி கர், பொருட்கள் அசைவு, ஒளிஅளவு, ஒலிகள், குரல் (வசனம்), சட்டகஅளவு என்பன உதவுகின்றது. மிக மோசமான எடுத்துக் காட்டு ஒன்று : ஒருவர் பாரி ஸில் இருந்து லண்டன் செல்ல 6 மணித்தியாலங்கள் எடுப்பதாக வைத்துக்கொள்வோம். உண்மையில் 15 வினாடிகள் போதுமானதாக இருக்கும் இந்தக் காட்சியை படிமமாக்க.

கால, வெளி மாற்றங்கள், 'காமரா' வைக்கப்பட்ட தூரம்; 'காமரா' வைத்த கோணம், உயரம், சட்டகத் தில் நடிகர்- படப்பொருள் வரும் ஆழம், காட்சி கள் இணைப்பு, ஒலிக்குறிப்பீடுகள்... எல்லாம் அதீத புனைவுத் தன்மையையே தருகின்றன.

எனவேதான்- புனைவான திரைப்படம்-இன் னும்கூடிய, புனைவுத்தன்மையையும் மீறிய, அதீத மான இயல்புகளைக் கொண்டுள்ளது. இத்துடன் எடுத்தாளப்படும் அடிக்கருத்துக்களின், காட்சித் தொடர்களின் உருவாக்கம் எல்லாம் சேர்ந்து , திரைப்படத்திற்கு புராணிகத்தன்மையையே ஏற்றி விடுகின்றன.

புராணிகத்தன்மையின் சிலகூறுகள் என:

1) நாட்டில், சமூகத்தில் பரவலாகப் பார்க்கமுடி கின்ற பாத்திரங்கள் திரைப்படத்தில் வருவதி ல்லை. எந்தவகையான திரைப்படமாக அது இருப் பினும் சரியே. பொதுவான பாத்திரங்கள் கிராமத்து வீரன், புரட்சி இளைஞன், இராணுவ / பொலிஸ் /... அதிகாரி, பண்ணையார் மகன், வெட்டியார் மகள், அதீத துன்பத்திற்கு (தாலியினால்) ஆளாகும் பெண், மாணவர் தலைவி /தலைவன், பொதுவான தலைவன் /தலைவி... என்ற நீண்ட வகைமாதிரி யான பொதிகளில் வரும். ஆனால் நடைமுறை வாழ் வில் 1% கூட அப்படிப்பட்டவர்கள் இருப்பதில்லை. பெரும்பான்மையான குணவியல்புகள், நடைமுறை வாழ்வின் பாத்திரத்தில் ஒருபோதும் திரைப்படத் தில் இருப்பதில்லை. இது ஒருவகையான தலைகீழ் பிரதிநிதித்துவமே.

2)பண்பாடுகளைப்பற்றிய, கிராமத்துடன் சார்ந்த கதைக்கருக்கள் மக்களை இயல்பினும் மோசமா கவே சித்தரிக்கின்றன.

3)பெண்கள் திரைப்படங்களில் பெரும்பாலும் ஒரே குறித்த தொழில்களையே செய்வோராயும், ஒரே பாத்திரங்களாயும் காணப்படுகின்றனர். பெண் களைப் பொறுத்தவரை மேலே சொன்ன தலைகீழ் பிரதிநிதித்துவம்கூட நடைமுறைப்படுத்தப்படுவதி ல்லை. புராணிகமாக்கப்படும் தளங்களில் கூட தமி ழ்ச் சமூகத்தில் பெண்களுக்கு அதீதங்கள் அனும திக்கப்படுவதில்லை. புரட்சி/வீர இளைஞி என்று சித்தரிக்கப்படும் பெண்பாத்தி ரங்கள் கூட இலிங்க இழப்புச்சிக்கலுக்கு (Lack of phallus - complex) ஆளாகித் திரிகின்றன. பெண்கள் முக்கியப்பாத்திரமேற்று நடிக்கும் படங்கள்கூட.

4)வன்முறை காண்பிக்கப்படும் அளவும், விதமும் நடைமுறையில் அப்படியே இல்லாததே. [அமெரிக் காவில் தொலைக்காட்சி பார்ப்பவர்களில் 10% பேர் தங்கள் தினசரி வாழ்வில் வன்முறையைச் சந் திக்கக் கூடும் என்று ஓர் பரப்பாய்வில் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் காவல் குற்ற அறிக்கை அது 1% தான் சாத்தியம் என்று கூறியி ருக்கின்றது. அதேபோலவே மதுரையில் திரைப் படம் பார்ப்பவர்களில் 69% சமூக வன்முறைகளுக் கும் திரைப்படங்களுக்கும் தொடர்பிருக்கலாம் எனக் கூறினர். ஆனால் நடைமுறையில் அப்படி யல்ல. வேலூர், நான்குநேரி, ஒரத்தநாடு, செங்கல் பட்டு... ஆகிய இடங்களில் உள்ள காவல் நிலைய பாலியல் பலாத்கார, கொலைகள் நினைவுக்கு வந் தபோதும் கூட, புள்ளிவிபரத்தின்படி 1% க்கும் குறை வாகவே மொத்தக் குற்றங்கள் இருக்கும்.]

5) இவற்றைப்போலவே சமகால, வரலாற்று, நிறு வனங்கள், மனிதநடத்தைகள், நாடு /இந்திய தேசம் தொடர்பாக எழும் விவாதங்கள் - நிகழ்வு கள், பாலியல் தொடர்பானவை, தாலி, கற்பு, நட்பு எல்லாமே திரைப்படத்தில் புராணவாக்கத்துக்குள் ளாகியே வருகின்றது.

6) இப் புராணிய இயல்பு, அதாவது முன் சொன்ன இயல்பு ஏற்றங்களினால் அளவுகடந்த விழுமியங் கள் (Transvalues)[2] ஆதிக்க, அதிகார வர்க்கத்துக்கு முரண்படாததாகவே இருக்கும். எல்லோரும் ஏற்றுக் கொள்ளும் பொதுவான ஒருங்கிணைந்த கருத்துக் களையே ('பெரும்பான்மைக்கான') இப்புராணவாக் கத்துக்குள்ளான மீவிழுமியங்கள் எடுத்துச் செல் லும்.

ஓர் சமூகம் அல்லது பண்பாடு நிலையானதல்ல. எப்போதும் மாற்றத்தை நோக்கி இயங்கிக் கொண் டிருக்கும். இந்த இயக்கப்போக்கில் எப்போதும் ஓர நிலையாளர் (Marginals) தமக்குரிய தளத்தில் இடம் பெற்றிருப்பர். இவர்களே பண்பாட்டின் மாற்றுக்

[2] நன்நோக்குடைய / எதிர்நோக்குடைய அதீதப்பட்ட விழுமியங்களைக் குறிக்கும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

கருத்துக்களுக்கான இருப்பிடங்கள். பண்பாட்டினின்று முரண்பட்டுநிற்க எத்தனிப்பவர்கள். இவர்கள் அறிவுசார் செயல்பாட்டாளர், தீவிரக் கொள்கையாளர், ஒடுக்குதலுக்குள்ளான - பண்பாட்டு விளைவினால் - மக்கள், என்ற நீண்ட பட்டியல் வரும். இவர்களின் கொள்கை முன்வைப்புக்கள், அறிக்கைகள், வெளிப்படுத்தல்கள், எடுப்புக்கள் முதலியவற்றுக்கு எதிரானதாகவே 'பொதுவான' திரைப்படத்தின் மீவிழுமியப் புராணவாக்கங்கள் இருக்கமுடியும் -இருக்கும். 'விதிவிலக்கான' திரைப்படங்கள் / நல்ல திரைப்படங்கள், இந்த ஓர / விளிம்பு நிலையினருடையதாகவோ, அவர்கள் முன்னெடுப்புடன் ஒத்துப்போவதாகவோதான் இருக்கும். இருப்பினும் இந்தத் திரைப்படங்களும் புனைவுத்தன்மையுடைய கதையாடல்கள்தான்.


## திரைப்படத்தின் செய்தி – எது எதனால்?

எல்லாருக்கும் உடன்பாடான, ஆதிக்கத்தின் கருத்தாக உள்ள குரலான திரைப்படம் அது கொண்டிருக்கும் செய்தியால், செய்தியைக் கொண்டிருப்பதால் ஊடகமாகவும் இருக்கிறது. செய்தி ஊடகமாகவும் இருப்பதனால்[3] ஊடகத்துக்கேயான அடிப்படைத் தன்மைகளைக் கொண்டிருக்கிறது. பரவலாக அறியப்பட்ட யாக்கப்சனின் மாதிரியின் படி இரைச்சல் / இடைஞ்சல் என்பது ஊடகத்தை அதன் தொடர்பியல் திறனைப் பாதிக்கும், இடையூறு செய்யும்.

ஆதிக்க, அதிகாரக் குரலான திரைப்படங்களின் (செய்தியை) இடையூறாக ஒருநிலைப்பாடு / விளிம்புநிலைப்பாடு இருக்கிறது.




இந்தச் செய்திஊடகமாதிரியில் உண்மையில் செய்தியை இடையூறு செய்வதாக இன்னொரு செய்தியை (ஓர/விளிம்புநிலை) இருக்கின்றது. அல்லது, இரைச்சல்/ இடையூறு தனக்குள்ளே ஓர் செய்தியைக் கொண்டிருக்கின்றது.




இந்த ஓரநிலைப்பாடு திரைப்படத்தில் ஓங்கி ஒலிக்கும் போது சமூகமாற்றத்துக்கான தன்பணியை திரைப்படம் ஏற்றுக்கொண்டு முழுமையாகச் செயற்படுகின்றது. எனவே திரைப்படம் என்பது எல்லாக் கலைகளையும் போலவே அரசியலைக் கொண்டிருப்பதே. "...அரசியலற்ற கலை என்பது, அது ஆதிக்கக் குழுவுடன் சேர்ந்திருக்கின்றது என்பதையே பொருண்மைப் படுத்துகிறது."[4]

## புராணிகவாக்கத்துக்குத் தணிக்கைக் குழுவின் பணி

சமூகத்தில் சாத்தியப் படாத அனைத்துச் செயல்களும் திரைப்படத்தில் சாத்தியமாகும், அனுமதிக்கவும்படும். தணிக்கைக் குழு என்ற ஓர் வான்வாழிகள் செயல்படுவதும் இதற்காகவே. இவர்கள் இருப்பது இயல்புக்கு மாறான அனைத்தும் திரைப்படத்தில் இடம்பெற்றிருக்கிறதா என்று பார்க்கத்தானேயன்றி வேறுவேலைக்காக அல்ல. இன்னொரு வகையில் சொன்னால் நல்ல சிறந்த புராணமாக இருக்கிறதா என்று சரிபார்க்கும் வேலையே அவர்களுடையது. நடைமுறையில் வெட்டினால் ரத்தம் வரும் 'ஒண்ணு'க்கு இருந்தால் சத்தம் வரும். தணிக்கைக்காரருக்கு இவையிரண்டும் வரவே கூடாது. வந்தால் வெட்டிவிடுவார்கள். இந்தச் சில்லறை விசயங்களுக்கே அனுமதியில்லாத போது

[3] செய்தி ஊடகமாகத் திரைப்படம் இருக்கமுடியுமா என்ற கேள்வியைத்தான் ஐயத்தைத்தான் கட்டுரை முன்பகுதியில் முன்வைத்தது.
[4] (B)பிரெஷ்ற்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முகத்திலறையும் இயல்பு வாழ்க்கை, காட்சியாக்கப்பட்டால் எப்படி அனுமதிக்கப்படும்! ஆனால் நாயகன் பறந்து வருவான்; அவன் மார்பில் குண்டுகள் பட்டுத்தெறிக்கும்; அவனின் பார்வை பட்டுப் பொருட்கள் தீப்பிடிக்கும். அடடா, இது நமது மக்களை முட்டாள்களாக்கும் வேலைதானே என்று தணிக்கை செய்துவிடுவதில்லை அவர்கள்.

### அடையாளப் படுத்திக்கொள்ளும் பார்வையா—:

இந்த அதீத விழுமியக் காட்சிகள், நிகழ்வுகள், பாத்திரங்கள், திரைப்படப் பார்வையாளரின் வாழ்வில் காணும் இயல்புகளுடன் அப்படியே ஒத்திருப்பதில்லை. ஆனால், இப்படி மிகைப்படுத்தப்பட்டவை கொடுக்கும் பரந்த தளம், பல இடைவெளிகளைப் பார்வையாளனின் கற்பனைக்கு விட்டுவைக்கிறது. காட்சியுடன் தனது கற்பனையையும், தனது தன்னிலையையும் பொருத்திப் பார்க்கக்கூடிய நீக்கல்கள் கிடைக்கும். எனவே பார்வையாளர் தங்களை அவற்றில் எங்கோ அடையாளம் கண்டுகொள்கின்றனர். இவ்வடையாளம் காணலுக்கு திரைப்படத்தில் வரும் 'ஒருதிசைவழிப்'படுத்தப்பட்ட குறிப்பீட்டாக்கமும் (செய்தித் தொடர்பு முறையும்); பார்வையாளர் தாம் முழுமையாக ஒன்றிணைந்துவிடுவதற்கான இருண்ட திரையரங்குகளும், திரை அரங்கில் காட்சிக்கு / நிகழ்வுக்கு சற்றுக் கீழே அமர்ந்து பார்க்கும் நிலையும் ஒத்தாசை புரிகின்றன. நிகழ்வு தலைக்கு மேலே நடப்பதால் கண்களைச் சிறிது உயர்த்திப் பார்க்கும் பார்வையாளர் (ஹிப்னாடிஸ) வயப்பட்ட நிலையிலேயே உள்ளனா.

நடைமுறைவாழ்வின் சாத்தியமாக இல்லாதவை, சிறப்பான சமூக நிகழ்வுச் சந்தர்ப்பங்களில் அனுமதிக்கப்படுவதுபோல, திரைப்படம் எனும் சிறப்பு நிகழ்வில் தன்னை ஓர் பாத்திரமாக மாற்றிக்கொண்டு, அடையாளம் கண்டுகொண்டு, பார்வையா(ளன்)ளி மனதுக்குள் அதீதங்களை அனுபவிக்கிறாள்(ன்). தடைகளை மீறுகிறான்(ள்); எல்லாம் அடைகிறான்(ள்); ஓர் கற்பனைப் புனைவு நிலையில் இருந்த திரைப்பட சட்டகம் வழியாகத் தனக்குத் தேவையானதை /ஆசைப்பட்டதை / இல்லாததை / இழப்பை அடைகின்றான்(ள்), அடைய முயற்சிக்கின்றாள்(ன்). அந்தக் குறிப்பிட்ட காலப் பகுதியில், 2-3 மணிநேர இடைவெளியில், திறந்த 'குறிப்பான்களைக்'கொண்ட (signifier) ஓர் குறிவெளி யில் (semiosphere) சஞ்சரிக்கிறான்(ள்).

### குழுக்களாக—
### குழுக்களில் அடையாளம் காண்தல்

இது இன்று நடைமுறையில் உள்ள இயல் நிகழ்வு. சமூகத்தில் முன்சொன்னபடி பலவிதக் குழுக்கள் இருக்கின்றன. இப்பலவிதக் குழுக்களும் ஏதோ ஒரு வகையில் ஒப்பீட்டுக்கும் வகைப்படுத்தலுக்கும் உள்ளாகின்றன. இக்குழுக்கள் பண்பாடுகளின் தவிர்க்கமுடியாத இயல்புக்கூறுகள். குழுக்களிடையே பொருளாதார, சாதீய, அதிகார காரணிகள் மேலாண்மையையும் படிநிலைகளையும் வளர்க்கும். குழுவின் உறுப்பினர்கள் குழுவிடைச் செயற்பாட்டில் தோன்றும் ஒப்பீட்டளவிலான மற்ற/பிற சங்கட நிலைக்கு உள்ளாகின்றனர். எனவே தனக்கென்றான அடையாளத்தைப் பேணுதல், குழுவின் தனித்தன்மையுடன் பொருத்திப் பார்த்தல், பேணிக்கொள்ளுதல் முதலியன இக்குழுக்களின் உறுப்பினரிடையே தேவையாகிறது. மக்கள்திரள் கூட்டுமனோநிலையுடைய சமூக உறுப்பினன்/ள் பூடகமாக இந்த அடையாளங்களை[5] திரைப்படப் பாத்திரங்களில் கண்டடைகிறான்/ள். பொதுமைப்படுத்தப்பட்ட ஒருங்கிணைந்த அடிக்கருக்களில், அதீத பாத்திரப்படைப்புகளில் இது கிடைக்கிறது. தமிழ் நாட்டுப் பார்வையாளனுக்கு வரக்கூடிய அடையாளத்தளங்கள் சில இப்படியிருக்கலாம்.

| | சரத்குமார் | கமலகாசன் | கார்த்திக் | சத்தியராஜ் | பிரபு |
|---|---|---|---|---|---|
| அடையாளக்கூறுகள் | நாடர் | பார்ப்பனர் | தேவர் | கவுண்டர் | தேவர் |
| | பொதுநிறம் | வெள்ளைநிறம் | நிறம் | உரோமமிக்கதோல் | பொதுநிறம் |
| | உடல்கட்டு | உடல்ஜாலம் | சாதாரணஉடல் | உடல்கட்டு | தொக்கை |
| | உயரம் | சராசரி | சராசரி | உயரம் | கட்டை |
| | நடுத்தரவயது | நடுதாண்டியவயது | நடுவயது | நடுதாண்டியவயது | நடுவயது |
| | சமூகஅக்கறை | 'அறிவு'த்தனம் | குறும்பு | நக்கல் | வாரிசு |
| | அலைமுடி | அலைமுடி | இளமை | அலட்சியம் | |
| | | நடிப்பு | நடிப்பு | பகுத்தறிவு | |
| | α | α | α | α | α |

இந்த நடிகர்கள் திரையில் தோன்றும்போது பாத்திர / கதையின் இயல்புகள் சார்ந்து இக்கூறுகள் முடிவில்லாமல் அதிகரித்துச் சென்றுகொண்டேயிருக்கும். படத்தின் கதை / பாத்திரம் மட்டுமே பார்வையாளரால் பார்த்துப் பெற்றுக்கொள்ளப்படுவதில்லை. கார்த்திக்கின் இயல்புகள் ஒருவருக்கு அவருடைய அண்ணனாயும், இன்னொருவருக்கு தம்பியாயும் தோன்றக்கூடும். இவை அவரை இந்த நடிகரின் படங்களில் இலகுவில் ஒன்றிவிட ஏதுவாகும். வேறு ஒருவருக்கு ஒரு நடிகையின் பாத்திர அமைப்பு தனது காதலியாகவோ, காதலியின் அக்காவாகவோ, காதலியின் அம்மாவாகவோ தோன்றக்கூடும். வேறு ஓர் நடிகையின் சாயல், சகோதரியின் சாயலில், நடிகையின் பாத்திர குணவியல்பு

[5]தனது ஆளுமை சார்ந்து பிறரை அறிதலும் (பிறபாத்திரத்தை) புரிதலும் சேர்ந்த ஓர் நுட்பத்தின் பகுதியாகவே அடையாளம்காணுதல் என்பது எழுகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சகோதரியின் குணவியல்புடன் பிறிதொருவருக்கு ஒத்துவரும். எனவே இவ்விதமாக பாத்திரங்களுடன் தங்களை அடையாளம் கண்டுகொண்டு கதை நகர்வில் பாத்திரத்தை ஒட்டியோ x வெட்டியோ நிலைப்பாட்டை எடுப்பார்கள். இது நடிகர் சார்ந்து, பாத்திரம் சார்ந்து, கதைசார்ந்து... சர்வ வியாபகம் பெறும். (எனது தோழிக்கு கமல்காசன் தனது அப்பாவின் சாயலில் இருப்பதாய் நினைப்பு) கமல், காத்திக், நடிகை, நடிகன், பாத்திரம் என்பன குறிப்பான்கள். இவை எப்போதும் ஒரே குறிப்பானாகச் செயற்படுவதில்லை. பார்வையாளரின் தன்னிலை அல்லது சுயம் சார்ந்து, வேறு ஓர் சூழலில் வேறு ஓர் குறிப்பீட்டாக்கச் செயற்பாட்டை இவை நிகழ்த்தக் கூடும் / நிகழ்த்தும்.

இப்படி திரைப்படக் கதையாடலில் பாத்திர, நடிக, நடிகை மட்டும் குறிப்பான்களல்ல. காட்சியும், பொருட்களும் இவ்வகையினவே. இந்த எண்ணற்ற குறிப்பான்கள், அதனிலும் எண்ணற்ற பல குறிப்பீடுகளைக் கொண்டிருக்கின்றன. குறிப்பானின் விளக்கமளிப்போராக இருக்கும் நாம் / பார்வையாளர் குறிப்பீட்டாக்கச் செயற்பாட்டை முடிவில்லாதபடி செய்து கொண்டே போகிறோம்/ போகலாம். என்றாலும் குறிப்பீட்டாக்கம் முற்றுப்பெற்று விடுவதுமில்லை.

தனது ஆசைகளை (desire) / தன் இன்மைகளை (lacks) குறிப்பீட்டு உலகில் கண்டடைய முயலும் பார்வையாளன்(ளி) குறிப்பீட்டாக்கச் செயற்பாடு முடிவடையாது போவதால், பொருண்மையை முழுமையாகக் கைப்பற்ற முடியாது தோல்வியடைகின்றா(ள்)ன். குறிகளின் விளையாட்டுக் காட்டுதலில் சிக்கிக் கொள்கிறான்(ள்). எனவே ஆசை என்பது அந்த மீவிழுமியப் புராணிகக் கதையாடல் உலகிலும் பார்வையாளனுக்கு /ளிக்கு நிறைவேறிவிடுவதில்லை; எட்டாத ஒன்றாகவே இருக்கிறது.

'திரைப்பட ஒளிப்பதிவு வழியான (குறிப்பான்/ குறிப்பீடு) குறிப்பீட்டாக்கச்செயல், எப்பொழுதும் (ஏறக்குறையவேனும்) திசைவழிப்படுத்தப்பட்டதேயன்றி, ஒருபோதும் இடுகுறித்தன்மையுடையதல்ல'[6] என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும். ஆனாலும் குறிப்பீட்டாக்கச் செயற்பாட்டை நிகழ்த்தும் (பார்வையாளி/ என்) தன்னிலை வரையறை இன்றி குறிப்பீட்டாக்கத்தைச் செய்துகொள்கின்றது.

எனவே தீர்க்கப்படாத ஆசைகளையுடைய பார்வையாளி(னன்) மேலும் மேலும் திரைப்படத்தை நாடுகிறான். புராணிக, கற்பனை, மீவிழுமியக் கதையாடலாக உள்ள திரைப்பட உலகின் சுகத்தை நாடுகிறான். இந்த நாடுதல் பல சமூக விளைவுகளை வெளிப்படையாகக் காண்பிக்கிறது.

மதுரையில் திரைப்படம் பற்றிய பரப்பாய்வுக்கு பதிலிறுத்த அனைவரும் திரைப்படம் பார்ப்போர். அதாவது 100% பேரும் திரைப்படம் பார்க்கின்றனர். அரசியல் சார்ந்து இதன் தாக்கம் மிகப் பலமானதாகும். வேறெந்த இடத்தையும்விட, அரசியலுக்கும் திரைப்படத்துக்குமான தொடர்பு தமிழ்நாட்டில்தான் அதிகமாயிருக்கிறது. தி.மு.க ஆட்சிக்கு வந்ததிலிருந்து இன்றுவரை இது வெளிப்படையானது. திசைவழிப்படுத்தப்பட்ட குறிப்பான்களின் தொகுதியான திரைப்படம் மறைமுகச் சமூகக் கட்டமைப்புக்கான காரணங்களை சமூகத்தில் விட்டெறிகின்றது. திரைப்படமே இன்று ஓர் அரசியலாகின்றது. சாதீய வேறுபாடுகளை மேலும் முரண்பாடுடையதாக்க, மதக்காழ்ப்புணர்வுகளை வளர்த்தெடுக்க, போலித் தேசியங்கள் பேசுவதற்காக, ஆதிக்க, அதிகார செயலாக்கம் உடையவர்களின் சார்பாக அவர்களின் 'சித்தாந்தங்களின்' சார்பாக திரைப்படம் செயற்படுகிறது. ஓரநிலையினரை மேலும் ஓரத்திற்குத் தள்ள முனைகிறது. இந்த வகையில் சமூகமாற்றத்திற்கும் தமிழ்த் திரைப்படத்துக்குமான தொடர்பு இன்றும் மிக விலகியே இருக்கின்றது. ■

[6] கழுதையின் முன்னால் கட்டித்தொங்கவிடப்பட்ட தக்காளி போல திரைப்படத்தின் ஆசை காட்டுதல் அடுத்த, அதற்கடுத்த திரைப்படத்திற்கு பார்வையாளரை நடத்திப் போய்க்கொண்டேயிருக்கிறது.

இக்கட்டுரை 'திணை'(கலைஇலக்கியப் பெருமன்ற வெளியீடு; நாகர்கோயில்; இந்தியா) இதழின் சிறப்பிதழ் ஒன்றிற்காக கொடுக்கப்பட்டு பொருளாதாரக் காரணங்களால் அது வெளிவராததனால் (1994) மீளப் பெறப்பட்டது. 'புன்னகை' இதழும் (பாரிஸ்) புரிதலுக்கு கடுமையெனத் திருப்பிவிட்டது (1998).

## சிங்காரவனம்

புனித சம்பத்திரிசியார் கல்லூரியின் பழைய மாணவர் சங்க பத்தாவதாண்டு நிறைவுதினம். அந்த 'சிங்காரவனம்' மட்டுமில்லாமல் போயிருந்தால் வழமையான குத்துவிளக்கேற்றல், பரதநாட்டியம், பரிசளிப்பு விழாக்கள், நன்றியுரைகள் என்று சப்பென்று போயிருக்கும். சற்று வித்தியாசமான நிகழ்வாய் ஷோபாசக்தியின் பிரதியொன்று மேடையேற்றப்பட்டது. அந்த வார்த்தைகள் இம்மானுவல் அவர்களினது நடிப்பில் உதிரும்போது...

"எந்த மனுசரும் அவையவையள் தாங்கள் விரும்புகிற இடத்தில் சீவிக்கின்ற உரிமைக்கு யாரும் மறுப்புச் சொல்லேலாதுதானே"

இதே ஒக்டோபர் மாதம் சரியாக எட்டு வருடங்களுக்கு முன்னால் யாழ்ப்பாணத்திலிருந்து தமிழீழ விடுதலைப்புலிகளினால் வெளியேற்றப்பட்ட சுமார் ஒருலட்சம் தமிழ்பேசும் இஸ்லாமியர்கள் ஒவ்வொரு வரினதும் நினைவலைகள்மீது பார்வையாளர்களின் கரிசனையை திருப்பியவிதம்! நெறியாளர் 'ஓசை' மனோவை பாராட்டுதல் தகும். ■

எம்.ஆர். ஸ்ராவின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கண்ணாடி வார்ப்புகள்

சேரன்

டென்னஸி வில்லியம்ஸின் புகழ் பெற்ற நாடகமான கண்ணாடி வார்ப்புகள் (The Glass Menagerie), பட்டறைத் தயாரிப்பாக மார்ச் மாதம் ரொறன்ரோவில் மேடையேறிற்று. மிகப் பெரிய நாடக அமைப்புகளிலிருந்து சிறிய நாடகக் குழுக்கள்வரை ஏராளமான நாடகர்கள் நிறையப்பெற்ற ரொறன்ரோவில், இம்முறை டென்னஸி வில்லியம்ஸின் கண்ணாடி வார்ப்புகளை நெறிப்படுத்தித் தயாரித்தவர் Inner Stage Theater என அழைக்கப்படும் ஒரு சிறு குழுவினர். இருபத்தேழு வருடங்களாகச் சிறு நாடகக் குழுவாகவே இயங்கிவரும் இவர்களிடமிருந்துதான் முக்கியமான புகழ்பெற்ற பல நெறியாளர்களும் நடிகர்களும் உருவாகியுள்ளனர்.

இக் குழுவின் முழுநேர நெறியாளராகப் பணிபுரிபவர் எலிஸபெத் ஸாத் மேரி (Elizabeth Szathmary). ரொறன்ரோவின் சிறிய நாடகக் குழுக்கள் 70-100 பேர்வரை அமர்ந்து பார்க்கக்கூடிய சிறு அரங்குகளில் தமது படைப்புகளை மேடையேற்றுகின்றன. ஒரு கிழமையிலிருந்து மூன்று மாதங்கள்வரை நாடகங்கள் மேடையேற்றப்படுகின்றன.

கண்ணாடி வார்ப்புகள் பாலேந்திராவின் நெறியாள்கையில் அவைக்காற்று கலைக் கழகத்தினரின் தயாரிப்பாக இலங்கையில் பலமுறை மேடை யேற்றப்பட்டிருந்தது. பாலேந்திராவின் நேர்த்தியான நெறியாள்கையில் நாடகம், பிரதியின் முழுப்பலத்தையும் வெளிக்கொணர்ந்திருந்தது. Inner Stage Theaterஇன் கண்ணாடி வார்ப்புகளைப் பார்த்தபோது பாலேந்திராவின் கண்ணாடி வார்ப்புகளை நினைக்காமலிருக்க முடியவில்லை.

ஆங்கிலம், ஜேர்மன், தமிழ் ஆகிய மொழிகளில் பல்வேறு உலக நகரங்களில் டென்னஸி வில்லியம்ஸின் கண்ணாடி வார்ப்புகளை பார்க்கக் கிடைத்த அனுபவத்திலிருந்து என்னால் இரண்டு முடிவுகளுக்கு வரமுடிகிறது. ஒன்று, ஒரு நாடகம் பிரதி அளவில் மிகவும் பலமானதாகவும் படைப்பாற்றல் வாய்ந்ததாகவும் இருக்கின்றபோது அது எல்லா வகையான நெறியாளர்களூடாகவும் பாதிப்புமிக்கதாகத்தான் வெளிப்படுகின்றது என்பது. மற்றது, பொதுவாக ஈழத்தமிழ் நாடகங்களும் - குறிப்பாக பாலேந்திராவின் நெறியாள்கையில் அரங்கேறிய பல நாடகங்கள்- நான் பார்க்க முடிந்த, நாடகத்தையே முழுநேர உழைப்பாகக் கொண்டுள்ளவர்களால் தயாரிக்கப்பட்ட ஜேர்மன், ஆங்கிலத் தயாரிப்புகளுக்கு எவ்விதத்திலும் சளைத்தவை அல்ல.

டென்னஸி வில்லியம்ஸின் கண்ணாடி வார்ப்புகள், அவருடைய பெரும்பாலான மற்ற நாடகங்களைப்போல மையம் சிதைந்த குடும்பத்தையும், அவை கிளர்த்தும் மனமனித அவலங்களைப் பற்றியது தான். நாடகத்தின் மிகப் பலமான அம்சம் பாத்திரங்களின் சிறப்பான உருவாக்கம். யதார்த்தமாக, மேடை அமைப்புகள், பலதரப்பட்ட ஒளி வசதிகளோடு மேடையேற்றப்படுவதற்காகவே வில்லியம்ஸின் நாடகங்கள் அமைகின்றன. எனினும் Inner Stage Theaterஇன் இப் பட்டறைத் தயாரிப்பு எவ்வித



பாலேந்திராவின் நெறியாள்கையில் கண்ணாடி வார்ப்புகள்

மேடையமைப்புகளுமில்லாது இசையிலும், நடிகர்களின் பலத்திலுமே தங்கியிருந்தது. பாத்திர உருவாக்கமும் உயரிய நடிப்பும் இணைகிறபோது எளிமையான மேடையமைப்புடன் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தக்கூடிய நாடகங்களை அரங்கேற்றலாம் என்பதற்கு இத்தயாரிப்பு நல்ல உதாரணமாக அமைந்தது.

நான்கே நான்கு பாத்திரங்கள்தான். நாடகத்தில் முக்கிய பாத்திரமாக ஏற்றிருந்தவரைவிட மற்றையோர் புதியவர்கள். பட்டறைகளுக்கூடாக எவ்வாறு புதியவர்கள் புடமிடப்படலாம் என்பதும் இந் நாடகத்தைப் பார்க்கிறபோது தெளிவாயிற்று. ■



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அவலங்களின் சாட்சிகள்

முக்காடிட்ட என் பெண்ணே!
அழவும் பின்னர் சலிப்புறவும்
தெரிகிறது உன்னால்.
அந்தக் கிடுகு முகாமுக்குள்
இருந்து மௌனமாய் விசும்பல்
ஒலி மட்டும்!
மணல் ஒட்டும் தரையிடுக்கில்
ஓலைப் பாயில் உறங்குவதும்
பின்னர் விழிப்பதுவுமாய்
எட்டு வருடங்கள்
ஓடியே போய்விட்டன.

+++

முக்காடிட்ட என் பெண்ணே!
பனைமரங்கள் சாட்சியாய்
நீ வாழ்ந்திழந்த மண்
கனவுகளுக்கு மட்டுமாய்
அவலமாகிப் போனது.
வேல் சாட்சியாய் சூலாயுதம் சாட்சியாய்
துப்பாக்கி சாட்சியாய்
அது உன்னது தான்; உன்னதும் தான்.

+++

முகாம் எரிந்து போனது!
முகாம் எரிந்தே போனது!
சாம்பரில் கிண்டி எடு!
உன் இரண்டுமாதக் கைக் குழந்தையை
கிண்டி எடு உன் எஞ்சிய தாலியை!
கிண்டி எடு உன் தாயையும் இன்னும் தேசத்தையும்!
ஒரு மிடறு போதை இன்னும்
ஒரு புத்தனின் மகனுடைய தீக்குச்சி முகாம் எரிந்தே போனது!
அடைக்கலம் தேடி வந்த இடத்தில்
அவலங்களையும் சுமக்கத்தான் வேண்டுமாமே!

+++

நிழல்களைக் கண்டும் அச்சமடை! ஏனெனில்
நீ முக்காடிட்ட என் பெண்ணல்லவா?
நெருக்குவாரங்களின் ஒவ்வொரு ஆணியிலும்
உப்புக் காற்றின் ஒவ்வாத சீதளத்திலும்
மன உளைச்சலிடை மோவாயைத் தாங்கியபடிக்கு
புனருத்தாரணக்காரரின் போக்குகளுக்கெல்லாம்
தலையசை!
ஒரு தேவதூதன் வரலாமல்லவா!
வந்து உன் முக்காடு களைந்து
மென் தலையை வருடி பின்னர்
வா உன் பூமிக்கு வந்து வாழ்
என்றும் சொல்லலாமல்லவா?
அதுவரை விசும்பிக்கொண்டாவது அல்லது
வருடங்களை எண்ணிக்கொண்டாவது
அந்த புத்தளத்து மணலில் நீ
கட்டாயமாக நடக்கத்தான் வேண்டுமாக்கும்.

இளைய அப்துல்லாஹ்

(முஸ்லிம் அகதி முகாமொன்று ஒரு குடிகாரனின் அடாவடித்தனத்தால் எரிந்தபோது...)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பெண்ணியமும் கவிதையும்

சேரன்

கோணேஸ்வரிகள்...!
நேற்றைய அவளுடைய சாவு -
எனக்கு/வேதனையைத் தரவில்லை./
மரத்துப்போய்விட்ட உணர்வுகளுள்/ அதிர்ந்து போதல் எப்படி நிகழும்!?

அன்பான என் தமிழச்சிகளே,/ இத்தீவின் சமாதானத்திற்காய்/ நீங்கள் என்ன செய்தீர்கள்!?/ஆகவே, வாருங்கள்/ உடைகளைக் கழற்றி/உங்களை நிர்வாணப்படுத்திக் கொள்ளுங்கள்/என் அம்மாவே உன்னையும் தான்.

சமாதானத்திற்காய் போரிடும்/ புத்தரின் வழிவந்தவர்களுக்காய்/ உங்கள் யோனிகளை திறவுங்கள்/ பாவம்,/ அவர்களின் வக்கிரங்களை/எங்கு கொட்டுதல் இயலும்.

வீரர்களே! வாருங்கள்/ உங்கள் வக்கிரங்களை தீர்த்துக் கொள்ளுங்கள்./ என் பின்னால்/ எனது பள்ளித் தங்கையும் உள்ளாள்./தீர்ந்ததா எல்லாம்/ அவ்வளவோடு நின்றுவிடாதீர்!! எங்கள் யோனிகளின் ஊடே/நாளைய சந்ததி தளிர்விடக் கூடும்./ ஆகவே,/வெடிவைத்தே சிதறடியுங்கள்/ ஒவ்வொரு துண்டுகளையும் கூட்டி அள்ளி/ புதையுங்கள்/இனி மேல் எம்மினம் தளிர்விட முடியாதபடி.

சிங்கள சகோதரிகளே!/ உங்கள் யோனிகளுக்கு/ இப்போது வேலையில்லை.

- கலா

கனடாவின் ரொறன்ரோ மாநகரில் இயங்கிவரும் 'தேடகம்' அமைப்பின் கல்விவட்டம் சார்பில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இலக்கிய அரங்கொன்றில், சரிநிகரில் வெளியாகி அவசியமற்ற முறையில் சர்ச்சைக்குள்ளாகிய கலாவின் 'கோணேஸ்வரிகள்' என்ற கவிதை ஆய்வுக்கெடுக்கப்பட்டிருந்தது. இந்த அரங்கில் இடம்பெறும் விவாதங்களும், கவிதை தொடர்பாகச் சரிநிகர் இதழ்களில் ஏற்கனவே வெளியாகி இருக்கும் பல கடிதங்கள், கட்டுரைகள், எதிர்வினைகள் ஆகியனவும் 'கோணேஸ்வரிகள்' கவிதையின் பின்னணியில் 'பெண்ணியமும் கவிதையும்' என்ற தலைப்பில் கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு ஒரு வாய்ப்பான தளமாக அமைகிறது என்பது மிகைப்படுத்தப்பட்ட கூற்றல்ல.

கவிதை, ஒன்றுக்கு மேற்பட்ட விளக்கத்துக்கும் புரிதலுக்கும் இடங் கொடுக்கிறது. கவிதையின் 'சர்ச்சைக்குரிய' அம்சங்களாக இதுவரை முன்வைக்கப்பட்டிருப்பவற்றில் இரண்டு அம்சங்கள் தூக்கலாக இருக்கின்றன. ஒன்று, கவிதையில் பாவிக்கப்பட்டிருக்கும் மொழி தொடர்பான விமர்சனங்கள். இரண்டு, கவிதை சில இடங்களில் இனத்துவத்துக்கு அழுத்தம் கொடுப்பதன்மூலம் ஒரு வகையான இனவாதத்தை வெளியிடுவதோடு தமிழ்ப் பேரினவாதத்துக்கும் வீச்சைக் கொடுக்கிறது என்பது.

கவிதையை நியாயப்படுத்தியும் சிலாகித்தும் பலர் எழுதியிருந்தனர். தமது தமிழ்ப் பேரினவாதப் பிரச்சாரப் பீரங்கிக்கு வெடிமருந்தாக இத்தகைய கவிதைகளைப் பாவிப்பதிலும் பலர் உற்சாகமாக இருக்கிறார்கள். உதாரணத்திற்கு ரொறன்ரோவிலிருந்து வெளிவரும் 'பொங்கு தமிழினத்தின் உணர்ச்சி' ஏடான 'முழக்கத்'திலும், தமிழர் 'செந்தாமரை'யிலும் கவிதை பற்றியும் இலக்கியஅரங்குபற்றியும் வெளியாகி இருப்பனவற்றைச் சுட்டிக்காட்டலாம். மேற்குறிப்பிட்ட இலக்கிய அரங்கில் பங்கு பற்றியிருந்த அனைவருமே கவிதையின் மொழி, சொல் வீச்சு தொடர்பாகச் சாதகமான கருத்துக்களையே முன்வைத்தனர். எனினும், 'எம் இனம்', 'சிங்களச் சகோதரிகளே உங்கள் யோனிகளுக்கு வேலையில்லை' போன்ற தொடர்கள் குறிப்பிட்ட ஒரு சூழலில் இனவாதத்தை வெளிப்படுத்தக்கூடும் என்பது ஒரு சாராரின் வாதமாக இருந்தது. கவிதையின் 'இலக்கியத் தரம்' பற்றிய நியாயமான கேள்வி எழுப்பியவர்கள், கவிதை இனவாதத்தைத் தூண்டுகிறது என்பதுடன் உடன்படவில்லை.

பெண்களுக்கெதிரான வன்முறை, எல்லா இடங்களிலும் எல்லா இனக்குழுக்காரருள்ளும் எல்லா நேரமும் இடம்பெறுகிறபோது அதனை ஒரு குறிப்பிட்ட இனத்துவநிலையில் நின்றுமட்டும் பேசுவது பெண்ணினத்தின் பரந்த அரசியலுக்கு உடன்பாடற்றது என்பதும் கவிதை எவ்வகையிலும் பெண்ணியம் சார்ந்ததல்ல என்றும் ஒரு முக்கியமான விமர்சனம் வைக்கப்பட்டிருந்தது. பெண்ணியம், பெண்களுக்கு எதிரான வன்முறை, தேசியவாதத்துக்கும் பெண்ணியங்களுக்குமிடையேயான ஊடாட்டங்கள், முரண்பாடுகள் என்பனவற்றின் பின்னணியில் இந்த முக்கியமான விமர்சனம் விவாதத்துக்கு உள்ளாக்கப்படவேண்டும். இந்தக் கட்டுரையின் நோக்கம் இந்த விவாதத்துக்கான ஒரு முன்னீடு ஆகும்.

கவிதை எழுப்புகின்ற அதிர்ச்சி விளங்கிக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொள்ளப்படக் கூடியதானாலும், நவீன ஈழத்துக் கவிதைகளில் இத்தகைய அதிர்ச்சி ஏற்கனவே எழுதப்பட்டிருப்பதால் அந்த வகையில் புதுமை ஏதும் இல்லை. ஆனால் சம்பவத்தின் கொடூரமும் கவிஞரின் கோபமும் இணைகிறபோது ஏற்படுகிற கனத்தாக்கத்தின் பாதிப்பையும் நாம் குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது.

◇◇◇

கவிதை, பெண்ணியம் சார்ந்த கவிதை அல்ல என்பதும், கோபம் என்கிற தீவிரமான உணர்ச்சி மட்டும்தான் கவிதையிலிருக்கின்றது என்பதும் வைக்கப்பட்டிருக்கிற முக்கியமான விமர்சனங்களுள் ஒன்றாகும். இதனைப் பரிசீலனைக்கு உட்படுத்துவோம். பெண்ணியக் கவிதைகள் அல்லது பெண்ணியம் சார்ந்த கவிதைகள் என்று எப்படி நாங்கள் வரையறை செய்து கொள்கிறோம் என்பது முக்கியமாக எழுப்பப்படவேண்டிய ஒரு கேள்வியாகும். பெண்ணியம் நிச்சயமாகப் பல முகங்களையும் பல போக்குகளையும் கொண்டுள்ளது. அதனை ஒற்றைப் பரிமாணமுடையதாகக் குறுக்கிவிடுவது அதன் படைப்பாற்றலையும் அரசியல் முக்கியத்துவத்தையும் சுருக்கிவிடுவதாகும். 'கோணேஸ்வரிகள்' கவிதை பெண்ணியத்தின் ஒரு முக்கியமான அம்சத்தைப் பிரதிபலிக்கிறது என்பது மட்டுமல்லாமல் கவிதையின் பின்னாலிருந்து உந்தித் தள்ளுகிற 'கோபம்' என்கிற உணர்ச்சிகூட பெண்ணியத்திற்கு முக்கியமானது என்பதுதான் என்னுடைய வாதம் ஆகும். இதுபற்றிச் சிறிது விளக்கமாகவே சொல்லுவது அவசியம்.

உணர்வு, உணர்ச்சி இரண்டுமே பெண்ணிய ஆய்வுமுறைமைகளில் முக்கியமாகக் கருத்திலெடுக்கப்படவேண்டியவை என்பது பெண்ணியவாதிகள் பலரால் நீண்டகாலமாகவே வலியுறுத்தப்பட்டு வந்துள்ள ஒரு கருத்தாகும். அறிவுத் திரட்சிக்கும் இனத்துவம், வர்க்கம், பால், பாலியல்பு போன்ற வித்தியாசங்களுக்கு இடையேயான அரசியல் உறவுகளுக்கும் புரிந்துணர்வுகளுக்கும் ஒடுக்கப்படுபவர்களுடைய உணர்ச்சிகளைப் புரிந்து கொள்ளுதல் என்பது ஒரு இன்றியமையாத கருத்தியல் அம்சமாகக் கொள்ளப்படுகிறது. இது அவசியமானதும்கூட.

இதற்கு இன்னொரு முக்கியமான காரணமும் இருக்கிறது. நமது பாரம்பரியச் சமூக நடைமுறைகளிலும், சமூக மற்றும் உயிரியல் விஞ்ஞான நடைமுறைகளிலும் பெண்களையும் உணர்ச்சியையும் ஒன்றிணைத்துப் பார்க்கிற போக்கே ஆட்சி பெற்றதாக இருந்து வந்திருக்கிறது. ஆண்கள் அறிவினதும், உணர்ச்சிக்கு அப்பாற்பட்ட நியாயத்தினதும் பிரதிநிதிகளாககக் கருதப்பட்ட அதேவேளை, பெண்கள் கண்ணீர், அழுகை, மெல்லிதயம், நொய்மை போன்றவற்றின் இயற்கைப் பிறப்பிடங்களாகவே கருதப்படுகின்றனர். வெறும் உணர்ச்சியும், உணர்வுபூர்வமான ஒன்றிப்பும் அறிவுக் கண்களைத் திறந்துவிட உதவாது. அறிவு தேவையானால் உணர்ச்சியை விட்டுவிடவேண்டும். எனவே அறிவும் உணர்ச்சியும் இருவேறு துருவங்களாகக் கொள்ளப்பட்டு வந்த நிலைமையே ஆதிக்கமாக இருந்து வந்துள்ளது. உணர்ச்சிவசப்படாமல் தரவுகளை ஆய்வது, Objectivity போன்ற முறையியல் கருத்துகளினது பின்னணியும் இதுதான். உணர்ச்சி-உணர்வு என்பவை, குறித்த சில சூழல்களில் நிச்சயமாகவே புரிந்துகொள்ளல், அறிவுவிருத்தி என்பவற்றுக்கு உதவலாம் என்பது முக்கியமான பல கறுப்பு, மற்றும் மூன்றாம் உலக நாட்டுப் பெண்ணியவாதிகளின் வாதமாகும். எனினும், எல்லாச் சூழல்களிலும் உணர்ச்சி-உணர்வு என்பன முக்கியமான பங்களிப்பு ஆற்றமுடியும் என்பது இதற்குப் பொருளல்ல. பெண்கள், தலித்துகள் மற்றும் பல்வேறு வகையான ஒடுக்குமுறைகளுக்கு ஆட்பட்டிருப்பவர்களது அனுபவங்களும் உணர்ச்சிநிலைகளும் முக்கியமாக கவனத்திலெடுக்கப்படவேண்டியவை. இவர்களுடைய அரசியலையும் நாளாந்த ஒடுக்குமுறை அனுபவங்களுக்கு அவர்கள் முகங்கொடுத்து அதன்மூலமாகப் படைமிட்டு வெளிப்பாடாகும் அவர்களுடைய உணர்வுகள்-உணர்ச்சிகளைப் புரிந்துகொள்ள இவர்களுடைய வாழ்க்கை அனுபவ வட்டங்களுக்கு 'வெளியே' இருப்பவர்களும் ஒடுக்கும் குழு அல்லது சமூகத்தின் அங்கத்தவர்களுக்கும் வெறும் நல்லெண்ணம் மட்டும் இருந்தால் போதாது. வெறும் நல்லெண்ணம் மட்டுமே உயரிய அரசியல் உறவையும் சேதனா பூர்வமான புரிந்துணர்வைக் கொண்டு வருவதற்கும் போதாது. பெண்ணியம் தொடர்பான பிரச்சனைகளில் ஆண்களும், கறுப்பு மக்கள் தொடர்பான பிரச்சனைகளில் வெள்ளையர்களும், தமிழ் மக்கள் தொடர்பாகச் சிங்களமக்களும், முஸ்லிம்மக்கள் தொடர்பான பிரச்சனைகளில் தமிழ் மக்களும் - வெறுமனே இந்த 'நல்லெண்ணம்', 'ஆதரவு வழங்கல்' என்ற அடிப்படை நிலைகளுக்கு அப்பால் கடந்துசெல்லவேண்டிய முக்கியமான தேவை இருக்கிறது.

ஒடுக்குமுறைக்குள் நாளாந்தம் வாழ்ந்து வருபவர்களுக்கு இது தொடர்பான உடனடியான பாதிப்பும், ஒடுக்குமுறை எவ்வெவ்வாறெல்லாம் நுண்ணிய தளங்களில் வாழ்க்கையைப் பாதிக்கிறது, எவ்வாறு அவர்களுடைய காலம் இடம் கருத்தியல் என்பவற்றைச் சிதைக்கிறது என்பது பற்றிய நடைமுறை உணர்வும் தூலமாக இருக்கும். இவற்றிலிருந்து அவர்கள் எப்போதுமே நியாயமான அல்லது முற்போக்கான நிலைப்பாடுகளுக்கு வருவார்கள் என்பதோ அன்றியும் இந்த அனுபவங்களைச் செப்பமான முறையில் கருத்தியலாக அவர்கள் உடனடியாக வெளியிடுவார்கள் என்றோ நாம் எதிர்பார்க்க முடியாது. பல சந்தர்ப்பங்களில் அவர்களுடைய வெளிப்பாடுகள் உணர்வுபூர்வமாகவும் கோபமாகவும்தான் இருக்கும். இவற்றைப் புரிந்துகொள்ளவும், இப் புரிந்துணர்வுக்கு அடுத்தபடியாக அவர்களோடு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அரசியல் உறவைத் தீர்க்கமாக ஏற்படுத்தவும் 'வெளியே' உள்ளவர்கள் தம்மை நிறையவே தயார் செய்யவேண்டியிருக்கிறது.

"எனக்கு நிறையவே கறுப்பு நண்பர்கள் இருக்கிறார்கள். எனவே நான் இனவாதி இல்லை." என்றோ, "நாங்கள் தமிழர்களோடு நீண்ட காலமாகப் பழகி வருகிறோம். எங்களுக்கும் அவர்களுக்கும் பிரச்சனையே வந்ததில்லை. இப்போதுதான் என்ன நடந்தது என்று தெரியவில்லை. எல்லாம் அரசியல்வாதிகளால்தான்." என்றோ, "மாதத்தின் அரைவாசி நாட்கள் நான்தான் சமையல் செய்கிறேன். என்னைப் பார்த்து ஆணாதிக்கவாதி என்று சொல்லமுடியாது." என்றோ சொல்வது மூன்று நல்ல உதாரணங்கள். இந்த உதாரணங்களில், ஆழமான ஒரு பிரச்சனையை வெறும் மேலோட்டமான எங்கள் மனப் பதிவுகளூடாக நாம் கருத்துக்களை ஏற்படுத்திக்கொண்டு வருகிறோம். மற்றவர்கள் - இந்த உதாரணங்களில், கறுப்பு மக்கள், பெண்கள், தமிழர்கள்- எந்த வகையான அனுபவங்களுக்கு ஆட்படுகிறார்கள். அவர்களுடைய பார்வைக்கோணம் என்ன என்பதும் ஒடுக்கப்படுபவர்களின் அனுபவங்களும் எமக்கு வெறுமனே சூக்கும்மான விஷயமாகத்தான் இருக்கிறது. இரத்தமும், தசையும் உணர்வும் வாய்ந்தவையாக நாம் அவற்றைப் பார்ப்பதில்லை. இதுதான் மற்றவர்களுடைய வாழ்வுபற்றி எங்களை எந்தவிதமான உணர்திறனும் இல்லாமல், அதேநேரம் நாம் கருதுவதை மட்டும் திமிர்த்தனமாகச் சொல்லவைத்துவிடுகிறது.

இலங்கையைப் பொறுத்தவரை சிங்கள மக்களுக்கும்,வடஅமெரிக்கா-ஐரோப்பாவைப் பொறுத்து வெள்ளையர்களுக்கும் உலகம் முழுவதிலுமே ஆண்களுக்கும் பொதுவானதும் குறிப்பானதுமான அதிகாரமும் முதன்மையும் முன்னுரிமையும் உள்ளன. இதனை உணர்ந்துகொண்டு தம்மைத் தீவிர சுயவிமர்சனத்துக்குட்படுத்தி அதன்மூலமாக மற்றவர்களுடைய அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ள முன்வருவதால்மட்டுமே தீவிரமான அரசியல் உறவுகள் இவர்களுக்கிடையே சாத்தியமாக முடியும்.

அமில்கார் கப்ரால் என்ற ஆபிரிக்கப் புரட்சியாளர் இதனை 'வர்க்கத் தற்கொலை' என்பார். இன்றைய பெண்ணியச் சிந்தனையாளர்கள் இதனை ஒடுக்கப்படுபவர்களுக்கு இருக்கும் உணர்வறிவு (epistemic previlege) என்கிறார்கள்.

கோணேஸ்வரிகளூடாக வெளிப்படுகின்ற கோபத்தையும் உணர்ச்சியையும் 'வெளியாரான' நாங்கள் இத்தகைய அணுகுமுறைகளுக்கூடாகவே புரிந்துகொள்ள முடியும்.

இத்தகைய கவிதை எழுதும் கவிகள் தங்களுடைய பரிணாமப்போக்கில் அனுபவங்களையும் உணர்ச்சிகளையும் அவற்றின் சமூக, வரலாற்று, அரசியல் பகைப்புலத்துடன் இணைத்து மெருகேற்றப்பட்ட இலக்கியப் படைப்புக்களைத் தருவதற்கான நிறையச் சாத்தியங்கள் உள்ளன. ■

# வறுக்க வறுக்க மணக்கும் பூச்சி

என்னை வறுக்க வறுக்க
நான் முறுகி மணப்பேன்.
கருகேன்!

ஒரு சின்னப் பூச்சி நான்.
இந்த உலகத்தில் மிதந்து
இயன்றால் வானத்தை எட்டுவது,
இல்லையென்றால் போவதென்ற,
பெரிய கங்கணங்கள் கட்டாத -
ஒரு சின்னப் பூச்சி நான்!

சூரியனைத் திருப்பி என் பக்கம் வைக்க
எனக்கும் ஆசையுண்டு, ஆனாலும்
பிறரின் ஒளியை நான் ருசிக்க விரும்பவில்லை.
என் வீட்டிற்குள் விளக்கும்
பிறர் இல்லத்துள் இருளுமென்று,
நான்
இந்த உலகத்தில் மிதக்க ஆசையில்லை.

என் சிறகில் இந்த
உலகத்தை ஒட்டி
எங்கோ பறந்து கொண்டுபோய் வைத்து
குப்பை கூழன்களை அகற்றி,
மிகச் சுத்தமான ஒரு நிலத்தை
அதில் சிரித்த முகங்களுடன் மிருகங்களை
ஆக்கிப் பார்க்க ஓர் ஆசையுண்டு, அதற்காக -
இந்த உலகத்தில் மிதக்கின்ற ஒரு பூச்சி!

இன்னும் ஒட்டவில்லை என் சிறகில் உலகம்.
நான் மிதக்க மிதக்க
வெயில் இறைத்து வெயில் இறைத்து
என் நீர்நிலைகள் வற்ற
முறுக வறுக்கிறது, ஏனோ தெரியவில்லை,
நானும் கருகவில்லை!

**சோலைக்கிளி**

17/05/98



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பிரளயப் பெரும்பயலின் பரிகாசம்

சேனன்

அவள் முலை இடுப்புவரை தொங்கியது. உதடுகள் நாடிவரை தொங்கியது அவளுக்கு வேறு எங்குமே அவர்கள் முத்தமிடுவதில்லை. கண்டுகளுக்குப் பாத்தி வெட்டும் போதோ அல்லது வயல்களில் களை எடுக்கும்போதோகூட அவள் ஆண்பிள்ளைகளைப் பெற்றுக்கொண்டிருந்தாள். இதற்கிடையில் ஒவ்வோர் ஆண் குறிகளையும் தட்டி எழுப்பி வேலைசெய்விக்க அவளுக்கு நேரம் கிடைத்துக் கொண்டிருந்தது. அரைகுறைக் கனவுகளும் ஆனந்தலகரியும் போக மீதி நேரங்களில் அவர்கள் இளைப்பாறினார்கள்.

எல்லாம் சமத்துவமாயும் சுத்தமாயும் இருந்த ஒரு நாள் திடீரென அவளுக்கு கடுங்கோப முண்டான செயலொன்று நடந்தது. மாடுகளுக்கு கஞ்சி காட்டிக்கொண்டிருந்த பொழுதென்று ஞாபகம் - அவளுக்கொரு குழந்தை பிறந்தது. ஒரு வலது குறைந்த குழந்தையை அவள் இதுவரை பெற்றிருக்கவில்லை. ஆண்குறி இருக்குமிடம் அசிங்கமாக மூளியாக இருந்தது. அவளுக்கு அருவருப்பில் உடல் புல்லரித்தது. மற்றவர்கள் பார்க்குமுன் அந்த அரைகுறையைக் காணாமற் போகச் செய்யத் திட்டமிட்டாள். தன் மார்புக்கச்சைக்குள் செருகிவிட முடியாதபடிக்கு அது பெரிதாக இருந்தது. ஆக அதன் இருத்தலின் வெளிச்சத்தில் அவர்களுக்குக் கண் கூசியது. கண்களைப் பிசைந்து நடுங்கினர். அவளுக்குப் புரியாத விசயங்கள் அவர்களுக்குப் புரிந்தது. அவளைப்போல் தாங்களோ தங்களைப்போல் அவளோ எண்ணிக் கொண்டிருக்கவில்லை என்ற ஒரு கருத்துப் பிறந்தது. அது உச்சியில் இருந்து உள்ளங்கால்வரை அவர்களுக்கு ஒரு உற்சாகத்தைக் கொடுத்தது. இருப்பினும் இந்த அழிவின் அறிவிப்பை இறந்த காலத்துக்குக் கடத்த அவர்களுக்கும் தெரியவில்லை. எப்படியும் அவர்கள் புதுமையாக இயங்கவேண்டியிருந்தது. தம் இயக்கத்தின் வடிவத்தை நிர்ணயித்தல் தவிர அவர்களுக்கு எவ்வித அசௌகரியங்களும் இருக்கவில்லை. சிதைந்து பிறந்த ஒன்று வளர நியாயமில்லாததால் இவர்கள் பரிசோதனைகளில் அழிந்தொழிந்து போயிற்று. அவர்கள் இழுத்த இழுப்புகளுக்கெல்லாம் அது ஈடுகொடுத்தது. இரண்டு நாட்களுக்குள் இறுக்கி இழுக்காமலே கை கால்கள் பிய்ந்து போயிற்று.

அவர்கள் என்றைக்கும் நிதான புத்தியின் தோற்றுவாய்கள். 'புற-அகவயக்' காரணிகளை ஆய்ந்து இச் சாத்தியத்தின் இரகசியத்தை அவர்கள் கேள்வி கேட்டனர். இதற்கான மாற்றுக்கள்பற்றிச் சிந்தித்தனர். அவளின் கண்களுக்குள்ளால் ஊடுருவி மனதைச் சல்லடை போட்டனர். "இதுவரை காலமும் அவளை எப்படிக் காதலித்தோம்! அவள் அனுபவிக்காத சுதந்திரம் என்று ஏதாவது உண்டா?" என்று முணுமுணுத்தனர். அவளும்தான் எப்படிப்பட்டவள்! "உலகத்தில் எல்லாவற்றையும் விட அதிகமாக உன்னைத்தான் காதலிக்கிறேன் என்பாள் அவள். எங்கே அவளைக் கொஞ்சம் குண்டுசியால்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குத்திப்பார். அவள் உன் நெஞ்சை வகிர்ந்துவிடத் தயாராக இருக்கிறாள்"[1] என்று கவிதைச் சிலேடைகளால் எல்லோரும் தங்கள் கண்டுபிடிப்புகளைக் கத்திப் பிரகடனப்படுத்தினர். அவர்கள் அனைவரும் விளங்கிக்கொண்டனர். ஆச்சரியமான விதத்தில் அருவருப்புக்குப்பதில் பயந்துகொண்டனர். அவள் மேலும் பின்னக்கூடிய சதிவலையைப் பிய்த்தெறியப் பலவாறு முயன்று முடிவில் அவளை நித்தம்கூடியிருத்தலில் வந்து முடித்தார்கள். புருசன்கள் அவதானிப்புகளுக்கு நியமிக்கப்பட்டுக் கொண்டிருந்தார்கள். இந்தப் புரிசன் அவளை இரண்டறக் கலத்தல் தவிர்த்து வேறெதுவும் தெரியாதவன். அவள் இயல்பில் இருந்து ஒதுக்கி வைக்கப்பட்டாள்.

ஒளி விளக்குகளும் பந்த பாவனைகளும் தன்னை வடிக்க வென்று எப்படி அவளுக்கு விளங்கும்? அனைத்து வேட்கைகளையும் அவர்கள்தான் மிக்க பாதுகாப்பாக பேணச் சொன்னனர். என்ன இருந்தாலும் எதுதான் நடந்திருந்தாலும் தங்களுக்காக ஆயிரமாயிரம் விளக்குகள் எரிவது அவளால்தான் என்ற நம்பிக்கையை அவர்கள் அசைத்துப் பார்க்கவில்லை. அவர்கள் கண்டிராத உலகத்தில் இருந்து வந்தவள் போல் நம்பமுடியாதபடி அவள் அவர்தம் மகுடிக்கிசைந்தாள். புதுமையின்பம் அவர்களைப் புரட்டிப் புரட்டிப் போட்டது. அதன் தொடர்ச்சியையும் மரபையும். அவர்கள் பேணிக்கொண்டனர். கொஞ்சம் கொஞ்சமாக அவள் உச்சந்தலையைப் பிளந்துகொண்டு அவளுக்கும் மாற்றுக்கள் வெடித்தது.

என் மலத்துடனும் மூத்திரத்துடனும் பிறந்த அரைகுறைகள் இவர்கள் என்பது அவளுக்கு உறைத்தது. முந்தியதனைத்தும் சோகமானதாக இருக்க வேண்டும் என்பதை அவள் ஊகித்தறிந்தாள். அவர்கள் முகங்கள் எல்லாவற்றிலும் அவள் தெரிந்தாள். ஒரு நாள் குளிரும் அதிகாலைப் பொழுதில் "என் மலத்துடனும் மூத்திரத்துடனும் பிறந்தவர்களே!" என அவர்களை விழித்தாள். இரண்டு தொடைக்கும் இடையில் வைத்து அவர்கள் ஆண்குறியை அவள் நெரித்த நெரிப்பில் அவர்கள் ஆவென்று கத்திக்கொண்டு ஓடினர். எல்லோரும் தம் ஆண்குறிகளைப் பிடித்துக் கொண்டு கூச்சலிட்டுத் திரிந்தனர்.

தங்கள் பற்களுக்கிடையிலான சூத்தைகளை நக்கியெடுக்கும்படிகூட அவர்களால் இனிக் கேட்கமுடியாது. அவளால் இனி எந்த உபயோகமும் இல்லை. அவள் தன் வரலாற்றுக் கடமையை முடித்துக்கொள்ளும் தருணம் வந்துவிட்டதை அவர்கள் உய்த்துணர்ந்தனர். அடுத்த கட்டத்தில் அவள் மீண்டும் தம் மகுடிக்கிசைவாள் என்ற நம்பிக்கையில் உடனடி வைத்தியத்துக்காக அவர்கள் ஒன்று கூடினர். உடலின் அனைத்துப் பிரிவுகளும் பாகப்பிரிவினைசெய்து அதற்கான பொறுப்புகள் உரியவர்களிடம் ஒப்புவிக்கப்பட்டது. மிகவும் நிதானமாகவும் நனவூர்வமாகவும் அவர்கள் தம் கடமையை இயக்கினர்.

அடுத்த கட்டம் அல்லது எதிர்காலம் அவர்களுக்கு தெட்டத் தெளிவாக வெளிச்சமான ஒன்றாக கண்ணுக்கு முன்னால் நேரே இருந்தது. காரியம் முடிந்த கையோடு வெறுங்காலால் நடந்தே போய்விடக் கூடிய தூரத்தில் அது இவர்களுக்காகக் காத்துக் கிடந்தது. அவள் சிரிப்பின் ஒலி அலைகளை முதல் தடவையாக அவர்கள் வான்வெளியில் கேட்டு ரசித்தனர். அவர்கள் தம் ஆண்குறிக்குப் பதிலாக தடிகளையும் தண்டுகளையும் பாவித்தனர். ஒவ்வொரு நாளும் அவளை விரட்டிப் பிடித்து வந்து எதுவும் அநாகரிகமோ அசிங்கமோ நடக்கப் போவதில்லை என்பதைத் தெளிவாக்கியபின் இயற்கையாலும் அவள் உடல் அசைவுகளாலும் தூண்டப்பட்டு மட்டும் புரட்சியைக் கட்டம் கட்டமாகச் செய்தனர். இதில் சோகத்துக்கு ஒரு சொட்டு இடமும் இல்லை. பரந்த அறிவுத் தளத்தில் பாராமல் கண்ணீர் விடுவது, உணர்ச்சிவசப்படுவது எல்லாவற்றுக்கும் இடமே இல்லை. ஏனெனில் அனைத்தும் ஏலவே திட்டமிட்டபடி கட்டம் கட்டமாக நிகழ்வது தவிர்த்து புதுமையில்லை. அவள் சிரித்தாள். சிரித்துவிட்டுப் போகிறாள். அது பக்கவிளைவுகளில் ஒன்று மட்டுமே. இதைப் பற்றி நான் சொல்வதானால் - படிப்படியாகச் சித்திரவதை செய்து அவளைக் கொன்றனர் - அவளது குறியில் நெருப்புவைத்துச் சோறு பொங்கினர். குருதியில் சொதி வைத்துக் குடித்தனர். ஆயிரம் கைகளும் ஆயிரம் தலைகளும் அழியாத பிறப்பும் அவளுக்கு யாரும் வரம் கொடுத்திருக்கவில்லை. ஒருநாள் முழுக்க அவள் படுக்கையை விட்டு எழும்பவும் இல்லை. அசையவும் இல்லை. இரவுவந்து புருசன்மார் உறவுகளும் கொண்டு விடிந்தபிறகுதான் அவர்களுக்கு அவள் செத்துப்போயிருக்கலாம் என்ற சந்தேகம் வந்தது.

செத்துப்போவதுபற்றி அவர்கள் கேள்விப்பட்டிருக்கிறார்கள். மேலதிக விபரங்களுக்காக அவள் உடலைச்சுற்றி அவர்கள் காத்திருந்தார்கள். இப்போது அவர்களுக்குக் கிடைத்த மாபெரும் சுதந்திரத்தை ரசித்து அனுபவிக்க மறந்துபோய் அவர்கள் இருந்தார்கள்.

இயற்கை தன் இஸ்டப்படி நடந்துகொண்டு இருந்த ஒரு வெட்டவெளியில் அவள் கிடந்தாள். எதையும் ஸ்தம்பிக்கவிட மனமற்று ஆளில் ஆள் மோதிக்கொண்டனர். எல்லாம் இத்தோடு முடிந்தது என்பதை உணர அவர்களுக்கு நீண்ட நாட்கள் பிடித்தது. அவர்கள் அவளை ஏற்க மறுத்தனர். தங்களின் அனுமதியில்லாத அவளின் எந்த முடிவையும் அவர்கள் வெறுத்தனர். அது சாத்தியமில்லை என்பதை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிச்சயமாக நம்பினர். ஆதலின் இந்த நாடகத்தைக் கட்டு டைக்க அவர்கள் முக்கினர்.

தன்வீட்டு நீண்ட ஒழுங்கையின் முனையில் அவள் நிற்பதாக சிவநாதன் கத்தினான். பாலகிருஸ்ணன் சைக்கிளை எடுத்துக்கொண்டு கலைத்துக் கொண்டு போனான். கடைசியாக 'இராசையா' வீதியால் திரும்பியதாகவும் அதற்குப் பிறகு காணவில்லை என்றும் இளங்கோ சொல்ல எல்லா வீதிகளிலும் எல்லாரும் தேடினர். ஊரே அல்லோலகல்லோலப்பட்டது. அவள் காணப்பட்டதாக கருதிய இடங்கள் வீதிகளில் எல்லாம் இரவிரவாக கத்தியுடன் அவர்கள் காவலிருந்தனர். அவள் எங்கு போயிருக்கமுடியும். இவர்கள் இல்லாமல் அவள் எப்படி வாழ முடியும்?

அவள் பட்டினி கிடப்பதை விரும்பாத தேவன் அவளுக்கு உணவூட்ட விரும்பினான். அவர்கள் மாறி மாறிப்புணர்ந்தும் எப்பிரயோசனமும் இல்லாதபோது எப்படி அவளை அணுகுவது என்று அவர்களுக்குத் தெரியவில்லை. அவள் கேட்ட அனைத்தையும் நினைத்து நினைத்துப் பார்த்து அவளுக்காக ஒவ்வொருத்தரும் கொண்டு வந்தனர். அவளுக்கு ஆயிரக்கணக்கான வாக்குறுதிகளைத் தந்தனர். இனிமேல் ஒருபோதும் எழாவண்ணம் தங்கள் மாற்று எண்ணங்களை முடக்கிவிடுவதாகச் சொன்னனர். எல்லாம் எங்கோ தூரத்தில் மீண்டும் எதிரொலித்தது. அவள் சிரித்த வாய் திறக்கவேயில்லை.

அவள் எங்காவது ஒளிந்திருக்கக்கூடும் என்ற சந்தேகத்தில் மூலைமுடுக்கெல்லாம் தேடியபின் கூரைகளிலும் பனைமர உச்சிகளிலும் ஏறி வானைப் பார்த்துக்கூவி அழைத்தனர்.

இத்தனை ஆர்ப்பாட்டங்களுக்கும் மத்தியில் எவ்வித நன்றியும் இல்லாத அவள் அசைவற்றுக் கிடந்தாள். அவளால் எப்படி இது முடிகிறது? வானத்தை நோக்கிக் கற்களை வீசினர். அவளில் பட்டோ படாமலோ அவை திரும்பி வந்தன. கோபத்தில் பற்களைக் நறுநறுவெனக் கடித்தபடி உடல் நடுங்க சிவந்த கண்களுடன் அங்கும் இங்குமாக நடந்து திரிந்தனர். அவளது உயிருள்ள சதையில் 'சதக்' என்று கத்தியை இறக்கும் சாத்தியத்தை இல்லாமற் செய்த இச் சதிவலையை அவர்கள் கற்பனை செய்யாமல் இருந்தது அதிசயங்களில் ஒரு அதிசயம் தான். கத்தி காற்றில் 'விசுக்' என்றுமட்டும் சத்தமிட்டது.

அவளை முத்தமிட்டு ஆவியோடு தழுவ அவர்கள் துடியாய் துடித்தனர். அவளினால் இயக்கப்படுவதையும் அவளினால் மிதிக்கப்படுவதையும்கூட இன்பமாக ஏற்க அவர்கள் தயாராக இருந்தனர். அந்தப் பழகிய இனிய நாட்களுக்காக அவர்கள் எதுவும் செய்யத் தயாராக இருந்தனர். இருப்பினும் அவர்கள் அனைவருக்கும் முடிவில் ஒரு உண்மை புரிந்தது. மணந்து கொண்டிருந்த அவள் அடுத்த கட்டமாக தங்கள் ஆடுமாடுகளைப்போல் தாங்கள் பார்த்துக் கொண்டிருக்க அழுகப் போகிறாள். பிய்ந்து புழு மொய்த்து சிதையப் போகிறாள் என்று எல்லோருக்கும் தெரிந்தது. அதைத் தவிர்ப்பதற்கு அவர்களுக்கு ஒரு வழிதான் இருந்தது. எல்லோரும் கூடிப்பேசி அவளை வெட்டித் திண்டனர்.

✦✦✦

தேவீர் வணக்கம். நான் எத்தனை தேசங்களில் ஒரு பெண்ணைத் தேடினேன். அவளுக்காக ஆயிரம் கவிதைகளை நான் வைத்திருக்கிறேன். எல்லாம் மறந்த அவள் சேலத்தில் எங்கோ செத்தபடி - என் விடலைப் பருவத்து வரிகளில்மட்டும் உயிர்ப்பாய்.

"உனக்கு யாராவது சந்தோச ஊசி போட்டால் மட்டும்தான் உன் தேகத்தில் தேவதை குடிவருவாள்." "எனக்குக் காதலா?" என்பாய் ஏளனமாய். "என் தம்பி இன்னும் பத்தாவது பாஸ் பண்ணவில்லையே. அண்ணனுக்கு இன்னும் வேலை கிடைக்கவில்லையே. எனக்கெப்படிக் காதல் வரும்" என்பாய். அதற்குப் பிறகு நீ வாழவேண்டுமென்ற அவசியமிருக்குமோ? உனக்குத் தெரியாது. உன்னால் நேசிக்கப்படுவதையும் எனக்காக நீ துன்பப்படுவதையும் மற்றவர்களைப் போலவே நானும் விரும்பினேன்." - உன்னில் இருந்து ஊற்றெடுத்த அன்பு சுகத்தை அனுபவிக்கும் மட்டும் அனுபவித்துவிட்டு கடைசியில் தூரப்பார்த்து துப்பிவிட்டார்கள். உன்னில் இன்னும் இனிப்பிருக்கிறது. உனக்குள் இன்னும் உயிர் இருக்கிறது என்பது எனக்குமட்டும் தெரியும்.

சின்னஞ்சிறு வட்டுகள்கூட இன்று உன் வாழ்வை விமர்சிக்கின்றன. நீயோ சிரித்தபடி அவர்தம் சுகத்தை விசாரிக்கிறாய். அதுதான் நீ பாலூட்டி வளர்த்த உன் தம்பி உன்னைப் பைத்தியம் என்கிறான். நீ அவனை வைத்தியம் படிக்க வைத்தாய். உன்னில் இல்லாத வியாதியை அவன் கண்டுபிடிக்கிறான்

சமூகத்தின் பசியை நிறைவு செய்யுங்கள் என்றுசொன்ன உன்னை உண்டு ஏப்பம் விட்டுக்கொண்டிருக்கிறது இச்சமூகம். "யாரு அந்த விசர்ப் பொண்ணோ?" என்று உன்னை இறந்த கால வாக்கியத்தில் விசாரிக்கிறது சமூகம்.

பரிதாபகரமான நான் என்ன செய்யமுடியும்? இன்றோடு உன் நினைவுகளை இருட்டுக்கு அனுப்புகிறேன். உன்னைப்பற்றி ஒன்றுமேயில்லை. நான் வாழவேண்டுமடி. யார் நினைவிலும் இல்லாத நீ என் நினைவிலும் இருக்கவேண்டாம். உனக்காகக் கண்ணீர் விடுவது இன்று, கடைசியாக இருக்கட்டும். உன்னை உறிஞ்சிவிட்ட சமூகத்திடம் இருந்து அதை நான் திரும்ப உறிஞ்சவேண்டும். ■

---

[1] மார்க்சீம் கார்க்கி - 'ஜிப்ஸி'



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அவிழ்த்துப் போட்ட ஆடைகளும் கொஞ்சம் கவிதைகளும்

கழிந்த கடைசிப் பொழுதின்
மிஞ்சிய எச்சம்
இன்றைய பொழுதை
இருள் கலையா வேளையிலும்
உணர்வை உசுப்பியது

சபிக்கப்பட்ட இரவுகளெனினும்
பிசுபிசுத்த வெற்றுடம்பில்
உரோமக் கால்களும் சிலிர்த்துக்
கொள்ள
படர்ந்து கொள்கிறது
பசலை நோய் பீடித்த
காதலிக் கொடி.

படுக்கையருகில்
அவிழ்த்துப் போட்ட ஆடைகளும்
கொஞ்சக் கவிதைகளும்

மூன்று இதழ்களுடன்
முற்றுப் பெறப்போகும் - அல்லது
இடைநிறுத்தப்படும்
புத்தி தெளிந்த தேகம் மெலிந்த
புத்தகங்களுக்காய்
எழுதப்பட்ட கவிதைகள்
புலம்பெயர்ந்தவனை பாடி
புலம்பிக் கிடந்தது.

வெளியே
துருவத்து சூரியன்
தெற்கே உதித்திருக்க வேண்டும்
ஒளியும் கசியாஎன்
நிலக்கீழ் அறையுள்
அந்த
கோடை காலக் குருவியின்
மந்தகாச குரல் மட்டும் எப்படியோ
நுழைந்து விடுகிறது
பருவத்து காதல் போன்று!

கூதல் பொழுதுகளில்
புலம் பெயர்ந்த அந்தப் பறவையென்
தேசம் போயிருத்தல் கூடும்
அம்மாவோ அப்பாவோ
இல்லையென்?
காதலிகளையேனுமது
பார்த்திருத்தல் கூடும்.

விசாரிக்க வேண்டும்.

அம்புலிமாமாவில்
பறவைகளும் தமிழ்பேசும்
அவ்வுலகம் அற்புதமானது.
குட்டிபோட மறுக்கும்
மயிலிறகு மட்டுமே
கவலைக்குரிய சமாச்சாரம்.


பறக்கும் சக்தி எனக்குக் கிடைத்தால்...?
ஐந்தாம் வகுப்பு சிவலிங்க வாத்தி
இன்று வந்து கேட்டால்
கட்டுரையை
அனுபவித்து எழுதலாம்.

சக்கரவர்த்தி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முன்னொரு காலத்தில் பேச்சு எழுத்து போன்ற சனநாயக உரிமைகளுக்காக அனுங்கி அனுங்கி குரல் கொடுத்தவரும் இன்றும் ஸ்டாலினிஸ—பொல் பொட்டிஸ தத்துவார்த்த அடிச்சுவட்டில் இம்மியளவும் பிசகாது சக்கைபோடு போடும் 'சமர்' பத்திரிகையின் ஆசிரியரும்... வன்முறையால் கட்டப்பட்டுள்ள சமூக ஒழுங்குகளில் ஒரு சின்ன ஒழுங்கவிழ்ப்பு நிகழினும் துடித்துப் பதைத்து எழுந்துவரும்—துண்டுப்பிரசுரம் போட்டுவரும் கருக் கலைப்புக்கு எதிராக புயல் வேகப்பிரச்சாரம் செய்வதில் இரண்டாம் அருளப்பன் சின்னப்பனையே 'சைற்' எடுத்தவருமான...

## பி. றயாகரன் அவர்களின்

### பிரிவாற்றாமை, குறித்த

# ❖ நினைவுக் கல்வெட்டு ❖

*ஒரு பாடல்

*ஒரு நாள்*
*நீ இந்த வீட்டிற்குள் மெல்ல நடந்து வருவாய்*
*நான்*
*ஒரு நீண்ட ஆப்ரிக்க கவுன் அணிந்திருப்பேன்*
*உட்கார்ந்து நீ பேசத்தொடங்குவாய் 'கருப்பு...'*
*உனது கையை எடுத்து எனதுள் வைத்துக் கொள்வேன்*
*நீ - என்னைக் கவனிக்காமலேயே, பேசிக்கொண் டிருப்பாய்,*
*'ஆமாம், இந்தச் சகோதரனை...'*
*மெல்ல உன் கையை என் தலையில் நழுவவி டுவேன்*
*சலிக்காமல் நீ உளறிக்கொண்டிருப்பாய் 'புரட்சி இருக்கிறதே...?'*
*உனது கையை என் வயிற்றில் அழுத்திப் பிடித் திருப்பேன்*
*எப்போதும் போல நீ தொடர்ந்து கொண்டிருப் பாய்*
*'இது எனக்கு சுத்தமாகப் புரியவில்லை...?'*
*உனது கையால் என் உடலை வருடிக்கொண் டிருப்பேன்*
*பிறகு மெல்ல உனது டாஷிகியை உருவி எடுப்பேன்*
*அப்போது நீ சொல்வாய் 'உண்மையில் நமக்கு இப்போது*
*தேவைப்படுவது என்னவென்றால்...'*
*இப்போது நாவால் உனது கையை வருடிக் கொண்டிருப்பேன்*
*நீ, 'நான் அதை எப்படிப் பார்க்கிறேன் என்றால், இனி நாம்...'*
*உனது காற்சட்டைப் பொத்தான்களை அவிழ்த் திருப்பேன்*
*'சரி அந்த நிலையில் எப்படி...'*
*உனது உள்ளாடையை உருவி எடுப்பேன்*
*அப்போது உனது நிர்வாண நிலை*
*உனக்கு உறைக்கும்*
*உன்னை உனக்குத் தெரியும்*
*நீ வெறுமனே இப்படிச் சொல்லுவாய்*
*'நிக்கி*
*இது எதிர்ப்புரட்சிகரமானதில்லையா?'*

❋❋❋❋❋



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**விதியை நினைத்துப் புலம்பல்!!**

கடந்த காலங்களில் ஒரு 'லிமிட்' பண்ணிய வகையில் சனநாயக உரிமைகளுக்காக குரல்கொடுத்தும் எழுதியும் வந்த பி.றயாகரன் அவர்களில் நோயரும்பு காலத்தில் இருந்த சாதித்தடிப்பு, ஆணாதிக்கம், சீர்திருத்தவாதம் ஆகிய கொடூர நோய்களின் குணங்குறிகளே முத்திமுறுகி அந்த சனநாயகவாதியை இறுதியில் கொன்றுபோட்டன என்பதையே கீழ் வரும் பிரதேசப்பரிசோதனைக் குறிப்புகள் நிருபிக்கின்றன.

பொதுவாக செத்த பாம்பை அடிப்பதும், பிணங்களோடு மாரடிப்பதும் சலிப்பும் அலுப்பும் பிடித்த வேலைகளே. நாம் யாரொடு நோவோம்? எம்மோடொத்த தோழியரும் தோழர்களும் போஸ்ட்மொடர்னிஸ குறிப்புகள் எழுதுங்காலை எம்மை மட்டும் போஸ்ட்மொர்டனிஸ குறிப்புக்கள் எழுதப்பணித்த பாழும் விதியே... விதியே...

**பிரேதப் பரிசோதனைக் குறிப்புக்கள்:**
**குறிப்பு 01**

பாரிஸில் 'இருள்வெளி'க்கு (இது புகலிடவாழ்வு, பெண்ணியம், விளிம்புநிலை மாந்தர், தமிழ்அரசியல் குறித்த பின்நவீனத்துவப் படைப்புக்களைத் தாங்கும் ஒரு புகலிடத் தொகுப்பு) 12/07/98 ல் ஓர் பன்முக வாசிப்புக் கூட்டம் நமது தோழிகளாலும், தோழர்களாலும் ஏற்பாடு செய்யப்பட்டு ஓர் அழைப்பிதழும் வெளியிடப்பட்டது. உடனே, சூட்டோடு சூடாகவே நேர்சீராக இருக்கும் சமூகத்தை நாம் சீரழிக்கத் தொடங்கிவிட்டோம் என்ற கண்டனத்துடன் "ஓர் சமூகச் சீரழிவின் தொடக்கம்..." என்று தலைப்பிட்டு றயாகரனாலும் அவர்தம் அரசியல் கூட்டாளி அசோக்காலும் ஓர் துண்டுப்பிரசுரம் வெளியிடப்பட்டது. அந்தப்பிரசுரத்தின் சிறப்பு எதுவெனில் றயாகரன் சேடம் இழுக்கத் தொடங்கிவிட்டதை அது செவ்வனே அறிவித்ததே. "இருள்வெளி" அழைப்பிதழ் இப்படி ஆரம்பமாகிறது.

இருள்வெளி

வசந்தகால ஒன்றுகூடல்?
யை நோக்கியும்
யிலிருந்து திரும்பவும்
யில் சுகிக்கவும்

'இருள்வெளி' தொகுப்பின் முன்னுரையில் 'தூரத்தில் விடிவெள்ளிகள் இல்லை/ இருள்/ அப்பாலுக்கும் அப்பால்/ இருள்/ இருள்வெளி ' என்று எழுதினார் தோழர் சுகன். ஆனால் பல்வேறு தளங்களில் இயங்கிக் கொண்டிருக்கும் தோழியரும் தோழர்களும் 'இருள்வெளியே இல்லை' யென்றும், 'இருள்வெளியே எல்லை' என்றும், இன்னும் வித்தியாசம் வித்தியாசமான வாசிப்புக்களை முன்வைக்க அனைவரின் கருத்துக்களுக்கும் களம் அமைக்குமுகமாக அழைப்பிதழ் பிரதி கட்டமைக்கப்பட்டது. இந்தப் பிரதியை றயாகரன் எப்படி வாசிக்கிறார் பாருங்கள்:

"இங்கே சுகிக்க பெண் மட்டும் இல்லை அதையும் போட்டிருந்தால் மேலும் பின்நவீனத்துவ வழியில் கட்டுடைத்தமாதிரி இருந்திருக்கும்" (துண்டுப் பிரசுரத்தில் இருந்து)

இங்கு ஆடான ஆடெல்லாம் தவிடு புண்ணாக்குக்கு அலைய றயாகரன் எதற்கலைகிறார்? என்ற எமது அவதானிப்பை சுட்டிக்காட்ட தயவுசெய்து தோழியரும் தோழர்களும் எம்மை அனுமதிக்க வேண்டும்.

சுகிப்பு என்பதற்கு நல்லனுபவம், இன்பமனுபவித்தல், செல்வங்களை அனுபவித்தல் என்று அகராதி அர்த்தம் தருகிறது. ( நா. கதிரவேற்பிள் ளையின் தமிழ்-தமிழ் அகராதி Asian Education Services New delhi 1987) அகராதியை விட்டுத்தள்ளுங்கள். ஒவ்வொரு சொல்லுக்கும் வெவ்வேறு வாசகர்கள் மில்லியன் கணக்கான அர்த்தங்களை கற்பித்துக் கொள்வதற்கு பில்லியன் கணக்கான சாத்தியங்கள் உண்டு. ஆனால் றயாகரனுக்கு சுகிப்பதென்பதற்க்கு தெரிந்த ஒரே அர்த்தம் ஒரு பெண்ணைச் சுகிப்பதுதான். சரி றயாகரனின் மண்டைக்குள் சுகித்தல்/ நல்லனுபவம்/ இன்பமனுபவித்தல் போன்ற சொற்களுக்கு உடலுறவைத் தவிர வேறெதையும் யோசிப்பதற்கு இடமில்லையென்றே வைத்துக்கொள்வோம். ' சுகிப்பதற்கு பெண்கள் மட்டும் இல்லை' என்று எகத்தாளமாய் எழுதுபவரால் 'சுகிப்பதற்கு ஆண்கள் மட்டும் இல்லையென்று ஏன் எழுத முடியாமல் போனது?' 'ஏன் பெண்ணை மட்டும்தான் சுகிக்கலாமோ? ஆணைச் சுகித்தால் சுகிபடாரோ?' என்று எமது தோழி ஒருவர் கேட்கிறார். என்ன சொல்லப் போகிறார் பச்சை ஆணாதிக்கவாதி றயாகரன்?

'இருள்வெளி' அழைப்பிதழில்
'நாலு நியாயத்தை அடிச்சுக் கதைக்க
வைன் வி/ஸ்கி பியர்
G /16-64 வின்சன் ' என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. விடுவாரா புனித றயாகரன். மோகன்தாஸ்காந்தி, ராஜகோபாலாச்சாரி 'றேஞ் சில்' கடும் எதிர்ப்புக்காட்டி இப்படி எழுதினார் "நாலு நியாயத்தை அடிச்சுக் கதைக்கவும் வைன், விஸ்கி, பியரைக் குடித்து கூத்தாடவும் சமூகப்பற்றாளர்களை அழைத்து, போராட்டத்தை, கேவலப்படுத்த அழைத்த இந்த முற்போக்கு வேடமிட்ட பிற்போக்குகளை இனம் கண்டு அம்பலப்படுத்த வேண்டியது சமூக அக்கறை கொண்டோரின் இன்றைய வரலாற்றுக் கடமையாகும். (துண்டுப்பிரசுரத்தில் இருந்து)

றயாகரனின் வேண்டுகோளை சிரம்மேல் ஏற்றுக்கொண்டு தமது வரலாற்றுக்கடமையை செய்து முடித்த நமது சைவவேளாள, செம்புவேளாள, ஒழுக்கவாத நண்பர்கள் நாம் உடுக்கை இழந்து நிற்கும்போது ஓடிஒழித்து விட்டார்கள். இந்த வைன், விஸ்கி விசயத்தில் இழுத்தடித்து சளாப்பிப் பேசுவதற்கு எதுவுமில்லை. கட் அன்ட் றைற்றாய்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பேசிவிடுகிறோம்.

நாம் விடிந்தால் பொழுதுபட்டால், காசிருந்தால் றிஸ்க் எடுக்காமல் கடையில் வாங்கி, காசில்லா விட்டால் றிஸ்க் எடுத்து சுப்பர்மார்க்கட்டுக்களில் திருடி தண்ணியடித்துவிட்டு அண்ணன் தேவாவின் கானாப் பாடல்களைப் பாடிக்கொண்டு பாரிஸ் வீதி களில் திரிபவர்கள்தான். ஒழுங்காய் வேலைக்கு போய்வருதல், குடும்பம், அதிகாரம் மையப்படுத்தப் பட்ட அமைப்புக்கள், கட்சிகள், இயக்கங்கள், அனைத்தையும் மூர்க்கமாய் எதிர்ப்பவர்கள்தான். ஆனாலும் எங்களிடமும் சொல்வதற்கு எங்களின் கதை இருக்கிறது, எங்களிடம் சொல்வதற்கென்று எங்களின் வாழ்வும் எதிர்கலாச்சாரமும் இருக்கி றது. எங்களிடமும் அடிச்சுக் கதைக்க நாலு நியா யம் இருக்கிறது. மதங்களும், மகாத்மாக்களும், ஆதிக்கவர்க்கமும்/ சாதியும்/ பாலும் கட்டமைத்தி ருக்கும் அறநெறிகளை கவிழ்த்துப்போடும் தைரிய மிருக்கிறது. அதை பப்பிளிக்காய் நோட்டிஸில் போடும் நேர்மையும் இருக்கிறது.

ஒரு அவசியமான பிளாஷ் பாக்:

சென்றவருடத்தின் (1997) ஒரு இளவேனிற் கால த்து மாலைப்பொழுது. அன்று வேலணை மத்திய மகாவித்தியாலய பழைய மாணவர்களின் ஒன்று கூடல் பாரிஸ் - PORTE DE LA CHAPELLE ல் நடை பெற் றது. முன்னாள் அதிபர் காராளபிள்ளை போன்ற 'சொல்லப்பட்ட' கல்விமான்கள், கனவான்கள் இரு ந்த அவையில் 'ஒழுக்கம் என்றால் என்ன' என்ற தலைப்பில் றயாகரன் சொற்பொழிவு ஆற்றிக் கொண்டிருக்கிறார். மேசைக்கு மேசை வைன் போத் தல்கள் வழங்கப்படுகின்றன. ஓரக்கண்ணால் பார்த்து பார்த்து றயாகரன் பேசுகிறார். ஆனால் "ஐயையோ பழையமாணவர்களே குடித்துக்கூத் தாடி போராட்டத்தை கொச்சைப்படுத்துகிறீர்களே" என்று றயாகரன் சொல்லவில்லை. கம்மென்று இருந்தார் - இன்றுவரை கம்மென்று இருக்கிறார்.

அட என்னயிது றயாகரன் முரண்படுகிறாரே என்றா நினைக்கிறீர்கள்? முரண்பாட்டின் முடிச்சவிழ்க்க ஊர்க்கதையொன்று சொல்லுகிறோம். எம் கிராமத்தில் N.R முதலாளி நிறைதண்ணியில ஆடி ஆடி நடக்கமுடியாமல் நடந்துவந்தால் "ஐயையோ முதலாளிக்கு பிஸினஸில ஏதோ பிரச்சனைபோலக் கிடக்கு அதுதான் முதலாளிக்கு சாடையாய் கூடிப் போச்சு" என்று நாலு 'பெரிய மனிதர்கள்' சொல்வார் கள். அதே தெருவில் நம்மைப்போல் இல்லாதது கள், இயலாததுகள் குடித்துவிட்டு வந்தால் 'எளிய வங்கோலைகள் இதுகள் திருந்தாதுகள். இவன பனையில கட்டிவைச்சு நாலு சாத்து சாத்தினா நாடு தன்னால திருந்தும்' என்று அதே "பெரிய மனிதர் கள்" சொல்வார்கள். தண்ணியடிக்கிற விசயத்தில கூட உள்ளாருக்கும் உடையாருக்கும் ஒருநியாய மும் இல்லாதவருக்கும் இயலாதவருக்கும் இன் னொரு நியாயமும் எமது சமூகத்தில் வலு நீற்றாய் கட்டமைக்கப்பட்டிருக்கிறது. அதுதான் றயாகர னும் சைலண்டாய் இருக்கவேண்டிய இடத்தில் சைலண்டாய்யிருக்கிறார் சத்தம் போடவேண்டிய இடத்தில் சத்தம் போடுகிறார்.

## குறிப்பு 02

இபபோது புலம்பெயர் அரசியல்- இலக்கியத்தை ஒரு பூதம் பிடித்து ஆட்டுகிறது. அது தலித்பூதம். தமிழ்த்தேசியம் என்ற கதையாடலுக்குள் ஆதிக்க சாதியின் தலைமையின் கீழ் அணிதிரள முடியாது என்கிறது அந்தப்பூதம். இதுவரை நிறுவப்பட்ட அனைத்து இலக்கியப் புனிதங்களையும் கட்டு டைத்துக் கடாசிவிட்டு தனக்கெனவொரு கலை இலக்கியத்தடத்தை வரித்துக்கொள்கிறது அந் தப்பூதம். வர்க்க சாராம்சத்தின் பேரில் நிபந்தனை யில்லாமல் இணையக்கோரும் சநாதன மார்க்சியர் களுக்கு சவால் விடுகிறது அந்தப்பூதம். தமிழ்க் கலாச்சாரம், தமிழ்மொழி, தமிழிலக்கியம், எனப்ப டுவதெல்லாம் ஆதிக்க சாதிக்கலாச்சாரமும், ஆதி க்கசாதிமொழியும், ஆதிக்கசாதியினரின் இலக்கி யமுமே என எதிர்க்குரல் கொடுக்கிறது இந்தப் பூதம். எமக்கென்று தனித்துவமான கலாச்சாரமும், தனித்துவமான இலக்கியமும், தனிமொழியும் இருக் கிறது என ஆர்ப்பரித்து எழுகிறது இந்தப்பூதம். தமிழ்த்தேசியவாதிகளும், சநாதன மார்க்சியர்க ளும், வெள்ளைவேட்டி இலக்கியக்காரர்களும் கிலி பிடித்துக்கிடக்கிறார்கள்.

றயாகரனையும் 'டக்'கெனக் கிலிபிடிக்க அங் கிங்கின்னாதபடி எங்கும் தலித் அரசியலுக்கு எதி ராக பேசியும் எழுதியும் வருகிறார் (பார்க்க சமர் 23:பக் 62/ சமர்22:பக்19/ அம்மா-7 பக்21)

தலித்துகளுக்கும் வர்க்கம் இருக்கிறது. தலித் முதலாளி X தலித்பாட்டாளியென எதிர்வுகள் இருக் கின்றன என்கிறார் றயாகரன். வர்க்கத்துக்குள்ளும் சாதி இருக்கிறதே, தலித்தொழிலாளி X ஆதிக்க சாதித் தொழிலாளி போன்ற எதிர்வுகள் கட்டமைக் கப்பட்டிருக்கின்றனவே என்கிறோம் நாம். பஞ்சப் பட்ட தலித்தொழிலாளியை, பஞ்சப்பட்ட வேளாளத் தொழிலாளி ஒடுக்குவதை எந்தப் பொருளியல் சூத் திரத்துக்குள் கொண்டுபோய்ப் பொருத்துவீர்கள்? என்றுதான் கேட்கிறோம். தலித் அரசியலாளர்கள் வர்க்க ஒற்றுமையைக் குலைக்கிறார்கள் எனக் குறைப்படுகிறார் றயாகரன். நாம் அமைதியாகச் சொல்கிறோம், ஏற்கனவே வர்க்கம் சாதியாய் பிள வுண்டுதான் கிடக்கிறது நாம் புதிதாய் பிளந்துவிடு வதற்கு ஏதுமில்லை.

நாம் ஒருபோதும் உயிரியல் அடித்தளத்தில் நின்று அரசியல் பேசவில்லை. ஒடுக்கப்பட்டவர்கள் ஒடுக்குமுறைகளை உடைத்தெறிவதற்காக ஒன் றுபட வேண்டும் என்கிறோம். ஆனால் அந்தக்கூட் டானது ஒருபோதும் அதிகாரங்களை மையத்திடம் விட்டுவைக்காது. கூட்டின் எந்தவொரு கண்ணியும் தன் தனித்துவத்தையும் சுயாதீனத்தையும் இழந்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விட முடியாது. தலித்துக்கள் நிபந்தனைகளுடன் ஒடுக்கப்படும் பெண்கள், தொழிலாளர், விளிம்பு நிலை மக்கள், என ஒடுக்கப்பட்ட அனைவரோடும் ஐக்கியப்பட தயாராகவிருக்கிறார்கள் ஆனால் அந்தப் பெண்களும், தொழிலாளரும், விளிம்புநிலை மக்களும் தாங்கள் சாதி ஆதிக்கத்துக்கு எதிரானவர்கள் என்று நிரூபிக்கும்வரை அவர்களுடன் தலித்துகளுக்கு ஒட்டும் கிடையாது, உறவும் கிடையாது.

தலித்அரசியலை மிகவும் கொச்சையாகப் புரிந்துகொண்டு, பின்நவீனத்துவத்தையும் கோமாளித்தனமாகப் புரிந்துகொண்டு றயாகரன் எழுதுகிறார், "தலித் என்பது அதன் அரசியல் என்பதும் முரண்பாடுகளைக் கடக்கமுடியாது என்ற பின்நவீனத்துவம் விதைத்த நச்சுக்காளான்கள்தான். இது அழிக்கப்படவேண்டும்." (சமர் 23: பக் 65)

றயாகரன் எவ்வளவு சாதித்தடிப்புடன் எழுதியிருக்கிறார் பாருங்கள். காலங்காலமாய் கலப்பைகளில் பூட்டி உழப்பட்டு, செருப்பால் அடிபட்டு, சாணிப்பால் பருக்கப்பட்டு, வீதியில் காவோலையை கழுத்தில்க் கட்டியவாறே நடக்குமாறு நிந்திக்கப்பட்டு, இந்துக்கோயில்களுக்குள் பிரவேசம் மறுக்கப்பட்டு, தேவாலயங்களில் துப்பட்டிபோடும் உரிமை மறுக்கப்பட்டு, கயிறுகட்டி பிரிக்கப்பட்டு கல்வி மறுக்கப்பட்டு, அரசியல் உரிமைகள் மறுக்கப்பட்டு வாழ்ந்தவர்கள் தடைகளை உடைத்துக்கொண்டு நிச்சாமம் எனவும், சங்கானை எனவும், சின்னமடு எனவும், கீழ்வெண்மணி எனவும்,கொடியங்குளம் எனவும், குறிஞ்சாங்குளம் எனவும் இரத்தம் சிந்தி முடித்து எமக்கான அரசியல் இயக்கத்தை - தலித் அரசியலை - முன்னெடுக்கும்போது இவர், றயாகரன் அதை அழித்துவிடுவாராம். இவர் அழிக்கவரும் போது தலித்துக்களின் கைகள் என்ன புளியங்காயா புடுங்கிக்கொண்டிருக்கும்?

மேற்சொன்ன உயிரும் நெருப்புமான பிரச்சனைகளை கணக்கில் எடுக்காது, தலித்தியம் CIA,NGOக்களின் கருவி, தலித்தியம் பாட்டாளிவர்க்க ஒற்றுமையை மழுங்கடிப்பது. மாக்ஸியத்தில் வர்க்கமுரண்பாடுகளைத்தவிர வேறெதுவுக்கும் முக்கியத்துவம் கிடையாது என்று யாராவது 'விண்ணாண மார்க்சியம்' பேசினால், நாம் 'அந்த மார்க்சியத்தை' கோழி கூவுவதற்கு முன்பாக 3தடவையல்ல 30தடவைகள் மறுதலிக்க தயாராயிருக்கிறோம்.

## குறிப்பு 03

றயாகரன் எழுதுகின்றார் "...இந்த ஆண் பெண்கள் தமது இனவிருத்தியின் உணர்சிகளை தீர்த்துக்கொள்ள முடியாத ஆணாதிக்க சுரண்டல் சமுதாய அமைப்பில், இச்சமூக அமைப்புக்குள் சமரசம் செய்வோர் ஓரினச்சேர்க்கையில் ஈடுபடுவது தவிர்க்கமுடியாததாகி விடுகிறது." (சமர் 22:பக் 33)

ஓரினச்சேர்க்கையாளர்கள் இச்சமூக அமைப்புடன் சமரசம் செய்துகொண்டவர்கள், மறுதலையாக புரியன்/ பெண்சாதி அல்லது தெய்வீகக் காதலன்/ காதலி 'செற்றப்'பில் குடும்பம் நடத்துபவர்கள்தான் இந்த சமூக அமைப்போடு சலியாது சண்டை செய்பவர்கள் என்கிறார் றயாகரன்.

றயாகரன் குறைந்தபட்சம் ஒரு ஸ்டாலினிஸ்டாக இருப்பதற்கு கூட லாயக்கற்றவராய் இருக்கிறார். எழுதிய பொய் காயுமுன்னே எப்படி ஆதாரங்களோடு கையும் மெய்யுமாய் மாட்டுகிறார் பாருங்கள்.

இந்த நிமிடம் வரை இந்த உலகில் தொண்ணூற்றி ஒன்பதே முக்காலே மூணுவீசம் நாடுகள் தன்னினச்சேர்க்கையாளர்களை அங்கீகரிக்கவில்லை. சூஸன் தோஸன்பர்க், லிண்டாஇவான்ஸ், லாராவைட் ஹார்ன் என்று மூன்று அறிவித்துக் கொண்ட 'லெஸ்பியன்கள்' 1985ல் கைதுசெய்யப்பட்டு அமெரிக்க அரசால் பலவருடங்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு அரசியல் கைதிகளுக்கான பிரத்தியேகமான 'லெக்ஸிங்டன்' சிறையில் அடைக்கப்பட்டனர், அரபு நாடுகளில் தன்னினச்சேர்க்கையாளருக்கு 200 கசையடிகள் வழங்கப்படுகின்றன. இது இந்தோனேசியாவில் பாலியல் வல்லுறவுக்கு இணையான குற்றமாகக் கணிக்கப்படுகிறது. 'இத்தகாத உறவுமுறை மேல்நாடுகளில் பகிரங்கமாகவே நடைபெறுவது ஆத்மீகவாதிகளை கவலையுறச்செய்கிறது' என்று கொழும்பின் முன்னணிப்பத்திரிகையான தினக்குரல் ஒப்பாரி வைக்கிறது (தினக்குரல் 30/8/98) "நாற்றமடிக்கும் ஹோமோ - லெஸ்பியன்ஸ்" என்று இஸ்ரேல் பிரதமர் ஏறி விழுகிறார். உலகம் முழுவதும் தன்னினச்சேர்க்கையாளர்கள் சிறைகளில் வாடிக்கொண்டிருக்கிறார்கள். கற்களால் எறியப்பட்டு கொல்லப்படுகிறார்கள். இலக்கியப் புனிதர்களால் ஏசப்படுகிறார்கள் (எங்கேயாவது அகப்பட்டால் வீரகேசரியில் வெளியான செ. யோகநாதனின் பேட்டியைப் படியுங்கள்) நமது மொழியில் தன்னினச்சேர்க்கையாளர்கள் 'கம்பியடிகாரன்கள்' எனவும் 'சாப்பையடிகாரிகள்' எனவும் தீண்டத்தகாதவர்களாய் புரிந்து கொள்ளப்படுகிறார்கள். விவிலியம் முழுவதும் தன்னி னச்சேர்க்கையாளர்களை வெட்டிக்கொல்ல ஆணையிடுவதிலேயே கர்த்தர் காலத்தை கடத்தியிருக்கிறார். பழைய ஏற்பாட்டில் உபாகமத்தை படித்துப் பாருங்கள்... ஓங்காளித்து வாந்தி வரும். இச்சமூக ஒழுங்குமுறையை வன்முறை மூலம் இழுத்துப்பிடித்து வைத்திருக்கும் ஆதிக்கசக்திகளின் அரசுகள், இயக்கங்கள், கலைகள், கலாச்சாரங்கள், மொழிகள், இலக்கியங்கள், இதிகாசங்கள், மசிர்கள், மண்ணாங்கட்டிகள் எல்லாமே ஓரணியில் நின்று சமூக ஒழுங்குகளையும், மதிப்பீடுகளையும் மறுக்கும் தன்னினச்சேர்க்கையாளர்களை ஈவிரக்கமின்றி ஒடுக்கிவருகின்றன. றயாகரன் என்னவென்றால் தன்னினச்சேர்க்கையாளர்கள் சமூக அமைப்போடு சமரசம் கொண்டவர்கள் என கதை கட்டுகிறார்.

கட்டற்ற சுதந்திரம் என்ற அடிப்படையில் ஓரி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

னச்சேர்க்கையை ஏற்றுக்கொள்ளமுடியாது எனக் கூறும் றயாகரன் அதற்கு ஆதாரமாக 'LIBERATION' பத்திரிகையில் வந்த ஓர் பட்டியலை முன்வைக் கிறார். அதற்கு அறிமுகக் குறிப்பை இப்படித் தருகிறார் " சிறுவர் சிறுமியர் எப்படி ஓரினச் சேர்க் கைக்கு பல்கலைக்கழக பகிடிவதை போன்று பயன் படுத்தப்படுகின்றனர் எனப்பார்ப்போம் இது எதைக் காட்டுகிறது இங்கு கட்டற்ற சுதந்திரம் என்ற பெய ரில் சிறுவர், சிறுமிகள் ஓரினச்சேர்க்கைக்கு குடும் பத்தில் இருந்து நண்பர்களுக்கிடையில் பந்தாடப்ப டுகின்றனர்."(சமர் 23 :பக் 20)

என்ன லொஜிக்காக றயாகரன் எழுதியிருக்கி றார் பாருங்களேன். நாம் கட்டற்ற சுதந்திரக் காதல் குறித்துப் பேசுகிறோம். றயாகரன் சிறுவர் சிறுமியர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்படுவதைக் காரணம் காட்டி விவாதிக்கிறார். சுதந்திரத்திற்கும் வல்லுறவுக்கும் உள்ள வித்தியாசத்தைக்கூட றயா கரனால் விளங்கிக்கொள்ள முடிவதில்லை. ஓரினச் சேர்க்கையாளர்களால் வல்லுறவுக்கு உட்படுத்தப் படும் சிறுவர்களில் பட்டியலைவிட எதிர்ப்பால் சேர்க்கையாளரால் வல்லுறவுக்கு உட்படுத்தப்படும் சிறுவர்களின் பட்டியல் பெரிது. அதைக்காரணம் காட்டி எதிர்ப்பாலுறவை எதிர்ப்பது எவ்வளவு முட்டாள்தனமோ அவ்வளவு முட்டாள்தனமானது றயாகரனின் வாதம்.

றயாகரன் மீண்டும் தொடருகிறார் " கட்டற்ற சுதந்திரம், சுதந்திரக்காதல், சுதந்திர அன்பு என்ற அனைத்துக் கோட்பாடும் பூர்சுவா கண்ணோட் டத்துடன் கூடிய இன்றைய திறந்த பொருளாதார கொள்கையின் உலகமயமாதலினை ஊக்குவித்து பாதுகாக்கமுனையும் வண்ணக்கலவையாகும்." (சமர் 23 : பக்20)

கட்டற்ற காதலுக்கும், பூர்சுவாவுக்கும், திறந்த பொருளாதாரக் கொள்கைகளுக்குமிடையில் ஒரு 'கொனெக்சன்' இருக்கிறது அதனால் காதலை கட்டுப்படுத்த வேண்டும் என்கிறார் றயாகரன்.

அப்படியா சேதி? இருக்கட்டும். ஆனால் இப் போது றயாகரன் எமக்கு தெளிவு படுத்தவேண்டி யது யாதெனில் அவர், இவர், இன்னார், இனியா ரைத்தான் காதல் செய்ய வேண்டுமென்று எமது காதலை டைரக்ட் பண்ண துணிந்தவன் யார்? எமது சுதந்திரக் காதலை மறுத்து பாஸ்முறையிலும், டோக்கன் சிஸ்ரத்திலும் எமது காதலுக்கு அனுமதி வழங்க இங்கே எந்த நாய்க்கு அதிகாரம் உள் ளது? வரையறுக்கப்படுவதற்கும், லிமிட் பண்ணப்படு வதற்கும் காதல் என்ன கொம்பனியா? இல்லை கூப் பன் கடையா?

காதல், ஒழுக்கம் இவற்றிற்கெல்லாம் ஏதாவது பொதுவான மதிப்பீடுகள் இருக்கமுடியுமா? நான்கு சுவர்களுக்குள் பெண்ணை பூட்டிவைத்து பொத்திப் பொத்தி செய்யவேண்டியதுதான் காதல் என்ற றயா கரனின் மதிப்பீடுகளை மறுப்பதால் நாம் எதிர்ப்பு ரட்சியாளர் ஆகிவிடுவோமா?

எந்தவித நிபந்தனைகளும், நிர்ப்பந்தங்களும் ஒன்றுக்கொன்று விதியாமல் பெண்ணும்,பெண்ணும்/ ஆணும்,ஆணும்/பெண்ணும்,ஆணும்/ ஒரு கூட்டம் ஆண்களும், ஒரு கூட்டம் பெண்களுமோ காதல் செய்கையில் அறத்தின், ஒழுக்கத்தின், சட்டத் தின், புரட்சியின்பெயரால் விளக்குப் பிடிக்கவோ, விலக்குப்பிடிக்கவோ எந்தக்கொம்பனுக்கும் உரிமை கிடையாது. கொஞ்சம் அயர்ந்தால் கட்டி லுக்கு பக்கத்தில் வந்து நின்று கொண்டு "இன்ன இன்ன முறையில்தான் படுத்து எழும்பவேண்டும், அந்தக் கோணங்களில்தான் இயற்கையாக உறுப் புக்கள் அமைந்துள்ளன. வேற பொஸிஸனில் ஏதா வது செய்தீர்கள் என்றால் அது ஏகாதிபத்திய உட லுறவு" என்று சொல்லக்கூடியவர் றயாகரன்.

றயாகரன் முடிக்கின்றார் "கட்டற்ற சுதந்திரம் என்பது, கட்டற்ற விபச்சாரத்தையும், கட்டற்ற குடும்ப சிதைவையும் கட்டற்ற குடும்ப உறவையும் தொடங்க அடிப்படை மகுடியாக உள்ளது." (சமர் 23: பக்20) என்று அழுதே முடிக்கிறார்.

பாலியல் சுதந்திரம் மறுக்கப்பட்ட நடப்பிலிருக் கும் சமூக அமைப்புக்குள்ளேயே கட்டற்ற செக்ஸ் தொழில் நடந்துகொண்டுதான் உள்ளது, என்பதை யும் றயாகரனுக்கு சுட்டிக்காட்ட வேண்டியுள்ளதை யிட்டு கவலையுறுகிறோம்.

எங்கெல்லாம், யாரெல்லாம் பாலியல் அடிமைத் தனத்தையும், குடும்ப மதிப்பீடுகளையும் உடைத் துக் கொண்டு வெளிவருகின்றார்களோ, அங்கெல் லாம் நாம் நின்று றயாகரன் போல் குடும்பம் சிதை கிறதே என்று வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொள்ள மாட்டோம். மாறாக இருகரம் தட்டி வர வேற்கிறோம் அதிகார மையமாக விளங்கும் குடும்ப அமைப்புமுறையை மறுத்து ஒரு 'கொம்யூன்' வாழ்க் கைக்கு வரச்சொல்லி அழைக்கிறோம்.

என்ன கொம்ரேட், அடிக்கட்டுமானத்தை அசை க்காமல் மேல் கட்டுமானத்தை மாற்றமுடியாது என் கிறீர்களா? சில இடங்களில் குடும்பம் உடைவதால் மட்டும் ஒட்டுமொத்தப் பெண்களும் விடுதலை அடைந்து விடமுடியாது, புரட்சி மட்டுமே பூரண விடு தலையைத்தரும் என்கிறீர்களா? நாம் ஒரு வர்க் கப்புரட்சிக்கான நியாயங்களை ஒருபோதும் மறுப் பதில்லையே. ஆனால் ஒரு சோசலிஸ உலகுக்கு அவசியமான அனைத்து புறநிலை பொருளியல் நிபந்தனைகளும் முதலாளியத்துக்குள்ளேயே உருவாகிவிட்ட நிலையில், அபரிதமாக வளர்ந்த உற்பத்தி சக்திகள் உற்பத்திமுறையோடு முரண் பட்டு முதலாளிய சமூக அமைப்பின் உயிர்முடிச் சையே உலுப்பியெடுத்துக் கொண்டிருக்கையில் நம் கண்முன்னாலேயே உடையத் தொடங்கியிருக் கும் குடும்பம் எனும் அடக்குமுறை ஸ்தாபனத்தை நீங்கள் ஏன் ஒட்டவைக்கத் துடிக்கிறீர்கள்? சாத்தி யமான இடங்களில் கூட குடும்பம் உடைவதை புரட்சியின் நாமத்தால் அங்கிகரிக்க முடியாது என நீங்கள் அழிச்சாட்டியம் செய்வதில் என்ன நியாயம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருக்கிறது?

**குறிப்பு 04**

மெய்வருத்தம்பாராது, இடையறாது, சலியாது, சராமரியாகப் பொய்யும், புரளிகளும் கிளப்பிவிடு வதில் கில்லாடியான றயாகரனின் சின்னத்தனங் களை இங்கே பரவலாகப் பட்டியலிட்டால் 'எக்ஸில் புரளிகள் சிறப்பிதழ்' ஒன்று வெளியிடவேண்டி வர லாம். எனவே சுருக்கமாக, சும்மா சாம்பிளுக்கு றயா கரனின் சூப்பர்புரளி ஒன்றைச் சுட்டிக்காட்டுகி றோம்.

1920களிலேயே ஸ்டாலினிஸ அதிகாரத்துவத் துக்கு எதிராய் இடது எதிர்ப்பு இயக்கத்தை தொடங்கியவரும், ஓர் அரசியல் புரட்சியின் மூலம் அதிகாரத்துவத்தை தூக்கியெறியவேண்டுமென்று விட்டுக்கொடுக்காத அரசியல் போராட்டத்தைத் தொடர்ந்தவரும், நான்காம் அகிலத்தின் நிறுவன ரும் 'காட்டிக்கொடுக்கப்பட்ட புரட்சி', 'நிரந்தரப் புரட் சித்தத்துவம்', 'கலையும் புரட்சியும்' போன்ற ஏரா ளமான மார்க்ஸிய நூல்களின் ஆசானும், அனை த்து அடிப்படை உரிமைகளும் ஸ்டாலினிஸ அதிகா ரத்துவத்தால் பறிக்கப்பட்டு, நாடுகடத்தப்பட்டு மெக்ஸிக்கோவில் புரட்சிப்பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கையில் எதிர்ப்புரட்சி ஏஜண்டுகளால் பனிக்கோடாரியால் கொத்திக் கொல்லப்பட்டவரு மான லியோன் ட்ரொட்ஸ்கி குறித்து றயாகரன் கூசாமல் இப்படி எழுதுகிறார்: "1903ம் ஆண்டு பிர ஞ்சு பூர்சுவா அரசாங்கத்தில் அமைச்சராக இருந்த ட்ரொட்ஸ்கி எப்படி ஓர் புரட்சியாளனாக இருக்கமு டியும்?" ('மார்க்ஸிய முன்னோக்கு' - இதழ் 2ல் வெளி யாகியிருந்த சமரின் தேசியவாத வேலைத்திட்டம் ஒரு தூக்குக் கயிறு என்ற கட்டுரைக்கு சமரில் றயா கரன் எழுதிய பதிலில் இருந்து)

ட்ரொட்ஸ்கி ஒன்றும் கற்காலத்திலோ, கடைச் சங்க, இடைச்சங்க காலத்திலோ வாழ்ந்தவர் கிடை யாது. ட்ரொட்ஸ்கியின் எழுத்துக்களும், கருத்துக் களும் எதிர்ப்புரட்சியாளரால் திட்டமிட்டு இருட்ட டிப்பு செய்யப்பட்டிருப்பினும் கூட அதையும் மீறி ஆங் கிலத்திலும், பிரஞ்சிலும், சிங்களத்திலும், தமிழிலு மாய் ஏராளமான ட்ரொட்ஸ்கிய ஆவணங்கள் இருக் கின்றன. ஒரு சாதாரண கலைக்களஞ்சிய திரட் டுக்கூட ட்ரொட்ஸ்கியை அறிமுகப்படுத்தும். எனவே வரலாற்று ஆசிரியர்களின் முரண்கள், வித் தியாசம் வித்தியாசமான ஆய்வுக்குறிப்புகள் என்ற அடிப்படையில் றயாகரன் தவறிழைத்திருக்கச் சாத்தியமே இல்லை.

எனவே இது ட்ரொட்ஸ்கிஸ்டுகளுக்கு எதிராக மிக்க கோழைத்தனத்தோடு றயாகரனால் திட்ட மிட்டு கிளப்பப்பட்ட புரளி என்பதையும் ஸ்டாலினி சத்தையும், மொஸ்கோ வழக்குகளையும் நியாயப் படுத்துவதற்காக றயாகரனால் சோடிக்கப்பட்ட ஒரு 'பாரிஸ்வழக்கு'த்தான் இந்தக் குறிப்பு என்பதையும் நாம் இப்போது அடித்துச்சொல்லலாம்.

றயாகரன் தனது உலகமகா கண்டபிடிப்பை வெளியிட்டபின்னரும் சில 'சமர்' இதழ்கள் வெளியா கியுள்ளன. ஆனால் இந்த செக்கன் வரை றயாகரன் ட்ரொட்ஸ்கி பிரஞ்சு அமைச்சராய் இருந்த கதையை நிரூபிக்கவும் இல்லை. யாரும் றயாக ரனை கேள்விகேட்டதாகவும் தெரியவில்லை. சம ரின் அபிமான வாசகர் கூட்டமோ ட்ரொட்ஸ்கியை அம்பலப்படுத்திய றயாகரனின் வரலாற்று/பூகோள/ அரசியல் அறிவின் கூர்மையையும் பராக்கிரமத் தையும் கண்டு புல்லரித்து புழுவரித்துக் கிடக் கிறது.

**குறிப்பு 05**

எலும்புருக்கி நோயென்று கேள்விப்பட்டிருப்பீர் கள். எலும்புக்கு ஏங்கிச்சாகும் நோயென்று கேள் விப்பட்டிருக்கிறீர்களா? இந்த நோய் றயாகரனில் எப்படி தொற்றியிருந்தது என்பதைத்தான் இப் போது சொல்லப்போகிறோம்.

றயாகரன் எழுதுகிறார்: "தமிழீழ தேசவிடுத லைப்போராட்டம் அரசியல் என்ற அத்திவாரத்தில் கட்டவேண்டிய இராணுவத்திற்குப் பதில் இராணு வவாதம் என்ற அரசியல் அற்ற ஒட்டுமொத்தமான இராணுவவாதமாக சீரழிந்து போன தேசியவிடுத லைப்போர் தாக்குதல் வாதத்திற்கு மட்டும் மீள மீள தாக்குதல்களை ஒப்புவிப்பதன்மூலம் சீரழிந்து போகிறது. தமிழ்பேசும் மக்களை அரசியல் ரீதி யாக வளர்த்து எடுத்து முன்னேற்றவேண்டிய தேசி யவிடுதலைப்போர் இன்று முட்டுச்சந்திக்கு வந்துள் ளது" (சமர் 22: பக் 43) இப்போது றயாகரன் புலிகளி டம் அரசியல் கிடையாது அவர்களிடம் இராணுவ வாதமே எஞ்சியுள்ளது என்கிறார். மற்றும் சிலகட்டு ரைகளிலும் இதே வாதத்தையே வைக்கிறார் (சமர் 23 :பக் 32 - சமர் 23:பக் 13)

விடுதலைப்புலிகளிடம் அரசியல் கிடையாது என்பது முசுப்பாத்திக்கு உரியது. ஐரோப்பாவில் வருடத்திற்கு வருடம் கோடை வருகிறதோ இல் லையோ வருடம் தவறாமல் 'ஐ.நாவே எங்களை அங்கீகரி' என்ற வேண்டுதலுடன் புலித்தலைவர் கள் ஜெனிவாவிற்கு புனிதப் பயணம் போய்வருகி றார்கள். கடந்த 10.08.98 லும் ஜெனிவாவிற்கு ஒரு யாத்திரை நடத்தினார்கள். இதே வேண்டுதலுடன் ஸ்ராஸ்பேர்க்கில் ஐரோப்பிய பாராளுமன்ற வாசலி லும் காவலிருக்கிறார்கள். ஒரு மூன்றாவது தரப்பு மத்தியஸ்தத்துக்கு எப்போதுமே தயாராகவிருக் கிறார்கள். புதுதில்லியில் அயோத்திப் பள்ளிவா சலை இடித்த கட்சி ஆட்சியைப் பிடித்தால் பாரி ஸில் பட்டாசு வெடிக்காத குறையாக கொண்டாடு கிறார்கள். வெடித்துக்கிளம்பும் மக்கள் போராட் டங்களை அடக்குவதற்கு இனியும் லாயக்கற்றவர் களாய் கருதப்படும் அரசுத் தலைவரும், கட்சியும் இறக்கப்பட்டு மக்கள் கிளர்ச்சிகளை ஒடுக்குவ தற்கு 'தகுதி' பெற்ற புதிய அரசுத்தலைவரையும், கட்சியையும் ஆதிக்கசக்திகள் ஆட்சிக்கட்டிலில் ஏற்றிய அடுத்த செக்கனே புதிய ஒடுக்குமுறையா ளருக்கு வாஜ்பாய் எனவும், ரொனிபிளேயர் எனவும்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நெல்சன்மண்டேலா எனவும் முகவரியிடப்பட்ட வாழ்த்துத் தந்திகள் புலிகளின் தலைமைப்பீடத் திலிருந்து பறக்கிறது.

புலிகளானாலும் சரி ஏனைய குட்டிமுதலாளிய கொலைகார இயக்கங்களான EPRLF, PLOT, TELO, EROS, EPDP, ENDLF, NLFT, TELA, TEA, TELE, RELO, SLO, TENA, TMPP... போன்ற வேறுவேறு இயக்கங்களானாலும் சரி, இவர்கள் எந்தக்கட்டத்திலும் தமிழ்,முஸ்லிம் தொழிலாளர் - விவசாயிகள் - பெண்கள் - தலித்துக் களை சுயாதீனமாக அணிதிரள அனுமதித்ததே கிடையாது. உலகமுதலாளிய அரசுகளோடும் பால்தக்கரே போன்ற இந்துப் பாசிஸ்டுகளுடனும் கொண்டாடிக் கொழுக்கிறார்களே தவிர இந்திய உபகண்டத்து ஒடுக்கப்பட்டவர்களோடோ, உலக தொழிலாளர் - பெண்கள் - கருப்பர் அமைப்புக்க ளோடோ ஒரு ஐக்கியத்திற்கு புலிகளோ மற்றைய இயக்கங்களோ கனவிலும் முயற்சித்தது கிடை யாது. இதுதான் புலிகளின் அரசியல்.

தேசம், தேசியம் என்பனவெற்றுக்கெல்லாம் என் றென்றைக்குமான மாறாத மதிப்பீடுகள், விதிகள் இருக்கமுடியாது. ஒவ்வொரு உலக - பிராந்திய யுத்தங்களின்பின்பும் உலக வரைபடம் ஒவ்வொருத டவையும் அழித்து எழுதப்படுகிறது. நடந்து முடிந்த சமூகப்புரட்சிகளின் பின்னால் உற்பத்திமுறைக் கான தோது, பொதுச்சந்தை, பொதுக்கலாச்சா ரம்,பொதுமொழி, இன்னபிற நிபந்தனைகளின் பேரில் குறுந்தேசியங்களை பெருந்தேசியங்கள் உள்வாங்கிக் கொண்ட வரலாற்றை கடந்து வந்த நாம், பெருகிவிட்ட உற்பத்தி சக்திகளுக்கும், குறிப் பாக 1980களில் ஏற்பட்ட தகவல் தொழில்நுட்ப புரட்சியால் அதிரடியாய் பெருகிவிட்ட உற்பத்தி சக்திகளுக்கு முன்னால் நின்றுபிடிக்க முடியாத முதலாளிய உற்பத்தி முறையும், கண்டம்விட்டு கண்டம்பாயும் சர்வதேச மூலதனத்தின் முன்னால் நின்றுபிடிக்கமுடியாமல் குத்துவிளக்கில் கணக் குப்பார்க்கும் தேசியமுதலாளிகளும், திண்டாடும் தேசியஅரசுகளும் நிலவும் காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். கொம்யூனிஸ்ட் கட்சி அறிக் கையில் நமது பேராசான்கள் குறிப்பிட்டதுபோல உலகம் முழுவதும் தனக்குரிய சவக்குழியை முத லாளியம் தானே தோண்டிமுடித்து விட்டது.

இந்த சவக்குழியிலிருந்து தற்காலிகமாக தப் பிப்பிழைப்பதற்க்கு முதலாளியத்துக்குள்ள ஒரே வழி இன்றைய உற்பத்திமுறைக்கு சற்றும் பொருந் திவராமல் உடைந்துகொண்டிருக்கும் தேச எல்லை களைத் திருத்தி புதிய பிராந்திய அரசுகள் அமை ப்பதும், ஐரோப்பிய யூனியன் என்றும் அமெரிக்கா, ஜப்பான் என்றும் ரௌடிக்காங் கட்டி உலகை மறு பங்கீடு செய்ய அடுத்த உலகயுத்தத்திற்கு ஆயத் தம் செய்வதும்தான்.

இந்த ஏகாதிபத்தியங்களின் விருப்புக்களை நிறைவேற்ற தமதுசந்தையையும், தம்மக்களின் உழைப்பு சக்தியையும் பாலஸ்தீனத்திலும், வங் காளதேசத்திலும், தென்னாபிரிக்காவிலும் தேசிய விடுதலை இயக்கங்கள் பல்தேசிய கூட்டுத்தாப னங்களுக்கு எப்படி கூறுகட்டி விற்றனவோ அப்ப டியே தமிழீழச்சந்தையையும், உழைப்புச்சக்தியை யும் புலிகளும் கூவிவிற்க 'றெடி'யாக இருக்கி றார்கள். முதலாளிய சமூக அமைப்புக்களோடு சம ரசம் செய்துகொண்டவர்களுக்கு வேறு தலைவிதி கிடையாது. புறநிலைகள் இதற்கு மாற்றாக இன் னொரு சாத்தியத்தை புலிகளுக்கு விட்டுவைக் கவில்லை. புலிகளின் இந்த தரகுமுதலாளிய அணுகுமுறைகளின் நெறிப்புக்களால் கிளர்ந்தெ ழும் தொழிலாள -விவசாய -விளிம்புநிலை மக்கள் திரளை ஒடுக்குவதற்காக புலிகள் தமது கட்டுப் பாட்டு பிரதேசம் முழுவதும் பெலிஸ்படையையும், தமிழீழ ஒறுப்புச் சட்டங்களையும், நீதிமன்றங்க ளையும், சிறைச்சாலைகளையும், மின்கம்பங்களை யும் வைத்திருக்கிறார்கள். (புலிகளின் சட்ட, ஒழு ங்கு, கொலை, நீதிராச பரிபாலனங்கள் இன்னும் இறுக்கப்படவேண்டியவை என்கிறார் றயாகரன் - சமர் 22 :பக் 43)

புலிகளின் இறுதி அரசியல் இலக்கு என்பது ஒரு தரகுமுதலாளிய உற்பத்தி உறவுகளைக் கட்டிக் காப்பாற்றும் தமிழீழமோ அல்லது ஏகாதிபத்தியம், சிங்கள இனவாத அரசின் துணையோடு நடத்தப் போகும் கொள்ளையில் தமிழ்முதலாளிகளுக்கான பங்கை பெறக்கூடிய ஒரு தீர்வோ என்பதில் ஐமிச் சப்பட எதுவுமில்லை.

புலிகளின் அரசியல் இவ்வாறிருக்க றயாகரன் புலிகளின் தரகுமுதலாளிய அரசியல் நிலைப் பாட்டை மறைத்து அவர்களை 'ஒன்றுந் தெரியாத பாப்பா'க்களாக நிறுவ முயலுகிறார். புலிகளின் மக் கள் விரோத அரசியலை மக்கள் முன்வைக்க மறுத்து புலிகளிடம் அரசியலே இல்லை என்கிறார்.

புலிகளிடம் அரசியல்வழி கிடையாது அவர்கள் பாவம் இராணுவவாதத்தில் கிடந்து தெரியாத்தன மாக உழல்கிறார்கள் என்று கவலைப்படும் றயா கரன் புலிகளுக்கு அரசியல் பாடம் போதிக்கத் தொடங்கி ஒரு 'மாஸ்ரர்பிளான்' போட்டுக்கொடுக் கிறார். அவர் எழுதுகிறார் :"...இன்றைய இராணுவ வாதத்திற்குப் பதில் அரசியல் வழியை முன்னெ டுப்பது இன்றுள்ள அவசியமும், அவசரமுமான தேவையாக தமிழ் தேசிய' இனத்துக்குள்ளது. இன்று இதன் முதற்ப்பணியாக திம்புக்கோரிக் கையில் இருந்து தொடங்குவதும் அதை அடிப்படையாக இராணுவ வாதத்திற்குப் பதில் முன் வைப்பது அவசியமும் அவசரமுமான தேவையாக எம் தேசியவிடுதலைப்போர் கோருகிறது." (சமர் 22: பக்44)

எமக்கு இந்தப் பரந்த பிரபஞ்சத்தில் மூன் றேமூன்று பேர்தான் திம்புவை இப்பொழுதும் ' மல ரும் நினைவு'களாக ஞாபகப்படுத்துகிறார்கள். நமது கூட்டாளி ஒருவர் அதிதீவிர சமாதானப் பிரியர். திம்புவில் பேச்சுவார்த்தை தொடங்கிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அன்று அவருக்கு ஒரு பொடியன் பிறந்தான். மிகவும் உணர்ச்சிவசப்பட்ட நமது நண்பர் பொடியனுக்கு திம்புச்செல்வன் என்று பெயரிட்டார். இப்போது பொடியனுக்கும் 12 வயதாகிறது. அடுத்ததாக எந்தச் சிங்கள இனவாதக்கட்சி ஆட்சிக்கு வந்தாலும் அந்தக்கட்சியில் அமைச்சராக சீவியம் நடத்தும் சீவனான செளமி.தொண்டமான் வடக்கு - கிழக்கை ஒரு ஐந்துவருடத்திற்கு பிரபாகரனுக்கு குத்தகைக்கு கொடுக்கலாம், கொமிசனுக்கு கொடுக்கலாம் என்றரீதியில் பேசி நமக்கு திம்பு 'செற்றப்'பை ஞாபகப்படுத்துகிறார். மூன்றாவதாக றயாகரன் எப்போதோ, யாரோ, யாருக்காகவோ கோரியதையும், குற்றிமுறிந்ததையும் எண்ணி எண்ணி ஏங்கிச் சாகிறார்.

திம்புக்கோரிக்கைகள் எதைச் சாதித்துவிடும்? சிங்கள எசமானர்களுக்குப் பதிலாய் புதிய தமிழ் எசமானர்களின் கையில் உலகமுதலாளியத்தின் மூதாவில் நாம் கையளிக்கப்படுவோம். தனிச்சொத்துடமையை கண்ணின்மணியாய் காப்பதாய் சத்தியக்கடதாசி முடித்து கொடுக்கும் இப்புதிய எசமானர்களால் ஒடுக்கப்படும் முஸ்லிம் - தமிழ் மக்களின் ஒரு சின்ன அடிப்படைப் பிரச்சனையையாவது வெட்டியாட முடியும் என்று எவராவது சொன்னால், அது ஒரு உப்புப்பெறாத சொல்.

உலகம் முழுவதும் முதலாளியம் தனது தவிர்க்கமுடியாத வரலாற்று நெருக்கடியான லாபவிகித வீழ்ச்சியிலிருந்து தப்பிப்பிழைக்க தான் செழித்திருந்த காலத்தில் ஏற்கனவே வழங்கியிருந்த - ஒடுக்கப்படுபவர்களால் போராடி பெற்றெடுக்கப்பட்டிருந்த - உரிமைகளையும், சமூகச்சலுகைகளையும் வெட்டிக்கொத்திக் கொண்டேயிருக்கிறது. மானியங்களை வெட்டச்சொல்லியும், தொழிலாளர்நல சட்டங்களை இறுக்கக் கட்டச்சொல்லியும் சர்வதேச நாணய நிதியம் அரசுகளை தொண்டைப்பிடி பிடிக்கிறது. இந்தக் குரங்குப்பிடியில் இருந்து நமது திம்புத்திலகங்களால் எப்படி தப்பிக்கமுடியும்? வர்க்க, சாதிய, பால் முரண்கள் இடையறாது மோதிக்கொண்டிருக்கையில் ஆதிக்க வர்க்கத்தின்/ சாதியின்/ பாலின் ஏவல்நாயாய், காவல்நாயாய் காவலிருப்பதுதானே அரசுகளின் வேலை. எனவே திம்புத்திலகங்கள் தங்களுக்கான அன்றன்றைக்கான எலும்புத்துண்டுகளை பெற்றுக்கொள்வதற்காய் ஒடுக்கப்படுபவர்களை மேலும் ஒடுக்குவதைவிட வேறென்ன சாதித்து விட முடியும். நமது கண்முன்னாலே பாலஸ்தீனத்திலும், பால்கன் பிரதேசத்திலும் இதுதானே நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

சீர்திருத்தக்கோரிக்கைகள் மூலம் நாம் எதையும் பெற்றுக்கொள்வதற்கும் முதலாளியம் வாரிவழங்கிவிடுவதற்கும் நாமொன்றும் முதலாளியம் செழித்துப் பூத்துக்கிடக்கும் காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கவில்லை.ஒடுக்கப்பட்டவர்கள் தேசிய எல்லைகளையும், கண்டங்களையும் கட ந்து பிற ஒடுக்கப்பட்டவர்களோடு இணைந்து, எதிரிகளோடு எந்தவித சமரசங்களும் அற்று, களத்திற்கு வரும் போதுதான் உலகளாவிய ரீதியில் ஒழுங்கமைக்கப்பட்டிருக்கும் ஆதிக்க சக்திகளை அசைக்கவும் கவிழ்க்கவும் முடியும். இதைவிடுத்து கொலைகாரி சந்திரிகா கும்பலோடு என்னத்தைப் பேசி?... என்னத்தைப் பெற்று?... மிகவும் அழகாக கற்பனை செய்கிறார் றயாகரன்.

**ஒரு திடுக்கிடும் செய்தி**

றயாகரனின் தேசியம், முதலாளியம், திம்பு குறித்த புரிதல்கள் இந்த கொண்டிசனில் இருக்க பாரிஸிலிருந்து வெளிவரும் அம்மா - இதழ் 7ல் அனைத்துலக தமிழ்வாசகர்களையும் கதிகலங்கவைக்கும் ஓர் அறிவிப்பு வெளியாகியுள்ளது. "தேசியம் எப்பொழுதும் பாட்டாளி வர்க்க கோரிக்கையல்ல" என்ற டைட்டிலில் றயாகரன் ஒரு புத்தகம் எழுதியிருக்கிறாராம்.

ஜஸ்ட், இப்போதுதான் 768 பக்கத்தில் ஜெயமோகனின் 'விஷ்ணுபுரம்' என்ற கற்பனைக் காவியத்தை படித்து முடித்து தமிழ் வாசகர்கள் நொந்து நூலாகி, அந்து அவலாகிக் கிடக்கிறார்கள். அதற்குள் பனையால் விழுந்தவளை/னை மாடேறி உழக்கிய கதையாய் 108 ப் பக்கத்தில் இன்னொரு கற்பனைக் காவியமா? விதியே விதியே தமிழ்ச்சாதியை என்செய்ய நினைத்தாய்?

**குறிப்பு 06**

றயாகரன் அண்மைக்காலங்களில் அதிகார விசர் பிடித்துத் திரிந்தார். ஆனானப்பட்ட கிரெம்ளினையே முன்னொரு நாளில் கவிழ்த்துப்போட்ட விசரிது. ஆயிரமாயிரம் இடதுசாரிக்கட்சிகளை எழும்பவிடாமல் நொருக்கிப் போட்ட நோயிது. அதிகார விசர் முற்றி றயாகரன் இப்படி எழுதுகிறார்:

"ஒரு படைப்பாளி இதிலிருந்து மேலும் ஒருபடி தாண்டி ஒட்டுமொத்த மக்களின் நலன்களில் இருந்து பாய்ச்சல் நிலையில் சமூகத்தை காணவேண்டும். அதைவிடுத்து பழையதைக் கோருவதோ, இருப்பதை பாதுகாக்க கோருவதோ, ஒட்டு மொத்த சமூகத்திற்கு எதிராக தனிநபர்களை நோக்கி படைக்கும் படைப்புக்கள் பிற்போக்கான வையாகும். இவை தடைசெய்யக்கூடியவை மட்டும் இன்றி தண்டனைக்கு உரியனவாகவும் இருக்கக் கூடியவை." (சமர் 23: பக்54)

ஒவ்வொரு மனுசிக்கும், மனுசனுக்கும் அவர்கள் முதலாளி /தொழிலாளி / மனைவி / கணவன் / மத்தியகுழு உறுப்பினன் / விளிம்புநிலைப்போராளி / வேளாளன் / தலித் / வெள்ளையன் /கருப்பன் இனும் என்னவாய்த்தான் இருக்கட்டுமே, இவர்களின் கருத்து - எழுத்து உரிமையை யார் மறுக்கக்கூடும்? மேற்சொன்னவர்களின் கருத்துக்களோடும் எழுத்துக்களோடும் எமக்கு உடன்பாடும், முரண்பாடும் இருப்பது இரண்டாம் பட்சமே. அவர்களது கருத்து-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எழுத்து உரிமைகள் பறிக்கப்படும் போது அதற்கெதிராக நாம் கிளர்ந்தெழுந்து குரல் கொடுக்க வேண்டிய கடமையை யார் நிராகரிக்கக் கூடும்?

ஆனால் றயாகரன் மறுக்கிறார், நிராகரிக் கிறார். தனக்கு சம்மதமில்லாத எழுத்துக்களை தடைசெய்யக் கோருகிறார். எழுத்தாளர்களை தண்டிக்கவேண்டும் என்கிறார். றயாகரன் தயவு செய்து கொஞ்சம் பழைய நாட்களை நினைத்துப் பாருங்கள். இதே றயாகரன் சிறைப்பட்ட கதையை சொன்னதற்காகவும் தானே (முறிந்தபனை : பக் 169) கருத்துச் சுதந்திரத்தை மறுப்பவர்களின் துப்பாக்கிக்கு ராஜினி திராணகமாவை பறிகொடுத்தோம்.

ராஜினியும், செல்வியும், இன்னும் எத்தனையோ எம்மருந்தோழியரும், தோழர்களும் பேசியதற்காகவும், எழுதியதற்காகவும் இந்த உரிமைகளுக்கு குரல்கொடுத்ததற்காகவும் தானே சிறைகளில் வாடியும், துப்பாக்கிச் சன்னங்கள் தின்றும் மரித்துப்போனார்கள்.

றயாகரனுக்குச் சொல்கிறோம்!! இப்போது நீங்கள் உங்கள் அரசியலோடும், அமைப்புக்களோடும் இசைந்து, பணிந்து எழுத மறுக்கும் எமது எழுத்துக்களை தடைசெய்யக் கோருகிறீர்கள். எம்மை சுடச்சொல்லிக் காட்டிக் கொடுக்கீறீர்கள். ஆகவே எம்மைப் பொறுத்தவரையில் இதுநாள்வரை ஜனநாயக உரிமைகளுக்காய் குரல் கொடுத்து வந்த பி.றயாகரன் - அந்த ஜனநாயகவாதி- எம்மை கொல்லுமாறு கொலைகாரர்களை கூவி அழைத்த அந்தக்கணத்தில் செத்துப்போனார்.

**எச்சரிக்கிறோம்!!**

எம்மிடையே பேச்சு - எழுத்து உரிமைகளை தடைசெய்யும் முகமாய் அடுத்து நடைபெறப் போகும் இன்னொரு வீதியோரத் தாக்குதலுக்கும், கலைக்கப்படவிருக்கும் கருத்தரங்கிற்கும், கொழுத்தப்படப்போகும் நூலகத்திற்கும், தடைசெய்யப்படும் பத்திரிகைக்கும், வீடுபுகுந்து நடத்தப்படும் இன்னொரு கொலைக்கும் றயாகரனும் பொறுப்புச் சொல்லியே ஆகவேண்டும்.

**கல்வெட்டு ஆக்கியோன் :**

## ஷோபாசக்தி

1) * இந்தக்கவிதை கருப்புப் பெண்கவிஞை நிக்கி கியோவானியால் எழுதப்பட்டது/ தமிழில்: வளர்மதி/ நன்றி : நிறப்பிரிகை

2) சமரில் வெளியாகும் பெயரிடப்படாத கட்டுரைகளுக்கு எப்படி றயாகரனை பொறுப்பாளி ஆக்க முடியும்? என்ற நியாயமான சமுசயம் உங்களுக்கு எழலாம். ' சமரி'ல் பெயரில்லாமல் வெளியான கட்டுரைகள் பி.றயாகரனின் பெயரில் 'புன்னகை' -01லும் 'அம்மா' -07லும் வெளியாகின. தவிர நாமறிந்தவரை 'சமர்' ஆசிரியபீடத்தில் றயாகரனைத் தவிர வேறெவரும் கிடையாது. அப்படி றயாகரனை தவிர்த்து வேறு ஆசிரியர்களும் இருப்பாராயின் ஒட்டுமொத்தமாய் கூண்டோடு கல்வெட்டு பாடவேண்டியதுதான்.

# மனத்துடங்கள்...

## சிவலிங்கம் சிவபாலன்

“பரா! ஆரோ கதவிலை தட்டினம்... போய் பாக்கிறீரே...நான் எழுதிக்கொண்டெல்லே இருக்கிறன்...”

“நீங்கள் படுத்திருங்கோ குஞ்சு... மம்மா கதவைத் திறந்து போட்டுவாறன்.”

“ஓமோம்... வாறன்...”

“புண்ணியம்!!... வாரும் வாரும்.

“நித்திரையோ அக்கா... எட்டு மணியா கேல்லை... அதுக்குள்ளை என்ன நித்திரை.”

“வாடாப்பா... உனக்கென்ன...”

“இதிலை வா... இதிலை வா... இரு”

“நான் உதிலை வந்தால்... நீ இண்டைக்கு எழுதி முடிச்சமாதிரித்தான்”

“இண்டைக்கில்லாட்டி நாளைக்கெண்டாலும் எழுதலாம்”

“...”

“இவ்வளவுநாளும் எங்கை போனனீர் புண்ணியம்”

“இந்த உலகம் விரிஞ்சு இருக்கிறதே... அவன் உலாத்துறதுக் காகத்தான்... நீலா.”

“...என்ன கிண்டலா.. நான் கொஞ்சம் அலுவலா இருந்தனானக்கா.”

“நீங்கள் எப்பிடியிருக்கிறியள்...”

“பாருமன்... நான் பொலிஞ்சு விளைஞ்சு போயிருக்கிறன்.”

“சந்தோசமெண்டால் அப்பி டித்தானக்கா இருக்கும்.”

“சந்தோசமோ... சந்தோசப்பட நேரமெங்கையிருக்கு.”

“...”

“எங்கையடாப்பா இருக்கிறாய்... உன்னைக் காணுறதே கஸ்டமாயிருக்கு.”

“பெரிய மனிசரெண்டால்... அப்பிடித்தான் மச்சான்.”

“இழுத்தனெண்டால் பிறங்கை யாலை...”

“நீர் பெரிய மனிசனா இருந்து காட்டும் புண்ணியம்...”

“கண்டிப்பா அக்கா... இவன் தூணிலுமிருப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பான் துரும்பிலுமிருப்பான்..."

"தண்ணியிலுமிருப்பான்... அதை விட்டிட்டியே."

"ஒரு கிழமை பத்துநாள்... ஒருவனைக் காணேல்லையெண்டால் அவனைத் தேடிப்பாக்கவேணுமெண்ட... எண்ணம்... ம்கூம்..."

"பாக்கத்தான் விருப்பம்... உன்னை எங்கையெண்டு தேடுறது... நீ ஆசுபத்திரியிலையிருப்பாய். பொலிஸ் ரேசனிலை அடைபட்டுக் கிடப்பாய்... எங்கை யெண்டு தேடுறது."

"சரியாய்ச் சொன்னீர் பரா..., புண்ணியம் உமக்கெண்டொரு வீடு குடும்பம் எண்டு நிலையான இடத்திலை இருந்தால் நாங்கள்... தேடிப் பார்க்கலாம்."

"அப்ப நானொரு நாடோடி யெண்டு நினைக்கிறியளக்கா"

"நாங்கள் அப்பிடி நினைக்கா தபோது... நீர் ஏன் அப்பிடி நினைக் கிறீர்."

"ரெண்டு கோப்பி போடும் நீலா."

"எனக்கு... கோப்பி வேண்டா மக்கா... இப்பத்தான்..."

"கண்ணைப் பாக்கவே தெரி யுது"

"நீர் கடுங்கோப்பியாய்ப் போடும்... அதோடை முறியட்டும்."

"உப்புடியே குடிச்சுக் குடிச்சு... உடம்பைக் கெடுக்கப் போறீர் புண்ணியம்."

"இனிக்கெட என்னக்கா... இருக்கு."

"முதல்... ஒரு மனிசனா இருக்கப்பாரும் புண்ணியம்... குடி தப்பில்லை. குடி உம்மைக் குடிக்கிற வரைக்கும்."

"அவனுக்கு ஈரலெரிஞ்சு ரெத்தம் ரெத்தமா சத்தி எடுக்கேக் கைதான் - புத்தி வரும்."

"நீரொரு நண்பனாயிருந்து அவரைத் திருத்திறதை விட்டிட்டு ரெத்தம்... சத்தி... எண்டெல்லாம் சொல்லுறீர் பரா."

"உமக்குத் தெரியாது நீலா... உவன் படிக்கேக்கையே... நான் சொன்னனான் உதுகளெல்லாத்தையும் விட்டிடு எண்டு... கேட்டானே... பந்தயம் புடி கெடுகிறன் எண்டு நிண்டான்."

"இதென்ன அடிச்சுத் திருத்திற வயதா புண்ணியம்... நாளைக்கு எங்களைப்போல நீரும் ஒரு குடும்பமாக வாழவேணுமெல்லே."

"உவனுக்கெல்லாம்... ஒரு குடும்பம். இனிமேல்.... நானும்தான் குடிச்சனான் நீலா... பேந்து எல்லாத்தையும் குறைச்சுக் கொள்ளேல்லையா."

"புண்ணியம் நானும்தான் வைற் வைன் குடிப்பன். பிரண்டி குடிப்பன்... அதுக்காக கண்ணை மூடிக்கொண்டா குடிக்கிறன்."

"நீர் சொல்லுறதெல்லாத்தையும் உவன் கேக்கவா போறான்... உவனொரு புறக்குடம்."

"சொல்லவேண்டியது... என்ரை கடமை... கேக்கிறதும் கேக்காததும் அவரைப் பொறுத்தது."

"கோப்பியைக் குடியும்... நீரும் குடியும் பரா... ஆறப்போகுது.

"இதிலை காவ்வ் (half) நீரும் குடியும் நீலா."

"..."

"மச்சான்... முதல்ல... நீ உன் னைத் தெரிஞ்சு கொள்... நீ யார்..."

"என்ன மச்சான்... என்னைப் பாத்து நீ யார் எண்டுறாய்... நான் தான்... புண்ணியம்"

"விசயத்துக்கு வா மச்சான்."

"முதல் பரா சொல்லுறதைக் கேளும் புண்ணியம்... நீர் சொல்லும் பரா."

"நீ என்ன செய்யிறாய்... உனக்கு என்னென்ன கடமையிருக்கு... உன்னைச் சுற்றி ஆரார் இருக்கினம்... அவையளுக்கு என்னென்ன செய்திருக்கிறாய். அவையள் உன்னை எந்த அளவுக்கு எதிர் பாக்கினம்..."

"பொறு மச்சான் பொறு... பொறு... நான் ஆரையும் என்னை எதிர்பாக்கச் சொல்லேல்லை... ஆரும் என்னை எதிர்பார்க்க வேண்டிய அவசியமும் இல்லை."

"புண்ணியம்... அதுகளின்ரை காசிலை நீர் இங்காலை வந்திட்டு... உப்புடிச் சொல்லுறீர்... உமக்கெண்டு ஒரு கடமையிருக்கு... அதை மறந்திடாதேயும்... நீங்கள் கதைச்சுக்கொண்டிருங்கோ... நான் ..."

"பிள்ளையோடை...இரும் நீலா."

"......."

"நீ... ஒரு இடமும் ஒழுங்கா வேலைக்குப் போறேல்லை.... போனாலும் பொறுமையா வேலை செய்யிறதில்லை... சண்டை.... சேட்டிலை பிடிக்கிறது... உப்புடி யெண்டால்... ஆர் உனக்கு வேலை தருவினம்."

"விருப்பமானவை... தரட்டும்."

"உது விதண்டாவாதம்."

"என்ரை வாழ்க்கையே... சோகமாப் போகுது."

"சோகமே வாழ்க்கையி ல்லை.. புண்ணியம். சந்தோசமும் தான் வாழ்க்கை."

"நீர் உப்புடி நினைச்சுக்கொண் டிருந்தால் அது உம்மடை தப்பு... அறியாமை. வாழ்க்கை எப்பவுமே வெளிச்சம் தான் புண்ணியம்... அதை இருட்டாக்கிறதும் வெளிச்சமாக்கிறதும் அவரவர் கையிலைதான் புண்ணியம் இருக்கு."

"நீங்கள் சொல்லுறதை நான் நம்புறனக்கா... எனக்கு மனது நிறைய சோகம்தானே இருக்கக்கா..."

"அதை உமக்கு... ஆர் தந்தது... நீராகத்தான் சேர்த்தது."

"இப்ப என்னை என்னக்கா செய்யச் சொல்லுறியள்"

"முதல்லை அதிலை இருந்து வெளியாலை வரப்பாரும்... வெளி உலகத்தைப் பாரும்... அதுவின்ரை போக்கிலை நடக்கப் பாரும்... அதுக்குப் பிறகு புண்ணியத்தைப் பாரும். ஒவ்வொரு போராட்டத்துக்குப் பின்னாலையும் ஒவ்வொரு வெற்றி கிடைச்சிருக்கு. ஒவ்வொரு வெற்றிக்குப் பின்னா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

லையும் ஒவ்வொரு தெளிவு கிடைச்சிருக்கு. ஒவ்வொரு தெளிவுக்குப் பின்னாலையும் ஒவ்வொரு நிம்மதி கிடைச் சிருக்கு."

"நிம்மதிக்குப் பின்னாலை யக்கா..."

"புதுப் புதுக் கண்டுபிடிப்புகளையெண்ணி மனது வீரியம் கொள்ளுது."

"ஏறின... அவ்வளவும்... இறங்கிவிட்டுது."

"முதல்படியா... குடியைக் குறையும்... விடச் சொல் லேல்லை... புண்ணியம். அதுக்குப் பிறகு பாரும். உமக்கொரு பாதை தெரியும்."

"நீ என்ன மச்சான் பேசாமலிருக்கிறாய்... பங்குக்கு... நீயும் ஏதேன்... பேசன்."

"பிரியோசனம் இல்லைப் போலை தெரியுது... அதுதான் பேசாமலிருக்கிறன்."

"நீ எப்பிடி மச்சான் இருக் கிறாய்..."

"ஏதோ இருக்கிறன் உன்ரை புண்ணியத் திலை."

"நளினம்... கிண்டல்... எனக்குமொரு காலம் வரும் மச்சான்."

"அது தானா வராது... நீதான் தேடிப் போகவேணும்."

"..."

"உவள் புவனாவைப் பாத்தியா மச்சான்"

"பாத்தன்..."

"எங்கை பாத்தனீ..."

"ஒருக்கால்... சேர்ச்சிலை... ஒருக்கால்... துணிக்கடையிலை."

"தலையெல்லாம் வெட்டி மொட்டா வந்திட்டாள். வெள் ளைக்காரனைக் கட்டியிருக்கிறாள்."

"ஏன்... அதுக்கென்ன... ஆம்பிளையள் கட்டலாம்... அவள் கட்டப்படாதோ..."

"உவளவை உப்புடித்தான் மச்சான்... அவங்களோடை ஆடு மட்டும் ஆடித்திரிஞ்சுபோட்டு ஆத்தாக்கடைசிக்கு எங்களிலை வந்து சேருவாள்."

"ஐயா... ரொம்ப ஒழுக்கமோ".

"அது... நான் ஆம்பிளையடா"

"ஸ்பெசல் லைசென்சோ."

"எங்களையெல்லாம்... அவ ளுக்கு... ஆம்பிளையாத் தெரி யேல்லையாக்கும்."

"எங்களையெண்டு என்னையும் சேர்க்காதை.... உன்னைமட்டும் சொல்லு. அவளுக்கு உன்னை ஒரு ஆம்பிளையாத் தெரியேல்லை. உப்புடி நீ இருக்கிறது உனக்கு விருப்பம் மாதிரி... அப்பிடியிருக்கிறது... அவளுக்கு விருப்பம்."

"அவன் தொடர்ந்தும் அவ ளோடைதானிருப்பானோ மச்சான்."

"புண்ணியம்... அவளுக்கு இல்லாத கவலை உனக்கெதுக்கு... அவளுக்கு அவனிலை நம்பிக்கையிருந்திருக்கு... கட்டியிருக்கிறாள்."

"கட்டியிருக்கேல்லை மச்சான், வைச்சிருக்கிறாள்."

"ஏதோ ஒண்டு... அவளிலை இவ்வளவு கரிசனை வைச்சிருக் கிறியே... நீயே ஏன் அவளைக் கட்டியிருக்கப்படாது."

"தேப்பன் பேர் தெரியாதவளையெல்லாம்... நான்... கட்ட... ஏன்... நீ கட்டியிருக்கப்படாது."

"நான் வந்து உன்னைக் கேட்டனா... அவள் ஏன் மச்சான் வெள்ளையனைக் கட்டியிருக்கிறாள்... அவன் வைச்சிருப்பானா... விட்டிடுவானா எண்டு. அவளைக் கலயாணங்கட்ட ஊரிலை... உன்னையும் என்னையும் சேத்துத்தான் சொல்லுறன். ஆருக்கும் துணிவு வரேல்லை... பேந்தேன் அதைப் பற்றி..."

"கட்டாட்டிலும் மச்சான் வைச்சிருந்திருக்கலாம்..."

"உன்ரை புத்தி உன்னைவிட்டு எங்கை போகப் போகுது."

"ஆர் மச்சான் தேப்பனாயிருக்கும்"

"உன்ரை கொய்யாவாகவும் இருந்திருக்கலாமெல்லே"

"மச்சான்... நீ... எங்கடை குடும்பத்துக்குள்ளை குழப்பத்தை உண்டுபண்ணப் போறாய்... அம்மா இதைக் கேள்விப்பட வேணும்... ஒருவேளை... லோயர் நல்லதம்பியாயிருக்குமோ..."

"நல்லதம்பியற்றை மனிசி இதைக் கேள்விப்பட வேணும்..."

"புவனாவின்ரை தாய் அங்கை தானே மச்சான் கனகாலமாய் வேலை செய்யுது"

"அது வேலை... அதுக்காக... எதையுஞ் சரிவரத் தெரிஞ்சு கொள்ளாமல் கண்டபடி கதைக்கப்படாது மச்சான்...அது எவ்வ ளவு தப்பு தெரியுமோ"

"அப்ப... ஆர் மச்சான தேப பன்."

"ஆராகத்தானிருக்கட்டன்..."

"நாளைக்கு நீ எப்பிடி வாழவேணும் எண்டதைப்பற்றி யோசி. ஊரிலை ஒருவனைக்கட்டிப் போட்டு, அவன் உவளின்ரை பிறப்பைத் தோண்டித் துருவி ஆராய்ஞ்சு கனவிலையும் அவளைத் திட்டித் தீர்க்காமல், எதுவித பிரச்சினையும் தெரியாத, தெரிய விரும்பாத ஒருவனை அவள் புடிச்சிருக்கிறாள்."

"அவனுக்கு உது தெரியவராதோ மச்சான்."

"அவன் அவளைத் தானே கட் டியிருக்கிறான்... தேப்பனையில் லையே... தாயை நடுத் தெருவிலை விட்டவன் ஒரு பெரிய மனிசனாத் தான் நிச்சயம் இருப்பான். தேப்பன் செத்துப்போனார் எண்டு இவள் இவனுக்குச் சொல்லியிருக்கலாம். பிரச்சினை முடிஞ்சுது... பணக்கார வருத்தம் கார்ட் அற்றாக்."

"ஆரோ பெரிய மனிசன் தாயைக் கட்டிறனெண்டு சொல்லி ஆசைவார்த்தை காட்டிப் போட்டு அவளைக் கைகழுவிவிட நாங்க ளெல்லாம் வேடிக்கை பாத்துக் கொண்டிருந்திருக்கிறம்."

"அவள் மச்சான்... புருசன்ரை பேரைச்சொல்லியிருந்தால் நாங்கள் நாலு தட்டுத்தட்டி குழந்தைக்கு ஒரு வகை சொல்லு எண்டு நிண்டிருப்பம்."



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"நீங்கள்... நிண்டிருப்பியள்... அவளின்ரை புருச னிட்டைப்போய் எப்பிடி வைச்சிருந்தாய் எவ்வளவு காலம் வைச்சிருந்தாய் எண்டு விலாவாரியா விசாரித்திருப்பாங்கள், தாங்கள் அவளை எப்பிடி அமத்தியிருக்கலாம் எண்டு யோசிக்கிற சமுதாய மடா இது. நொந்தவனுக்கு மேலை எப்பிடி ஏறி மிதிக்கலாம், கிடக்கிறதை எப்பிடிச் சுருட்டலாம் எண்டுதான் இந்த எளிய சமுதாயம் முதலிலை நினைக்கும்."

" ஊரிலை பெரிய மனிசங்க ளெல்லாம் என்ன மச்சான் செய்தவை."

"நீ... சொன்னியே... இப்ப... அவளை வைச்சிருந்திருக்கலா மெண்டு... அப்பிடித்தான் அவையும் நினைச்சுக்கொண்டிருந் தவை. எல்லாம் தனக்குத் தனக்கு எண்டு வந்தால்தான் தெரியும்."

"என்னக்கா எல்லாம் கேக்குதொ..."

"கேக்குது... கேக்குது... வாழ விரும்புறவனுக்குக் குறுக்கை நிக்கிற சமுதாயம். வாழ விரும்பாதவனுக்குக் கண்ணீர்விடும். சமுதாயம் ஒருக்காலும் ஒருவனையும் வாழவும் விடாது... ஒரு வேளை சோறும் போடாது. கதைக்கவிடு... வெள்ளையாய்க் கதைக்கும்."

"எங்கடை ஊரிலை நீலா... எத்தினை பெரிய மனிசர் பிரபு கள்மாதிரி ஏக்கர் கணக்கிலை நிலபுலன் வைச்சுக்கொண்டும் நரகல்காசுகளைக் குவிச்சு வைச்சுக்கொண்டும் தங்களைத் தாங்களே பெரிசுபடுத்திக்கொண்டும் சீவிச்சுதுகள். பட்டுவேட்டி சால்வை, பத்துவிரலுக்கும் மோதிரம், தொப்புளுக்குக் கீழை பஞ்சாயுதம் கொழுவின சங்கிலி..."

"அதெல்லாம் அவனவன் கஸ்டப்பட்டுத் தேடின சொத்தாயிருக்கும் மச்சான்."

"கஸ்டப்பட்டு ஏழையளைச் சுரண்டினதுகள் எண்டு சொல்லு. வயித்துப் பசியைச் சாட்டாகவும் குடியிருக்க கொட்டிலுக்காகவும் கூலிக்கு வேலை செய்யப்பண்ணி தங்கடை வாழ்க்கை வருமானத்தைப் பெருக்கிய பாக்கியசாலியள். ஒவ்வொருவருக்குப் பின்னாலையும் பெரிய அதர்ம சங்கிலியள் இருக்கும். அது கோர்வையா எத்தனையோ குடும்பங்களின்ரை பெருமூச்சாகத்தான் இருக்கும். அப்பிடிப்பட்டவங்கள் அநாதரவாக் கையிலை குழந்தை யோடை ஒருத்தி வாறா ளெண்டவுடனே இரங்கிவிடுவாங்கள். பரதேசிப்பயலுகள். அந்தநேரம் ஆருக்கு ஒரு இரக்க சிந்தனை.... மானசீகமா மனிதாபிமானமா சிந்திச்சாங்களா எச்சில் கையாலை காகம் துரத்தாத நாய்ச்சாதியடா உவங்கள்."

"எட நாயையும் மனிசனையும் போய் ஒப்பிடுகிறியே... நீ சொன் னது மட்டும் நாய்க்கு விளங் கிச்சுது.:. மவனே நீ செத்தாய். நாயிலை பல சாதியள் இருக்கு. அது எப்ப சாதிப்பேர் சொல்லி மற்ற நாயளை விலக்கி வைச்சது."

"காணி உறுதியளை வேண் டிக்கொண்டு அறா வட்டிக்குக் காசு குடுத்தது, குறிச்ச தவணயிலை மீளமுடியாட்டி காணி அறுதியெண்டு எழுதிவேண்டினது, ஏஜென்சி நடத்திறனெண்டு சொல்லி பாங்கொக்கிலையும் மாஸ்கோவிலையும் சொந்த ரெத்தத்தையே நட்டை நடுவழியிலை தவிக்க வைச்சது..."

"வைரமுத்து தொடக்கிவைச்ச கவிதையை நீ கொண்டிழுக்கிறியாக்கும்..."

"உங்கடை கவிதை வாசிச்சனக்கா."

விழிகளிரண்டும் மூடவில்லை,<br>
ரணங்கள் முடியாயாறவில்லை,<br>
இதயம் வலியால் உழலவில்லை,<br>
இறுகிய கரங்களை<br>
ஏந்திய மனிதத்தின்<br>
பிந்திய மகளிவள்<br>
மரணத்தின் கோலமாய்...

"ஒவ்வொரு மனிதன்ரை உடம் பிலையுமிருந்து வெளியேறுற வெப்பத்தின்ரை ஒவ்வொருடிக்கிரியும் ஒவ்வொரு கவிதைத் துளிதான் புண்ணியம். அதனாலை மனிதனுக்குக் கிடைக்கிற நெருக்குவார உராய்வு விகிதம்தான் அந்த வெப்பம்."

"நீங்களோ... நானோ நினைச்சாலும் உந்த உக்கிரங்களை நிறுத்தேலாதக்கா."

"புண்ணியம்... எதையும்... ஆர் மேலையும் திணிக்கேலாது... ஆனால் இதே திணிப்புக்குள்ளை சிக்கித் தவிக்கிறானே அவனுக்கு இது ஒரு நெம்புகோலாயிருக்குமெல்லே... அவன் விரும்பினால் தன்னைச் சுற்றியிருக்கிற போலியளை இனங்கண்டு விலக்கிக்கொள்ளலா மெல்லே."

"நீ மச்சான்... நாரி உழைய இருந்து உதையெல்லாம் எழுதுறாய்..."

"உதாலை என்ன பிரியோசனம் எண்டு கேக்கப் போறாய்."

"அதுதான்..."

"ஒரு வழியிலை பார்த்தால்... நீயும் நானும் இந்த உலகத்திலை வாழுகிறதுகூட பிரியோசன மில்லைத்தான்... நான் பாத்த... அறிஞ்சு உணர்ந்த சிலதுகளைத் தோலுரிச்சுக் காட்டுறன்... அது ஆராவது ஒருவனுக்குப் பிரியோசனப்படும்... அதுமாதிரி... இதே மிலேச்சத்தனங்களை இன்னொருவன் சுட்டிக்காட்டேக்கை... நானும் இந்த சமுதாய வெத்து வேட்டுக்களை இனங் காணலாமெல்லே... என்னைத் திருத்திக் கொள்ள லாமெல்லே."

"பரா நீர் ஏதோ... உபதேசிக்கிறீர் எண்டு புண்ணியம் நினைக்கப் போறார்..."

"உபதேசத்திலை ஞானம் கிடைக்கலா மக்கா... நாலு விசயத்தைக் கதைக்கேக்கை... மன திலை ஒரு கேள்வி பிறக்குமக்கா. நாங்கள் திருந்தாமல் சுற்றம் திருந்தாது."

"குட்டக் குட்டக் குனியிறவன் மடயன்தான். ஆனால் குனியக் குனியக் குட்டிறவன் மடயனி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ல்லை. அவன் புத்திசாலி."

"என்ன மச்சான் பழமொழி யையே... மாத்திறாய்."

"நீ குனியிறபடியாலைதானே அவன் உன்னைக் குட்டுறான்... ஒரேயொரு... ஒரேயொரு எழும்பு எழும்பி அவனைக் குட்டிப்பார். அவன் ஆணிவேரே அசைஞ்சு போகும். நாங்கள் குட்டமாட்டம் எண்டிறது அவனுக்கு நல்லாத் தெரியும் புண்ணியம். அதாலை தான் அவன் எங்களைச் சுரண்டிக் கொண்டே இருக்கிறான்."

"நாங்கள் சுரண்டப்படுகிறம்... சுரண்டப்படுகிறம்... எண்டு சதா காலமும் சொல்லிக்கொண்டிருக்கிறமே தவிர... அதை எதிர்த்து எந்த நடவடிக்கையிலையும் ஈடுபடேல்லை புண்ணியம்...."

"உண்மைதானக்கா... மற்றவனின்ரை காலைக் கழுவி சுத்தம் பாத்திருக்கிறம்... எங்கடை முதுகிலை ஒட்டியிருக்கிற ஊத்தையைக் கண்டுங்காணாமலும் விட்டிருக்கிறம்."

"உனக்கும்... இடைக்கிடை விளங்குது..."

"அரசியலையும் அந்தரங்கத்தையும் உரசி உரசிக் கதைக்கலாம் மச்சான்... விடிஞ்சாலும் தீர்வுமட்டும் பிறக்காது... நேரமாச்சு... நான் வரப்போறன்... வேறை என்னக்கா..."

"உம்மோடை.... பரா இவ்வளவு நேரமும் கதைச் சதைப்பற்றிக் கோவமேதுமில்லையே புண்ணியம்..."

"என்ன கோவமக்கா... நானு மவனும் பள்ளிக்கூடத்திலை கரை வாங்குக்கு அடிபட்டிருக்கிறம்... கரைப்பாணுக்கு அடிபட் டிருக்கிறம்... ஏன் நான் பள்ளிக் கூடத்துக்குப் போயிருக்கிற னெண்டு சொல்லுறத்துக்குப் பரா ஒருவனே சாட்சி... அவனோடை கோவிச்சால்."

"பேந்து சாட்சிக்கு ஆரைப் புடிக்கிறது... என்னடா புண்ணியம்..."

"வந்தன்... சந்தித்தன்... கதைச்சன்... சந்தோசம்...."

"காலம் வலுவேகமாகப் போகுது புண்ணியம்... ஒவ்வொரு நிமிசத்தையும் வீணாக்கப்படாது. காலம் எங்களுக்குப் பின்னாலை வராது... நாங்கள்தான் காலத்தைக் குறிச்சு ஓடவேணும்."

"கண்டிப்பா... அக்கா...."

"மனிசன் சந்திரனுக்குப் போனவன். செவ்வாய்க்குப் போட்டான்... நாங்கள் செக்கிழுக்கிற மாடுமாதிரி ஒண்டையே சுத்திச் சுத்தி வாறம்."

"பூமியிலை மனிசனுக்குக் குடுக்கிற துன்பம் பத்தாதெண்டு சந்திரன் செவ்வாய் வியாழன் எண்டு..."

"புண்ணியம்!!... அடுத்தமுறை உன்னை நான் சந்திக்கேக்கை நீயொரு மனிசனா எனக்குத் தெரியவேணும்... தேவையில்லாததை யோசிக்கிறதை விட்டிட்டு... தேவையானதைப்பற்றி யோசி."

"... புவனா இங்சை வாறத்துக்கு ஆர் மச்சான் காசு குடுத்திருப்பாங்கள்..." ■

# பாரிஸ் நிகழ்வுகளிலிருந்து கலைவண்ணம் - 98

## எம். ஆர். ஸ்ராலின்

திருமறைக்கலாமன்றம் ஓர் வெறும் கத்தோலிக்க அமைப்பு மட்டுந்தான் என்று எம்மை ஒதுங்கிக் கொள்ளவிடாது இலங்கை தொடக்கம் இலங்கைத் தமிழர் புலம்பெயர்ந்து வாழும் கனடா, ஐரோப்பா என்று பலநாடுகளிலும் "கலை வழி இறைபணி" செய்துகொண்டிருக்கும் அடிகளார் மரியசேவியர் அவர்களும் அவர்தம் தொண்டர்களும் எம்மை அருட்டிக்கொண்டேயிருக்கின்றனர் தம் கலைப்பயணங்கள் மூலம். இவ்வாறாக எம் தமிழர்களின் உண்மைக் கலைவடிவங்களிலொன்றான நாட்டுக்கூத்தும் அதைச்சார்ந்த இசைவடிவங்களும் பற்றிய ஞானம் நிறைந்த திருமறைக்கலா மன்ற நடிகர் குழாத்தினர் கடந்த 27/09/98 அன்று பாரிஸில் ஓர் கலைநிகழ்வொன்றை அடிகளார் மேற்பார்வையில் நடத்திமுடித்தனர்.

கடந்தவருடமும் இதே காலப்பகுதியில் ஓர் கலை நிகழ்வு இதே மன்றத்திரையில். கவிச்சக்கரவர்த்தி கம்பன் தொடக்கம் சிலப்பதிகாரம் தந்த இளங்கோ வரை அரங்கில் கொண்டுவந்து நிறுத்தி அவர்கள் சொன்ன பெண்மையை, இன்றுவரை எம் பெண்களை ஆண்டுகொண்டிருக்கும் கருத்தியல்களை, ஆணாதிக்க சமூகத்தின் அடிக்கட்டுமானங்களை, அசைக்கத்துணிந்த அடிகளார் இன்று மனுநீதிக்குள் மடிந்து ஒற்றைப்பனைக்குள் ஒளிந்து கொள்ள முயன்றார் என்றால் எங்களால் நம்ப முடியவில்லை. ஏனெனில் இவ்வருடம் நாங்கள் எதிர்பார்த்திருந்தது உலகமெல்லாம் மொழிபெயர்க்கப்பட்டு தன்கொடிய கரங்களால் பெண்களின் குரல்வளைகளை நெரித்து மூடக்கருத்துகளுக்கெல்லாம் மூலதனமாய் விளங்கும் 'புனித' வேதாகமத்தையல்லவா சபைக்குக் கொண்டுவருவாரென. ஏமாற்றம் மட்டுமல்ல எரிச்சலாயும் போனது எமக்கு.

### சகுந்தலை

அரசகுடும்பங்களின் இன்ப விளையாடல்களில் இதுவும் ஒன்று. ரிஷியொருவனின் வளர்ப்பு மகள் சகுந்தலைக்கும் இளவரசனொருவனுக்கும் நடந்த காதலும் ஊடலும் இறுதியில் கைபிடிப்பதுவாய் மாறி இன்றுவரை....

இதன் ஓரப்பாத்திரங்களாய் வந்துபோகும் மீனவப்பாட்டாளிகளின் ஏழ்மைபற்றியோ அவர்கள் சார்ந்த பிரச்சனைகள் பற்றியோ பெரிதாய்க்குறிப்பிடாமல் மீனவனொருவன் அப்பாவித்தனமாக கண்டெடுத்த அரசமுத்திரையிட்ட மோதிரத்தினை அரசனிடம் ஒப்படைப்பதாய் செதுக்கப்பட்டிருக்கின்ற இக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காப்பியம் இப்படித்தான் மன்னருக்குட்பட்ட மக்கள் அனைவரும் வாழவேண்டும் என்ற சிந்தனையுருவை மக்கள் மனதில் புகுத்தும் விளையாட்டு.

இதுபோன்ற மன்னராட்சி/ நிலப்பிரவுத்துவ ஆட்சிமுறைக்கு நியாயம் கற்பித்து கொண்டிருக்கும் இலக்கியப்படைப்புக்கள் இன்றும் மீள மீள மேடையேற்றப்படுவதென்பது இன்றைய காலகட்டத்தின் எவ்வகைத் தேவையை நாடிநிற்கின்றது என்பது புரியவில்லை. அதுமட்டுமன்றி மேடையில் அரச உரையாடல்கள் மட்டும் சீரியஸ் தன்மையாக்கப்பட்டு காட்டப்படுவதோடு மீனவர்களின் வாழ்க்கை முறையில் அது இல்லாத மாதிரியும் அவர்கள் ஏதோ கோமாளிகள் என்பதாகவும் அவர்களின் உரையாடலை நகைச்சுவையாக்கி மனிதன் என்கின்ற பார்வையிலிருந்து கீழாக இறக்கி வெறும் பூச்சாண்டிகளாய் காட்டுகின்ற போக்குகளை அவதானிக்கக் கூடியதாயிருந்தது. இது அந்தக்கால தமிழ் சினிமாவின் கிருஷ்ணன் - மதுரம் பாணி சிந்தனைப் போக்குகளுடன் ஒப்பிட்டு நோக்கத் தக்கது.

கூடவே நாடகத்தில் நிறைந்து கிடக்கின்ற கற்பு, பாதகி, பரத்தை என்றவாறான பெண்களை இழிவுபடுத்தும் சொற்களும் அவற்றைப்பேணும் கதையம்சங்களும் எவ்வித கவனமுமின்றி கையாளப்பட்டிருப்பது விசனத்திற்குரியது.

### மனுநீதி

இந்திய இருடிகளின் முதன்மை பெற்றவனான மனு என்போன் ஆக்கிவைத்த நெறிமுறைகள் தொடர்ந்து வந்த மன்னர்களின் யாப்பாகிப்போன கொடுமை. ஆரியர்களின் மாயை இந்துமதத்தின் சிகரங்களாகி அச்சிகரத்தினைத் தாங்கும் ஒவ்வோர் அத்திவாரமாய் அன்றைய இதிகாசங்கள் தொடக்கம் இன்றைய இலக்கியங்கள் வரை அவற்றையே பேணிக்காக்கும் ஊடகங்களாய் நாம் ஒவ்வொருவரும் எம்சமூகத்தினை 'கட்டி' காத்து வருகின்றோம். இவ்வகையில்தான் சுமார் ஆயிரம் வருடங்களுக்கு முன் தமிழகத்தின் சோழநாட்டினை யாண்ட மனுநீதிசோழன் காரணப்பெயர் பெற்றான். மனுஷ்மிருதியின் நெறிமுறைகளுக்கு உட்பட்டு ஆட்சி செலுத்தியதற்காய் . கோமாதா அதாவது 'கோ'என்பது அரசன் மாதா என்பது அன்னை அன்னையருக்கெல்லாம் அரசனாகிய புனித இடத்தில் வைத்து பேணப்பட்டது பசு. பசுவை கொல்லுதல் மரணதண்டனைக்குரியதாய் காணப்பட்டது.

"ஆதிமனு வகுத்த நீதிநெறி பிறழா மாமன்னவன் நானே" என்று அடிகளாரின் மேடையில் சூளுரைக்கும் அந்த சோழன் பசுவைக் கொன்ற தன்மகனை கொல்கின்றான். இந்த இத்துப்போன கதையை தூசுதட்டி இன்று மேடையேற்றவேண்டியதன் பின்னணியாது?

நீதி, ஒழுங்கு, சட்டநெறிகள், அரசு, அதிகாரம் இவையனைத்தும் கேள்விக்குட்படும் காலமிது. மாறாக இவ்வாரிய மாயையின் அடிவருடிகள் இருக்கும்வரைதான் அவர்களால் கொண்டுவரப்பட்ட சாதியம் காக்கப்படும், பெண்கள் அடுப்புக்குள்ளே முடக்கப்படுவார்கள், அடுத்த ஜென்மத்தை எண்ணிக்கொண்டே அடிமட்ட ஏழைகள் காலத்தை ஓட்டுவார்கள்.

### கலைப்பெட்டகம்

"இந்நிகழ்ச்சி நாட்டில் நடக்கும் சில நிகழ்வுகளை உங்களுக்கு நினைவுபடுத்தலாம்"

இது நிகழ்வின் ஆரம்பத்தில் அடிகளாரின் கருத்துரை. விரிந்தது திரை. ஒற்றைப்பனை வெகு தொலைவில் தெரிய அரங்கின் ஓர் விளிம்பு மூலையில் யாழ்பாடி ஒருவன். எடுத்த எடுப்பிலேயே நாட்டில் (யாழ்ப்பாணத்தில்) கொண்டுபோய் நிறுத்திவிடும் உத்தி சிறப்பானதுதான். கலைப்பெட்டகமொன்றினை தாங்கி ஆடிப்பாடும் மக்கள் கூட்டம். அது கொடியவனொருவனால் அழிக்கப்பட்ட போது...

"எங்களின் வாழ்வு சிதைக்கப்பட்டதே"

"எங்களின் வாழ்வு கொழுத்தப்பட்டதே"

கலைப்பெட்டகத்தை தமிழர்களின் சமூக, பொருளாதார, பண்பாட்டு, விழுமியங்களையும் அதை அடித்து நொருக்கும் அரக்கனாய் இலங்கையரசின் படைகளையும் குறியிட்டு கதையை நகர்த்தி இடையே இந்தியாவின் குறியீடாக கண்ணனை அழைத்து வந்து அவன் உதவுவதும் பின்பு அவனே ஆள நினைப்பதுவுமாய் தொடர்கிறது கதை.

போராட்டம் தொடர அரசை நம்பிய ஏனைய கட்சிகள் நாய்களாய், தனித்துப் போராடுவது புலிகள் மட்டுமே, யாழ்வெளியேற்றத்தில் பாதிக்கப்பட்டது தமிழர்களே என்றவாறாகக் கதை முடிகிறது

இறுதியில் எல்லோரும் ஒன்றாகாமல் போராட்டமில்லை. நீங்களும் வாருங்கள் என்பதாக புலம்பெயர்ந்த தமிழர்களுக்கு அழைப்புவிட்டு ஒற்றுமை கீதத்தோடு மங்களம் பாடி முடிகிறது கதை.

இந்நிகழ்வுகளில் இருந்து நாம் சிலமுடிவுகளுக்கு வருவதற்கு நிர்ப்பந்திக்கப்படுகிறோம்.

1- யுத்தம் நிகழ்ந்து கொண்டிருப்பது யாழ்குடாவில் மட்டுமே.

2- புலிகள் மட்டுமே சரியான அரசியல் நடத்துகிறார்கள்.

3- துரத்தப்பட்ட போராளிகளுக்கு அடிகளார் உயிர் உத்தரவாதம் கொடுப்பார். எல்லோரும் நாட்டுக்குத் திரும்பலாம்.

4- யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியேறிய தமிழர்கள் மட்டுமே கொடுமைஅனுபவித்தவர்கள். மாறாக யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் மனிதர்களேயல்ல.

இவ்வளவு ஆக்ரோசமாய் அரசியல் கதைக்கக் கிளம்பிவிட்ட அடிகளாருக்காய் சிலகுறிப்புக்கள்:-

● பனைமரமும் யாழும் தனியவே யாழ்ப்பாணத்திற்கு மட்டுமேயான அடையாளங்களாகும். மாறாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கிழக்கு, வடக்கு என்று இருமாகாணங்களில் யுத்தம் நடந்துகொண்டிருப்பதுவும் இவற்றில் முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை என்று பல மாவட்டங்கள் இதில் உள்ளடங்கும் என்பதுவும் நாம் அடிகளாருக்கு கற்றுக்கொடுக்கவேண்டிய நிலையிலிருப்பது துரதிர்ஷ்டமே. இவற்றையெல்லாம் வெறும் பனைமரத்துக்குள் மறைத்துவிடுகின்ற போக்கு MADE IN JAFFNA என்ற பெருங்கதையாடலுக்குள் கொண்டு சேர்ப்பதாகும்.

● புலிகளால் ஏனைய இயக்கங்கள் தடைசெய்யப்பட்டபோது கொலைசெய்யப்பட்டவர்களின் முக்கால்வாசிக்கும் மேற்பட்டோர் ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்தவர்களே.(கந்தன்கருணை படுகொலை)

● திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களினாலும் ஊர்காவற் படையினராலும் தினம்தினம் துன்பமனுபவித்துக் கொண்டிருக்கும் எல்லைக்கிராமங்கள் அனைத்துமே யாழ்ப்பாணத்திற்கு வெளியேயுள்ள ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்தவையே.

● தமிழ்த் தீவிரவாதம் யாழ்ப்பாணத்திலே சூடு பிடித்திருந்தாலும் இன்று புலிகளுக்கு நிறைந்த ஆளணிகளைத் தந்து கொண்டிருப்பது இயல்பிலேயே போராட்டக் குணாம்சம்மிக்க விவசாயப் பாட்டாளிகளைத் தன்னகத்தே கொண்டிருக்கும் கிழக்கு மாகாணமேயாகும்.

● யாழ்ப்பாணத்திலிருந்து தளமில்லாதாக்கப்பட்ட புலிகளுக்கு இன்று பொருளாதார, இராணுவ கேந்திர நிலையமாக மாறிக்கொண்டிருப்பவை முல்லைக்காடுகளும், கிழக்கின் வடமுனைப் பிரதேசங்களுமேயாகும்.

● வடகிழக்கின் சனத்தொகைப்பரம்பலில் மூன்றில் இரண்டு பங்கினர் யாழ்மாவட்டத்திற்கு வெளியே வாழ்ந்து வருகின்றனர்.

இவ்வாறான பல்வேறுபட்ட வெட்டவெளிச்சங்கள் எதையுமேயறியாத அடிகளாரால் கொழும்புக் குழுக்களின் உருவாக்கத்தை யாழ்வெளியேற்றத்தின் பின்னர்தான் என்பதாக வரலாற்றைத் திரித்தும், முஸ்லிம்களின் வெளியேற்றத்தைக் கண்டு கொள்ளாதவாறு வரலாற்றை மறைத்தும், யாழ் மேலாதிக்கத்தைத் திணித்தும் பிரதேசவாதம் பேசவும் மட்டுமே முடியும்.

நிறைந்த திறமைபெற்ற நடிகர் குழு அடிகளாரின் அர்த்தமற்ற கலை நிகழ்வுகளுக்கு இங்கே அநாவசியமாக பயன்படுத்தப்படுகின்றது. இவர்களையெல்லாம் வெறும் பாவனைப்பொருட்களாக்குவதன் மூலம் அவர்களது உழைப்பு முழுவதும் எந்தவொரு சமூக முன்னேற்றத்திற்கும் பயன்படுத்தப்படாமல் செய்யப்படுவதோடு மறுதலையாக அவர்களினது வாழ்க்கை முறையை மென்மேலும் சிக்கலாக்கும். இருக்கின்ற கொடிய இச்சமூகத்தை அப்படியே காத்துக்கொள்ள மட்டுமே பயன்படுகிறது.

எங்களுக்கும் யாரிடம் எதை எதிர்பார்ப்பது என்று விவஸ்தையில்லாமல் போகுதோ தெரியவில்லை. நாடக விளம்பர பிரசுரங்களில் குழுவிலிருக்கும் நடிகைகளின் பெயர்களை கடைசி வரிகளிலிருந்து இன்னும் அசைக்கமுடியாத அடிகளாரிடம் நாம் எதையெதையெல்லாமோ எதிர்பார்க்கக் கூடாதுதானே. குறைந்த பட்சம் அடுத்தமுறை இது பற்றியாவது அடிகளாரின் கவனத்திற்கு அவருடன் தொடர்புடைய திருமறைக்கலாமன்றத்தின் ஞான ஸ்நானம் பெறா பாரிஸ் தொண்டர்கள் வாய்திறப்பார்களா?.

"நீதிமான் தன் நீதியைவிட்டு விலகி, அநீதி செய்து, துன்மார்க்கன் செய்கிற சகல அருவருப்புகளின்படியும் செய்வானேயாகில், அவன் பிழைப்பானோ? அவன் செய்த அவனுடைய எல்லா நீதிகளும் நினைக்கப்படுவதில்லை. அவன் செய்த தன் துரோகத்திலேயும் அவன் செய்த தன் பாவத்திலேயும் சாவான்." (எசேக்கியேல்-18:24) ■




ஓவியம்: KAVITA SHAH
'எல்லாமே பிழையாகிப் போனபின்', 1990
LITHOGRAPH (18.5"x 25.5")
'நன்றி': SPARROW



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யாரும் உறங்கியிராப் பொழுதொன்றில்
மின்னல் பொறி பறக்க
எரிந்து விழுந்தது ஒரு கோவணம்.

தன்னுடையது என்று
யாரும் சொன்னாரில்லை.
நலிவது என்றும் சொன்னாரில்லை.
வேண்டாம் என்றும் சொன்னாரில்லை.
ஒருத்தரேனும் எதையேனும் கூறும் வரையிலும்
காத்துக் கிடக்கின்றனர் வாய்மூடி.
சுத்தம்.

பொய் சொல்லு.
சொல்லி மீளவும் ஒன்றாய் மாற்றி
இன்னும் சொல்லு.
இல்லை எனில் நக்கு.
நாக்கு இடிய நக்கு.
~~தோலும் பீயும் சுவை தெரியாது.~~
சுலபம்.
~~மூளையைக் கிடுட்டி நாக்கில் மாத்து.~~
கவனம்.
கோவணம் உனதென்றும், நலிவது என்றும், வேண்டாம் என்றும்
எதையும் அறுதியிட்டு சொல்லாது
கிடந்து உழலு.
ஒன்று மாற்றி ஒன்றாய்
எதையாவது பிசத்து.

3107998

இக்கவிதை ஓர் இலக்கியப் பிரமுகரின் வாசிப்பிற்கு கொடுக்கப்பட்டு, அவரால் வரிகள் வெட்டப்பட்டு, பின் முற்றாகக் கிழித்தெறியப்பட்டது.

EXIL, chez R. INPAVALLI, 94 Rue de Lachapelle, 75018 PARIS, FRANCE
N° d'enreg. : 13022670

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்